Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 17 வியாழக்கிழமை (01-07-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:219

# எப்போது பேச்சு என்று எதிர்வு கூற முடியாது!

## தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபின் எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு



கிளிநொச்சி,ஜூலை1

**சமாதான முன்னெடுப்பு மிகக் கடுமையான பணி. சிரத்தையுடன் அதை முன்னெடுத்து வருகின்றோம். ஆனால், இன்றுள்ள நிலையில் சமாதானப் பேச்சுக்கள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்று இப்போது எதிர்வுகூறமுடியாது.**

**- இவ்வாறு தெரிவித்தார் இலங்கை சமாதான முயற்சிகளில் அனுசரணைப்பணியாற்றிவரும் நோர்வேக்குழுவின் பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம். நேற்று முற்பகல் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப்பேசிய பின்னரே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.**

நேற்றுக்காலை 10.30 மணிக்கு விசேட ஹெலிக்கொப்டரில் நோர்வேத தூதுவர் ஹன்ஸ்பிரட்ஸ்கர் சகிதம் கிளிநொச்சிக்கு வந்த எரிக் சொல்ஹெய்ம், கிளிநொச்சியில் புலிகளின் அரசியல்துறை நடுவப்பணியகத்தில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர், பா.நடேசன் ஆகியோரை முற்பகல 11.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை சந்தித்துப்பேசினார்.

நேற்று அந்தச் சந்திப்பின் பின்னர் எரிக்சொல்ஹெய்ம் செய்தியாளர்களிடம தெரிவித்ததாவது:-

சமாதான முன்னெடுப்பு கடுமையான வேலை. சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன தொடர்ந்து பேசிவருகின்றோம். இன்று தமிழ்ச் செல்வனுடனும் பேசினோம். நேற்று (செவ்வாயன்று) வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் அரச பிரதிநிதிகளுடன் பேசினோம். நேற்றிரவு ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேசினோம்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கான சூழலை உருவாக்குவது அரசின் கைகளில்தான் தங்கியுள்ளது



நேற்றுக் கிளிநொச்சியில் நோர்வே அனுசரணைக்குழுவினரைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டி

"சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது அரசின் கைகளில்தான் தங்கியுள்ளது.

"பேச்சுக்களைத் தொடங்குவதற்கான சூழலை உருவாக்குவது அரசின் பொறுப்பு".

- இப்படிக் கூறியுள்ளார் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன். நேற்றுக் கிளிநொச்சியில் நோர்வே அனுசரணைக்குழுவினரைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே, அவர் இப்படிக்கூறினார். அந்தப் பேட்டியின் விவரம் வருமாறு:-

*கேள்வி:* இன்றைய பேச்சுக்களில் ஆராயப்பட்ட முக்கிய விடயங்கள் என்ன?

*பதில்:* இன்றுள்ள நிலைமைகள் தொடர்பாக அனுசரணையாளர் என்ற வகையில் நோர்வேத்தரப்புக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

அண்மைக்காலமாக மட்டு - அம்பாறை மாவட்டங்களில் இடம்பெறும் சம்பவங்கள் குறித்தும் கருணாவுக்கு படைத்தரப்பு அடைக்கலம் கொடுத்து, கருணாவை வைத்துப்பல குழப்பங்களை ஏற்படுத்துவது குறித்தும் தெளிவாகக் கூறியுள்ளோம்.

ஜனாதிபதியும், அரசும் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதில் ஆர்வமாக இருந்தால், கருணாவை வைத்துக்கொண்டு சமாதான முன்னெடுப்புக்கும் யுத்த நிறுதத் சூழலுக்கும் குந்தகம் விளைவிக்கும் காரியங்களைத் தவிர்க்கவேண்டும். இதனை (02ஆம் பக்கம் பார்க்க)

## நயினையில் இன்று தேர்

யாழ்ப்பாணம்,ஜூலை1

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத் தேர்திருவிழா இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

முன்னதாக, தம்பபூசை, வசந்த மண்டபப் பூசை என்பன நடைபெற்றுத் தொடர்ந்து அம்பாள் தேரில் ஆரோகணித்து வெளிவீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறும்.

தேர், தீர்த்தத் திருவிழாக்களை (14ஆம் பக்கம் பார்க்க)

## பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் காலக்கெடு நாளையுடன் முடிவு!

கொழும்பு,ஜூலை1

"ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களில் பத்தாயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவோம் என அரசு கொடுத்த வாக்குறுதிப்படி மூன்று மாதக் காலக்கெடு நாளையுடன் முடிவடைகிறது.

"அந்த வாக்குறுதியின்படி நாளைக்கு முன் வேலைவாய்ப்பு வழங்கப்படாவிட்டால் பட்டதாரிகளை அணிதிரட்டி அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவோம்"

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் உயர்கல்வி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கபீர் ஹாசிம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

(14ஆம் பக்கம் பார்க்க)

## வேலை வழங்கும் திட்டம் ஒருபோதும் ரத்தாகாது!

### அடித்துக்கூறுகிறார் பிரதி நிதியமைச்சர்

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுக்கும் அரசின் திட்டம் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட, சீரான திட்டம். எனவே, அது ஒருபோதும் ரத்துச் செய்யப்படமாட்டாது என்று அரசு அறிவித்துள்ளது.

இத்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுவதனை விரும்பாத சிலர் மேற்கொள்ளும் பிரசாரத்தில் எதுவித உண்மையும் இலலை என நிதித்துறை பிரதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்திருக்கிறார்.

கடந்த ஏப்ரல் மாதம், அமைச்சரவைப் பத்திரத்தின் ஊடாக அங்கீகாரமளிக்கப்பட்ட வேலை வாய்ப்புத் திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. விண்ணப்பதாரிகள் வேறு தொழில் செய்கிறார்கள் என்பதை கண்டறிவதற்காக அவர்களிடமிருந்து உறுதிமொழிகளை பெறும் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்படுகிறது - என்று கூறினார். (எ-9)

## சகல அரச ஊழியர்களுக்கும் ஜனவரியில் சம்பள உயர்வாம்!

கொழும்பு,ஜூலை1

பொலீஸார் உள்ளிட்ட சகல அரச ஊழியர்களின் சம்பளம் அடுத்த ஜனவரி முதல் அதிகரிக்கப்படும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கின்றார்.

மூவாயிரம் பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். இந்த நிகழ்வு நேற்று புதன் கிழமை மாலை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. பொலீஸ் சேவை மேம்பட வேண்டுமானால் பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு சம்பள அதிகரிப்பை பெற்றுக்கொடுத்து பதவி உயர்வுகளை வழங்க வேண்டும். பொருளாதார அபிவிருத்தியை நாடும்நாட்டுக்கு நேர்மையான - செயல்திறன் மிக்க - பொலீஸ் படையணி பெரும் வலுவாக அமையும் - அரசியல் பேதங்களுக்கு அப்பால் பட்டு பொலீஸ் திணைக்களம் சேவையாற்றவேண்டும் - என்று ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார். (எ-9-8)

## கருணாவைப் பகடைக்காயாக்கி ஜனாதிபதி சந்திரிகா சூதாட்டம்!

### குற்றம் சுமத்துகின்றது ஐ.தே.கட்சி

தனது பங்காளிக்கட்சிகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்கு தீர்வுகாண முடியாத அரசு கருணாவை பகடைக்காயாகப் பயன்படுத்தி புதிய சூதாட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

- இவ்வாறு குற்றம் சாட்டுகின்றார் ஐக்கிய தேசியக்கட்சி துணைப்பொதுச செயலாளர் திஸ்ஸ அத்தனாயக்க.

நேற்றுக்காலை ஐ.தே.க. தலைமையகமான ஸ்ரீகோத்தாவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

"ஜனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதுபோல பம்மாத்துக் காட்டுகின்றார். நாட்டு மக்களை மட்டுமன்றி நோர்வே அனுசரணையாளர்களையும் அவர் ஏமாற்றிவருகின்றார்.

"உள்வீட்டுச் சிக்கல்களைத தீர்க்க முடியாத அரசாங்கம் இப்போது தமிழ் மக்களால் ஓரங்கட்டப்பட்டுள்ள கருணாவை வைத்துக்கொண்டு புதிய சூதாட்டத்தில் இறங்கி மக்களைத் திசை திருப்ப முனைகின்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்த சமாதான முயற்சிகள் குழம்பினால் விபரீத விளைவுகளைச் சந்திக்க நேரிடும்

### ஓய்வு பெற்றுச்செல்லும் பலகல்ல எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை1

விடுதலைப் புலிகளுடன் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்து பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காணப்படல்வேண்டும். இந்த சமாதான முயற்சிகள் குழப்பியடிக்கப்பட்டால் பாரிய விளைவுகளையே சந்திக்க நேரிடும்.

இப்படி எச்சரிக்கை விடுத்தார் நேற்று ஓய்வுபெற்றுச் சென்ற இராணுவத் தளபதியும், முப்படைகள் மற்றும் பொலஸாரின் சிரேஷ்ட அதிகாரியுமான லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல.

அவர் ஓய்வுபெற்றுச் செல்வதையொட்டி நேற்று இராணுவத் தலைமையகத்திலும், முப்படைகள் கூட்டுத் தலைமையகத்திலும் அணிவகுப்பு மரியாதை செலுத்தப்பட்டு, பிரியாவிடை வைபவமும் நடைபெற்றது.

இதன் பின்னர், செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த லயனல் பலகல்ல

(14ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவத் தளபதியாக கோட்டேகொட பதவியேற்பு

ஜனாதிபதியால் புதிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள சாந்த கோட்டேகொட இன்று முதல் தனது

(14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் வங்கி

PEOPLES BANK

இன்று தனது 43ஆவது ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் அரசிடம் சதாம் ஒப்படைப்பு



ஈராக்கின் இடைக்கால அரசிடம் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனை அமெரிக்கப் படையினர் நேற்று உத்தி யோகபூர்வமாக ஒப்படைத்தனர். ஆனாலும், ஈராக்கியப் பொலீஸார் சதாமைப் பொறுப்பேற்கும் வரை அவர் தொடர்ந்து அமெரிக்கப் படையினரின் பாதுகாப்பிலேயே இருப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

உள்ளூர் நேரப்படி நேற்று முற்பகல் 10.15 மணிக்கு சதாமை சட்டபூர்வமாக ஈராக் இடைக்கால அரசு பொறுப்பேற்றதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது. சதாமும் அவரது ஆட்சியில் சிரேஷ்ட உறுப்பினர்கள் 11 பேரும் இன்று நீதிமன்றத்தில ஆஜர்படுத்தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சதாம் மீது குவைத் ஆக்கிரமிப்பு, குர்தீஷ் மற்றும் ஷியா முஸ்லிம்களின் எழுச்சிகளின் போதான அடக்குமுறைகள், ஈரான்ஈராக் யுத்தத்தின் போதான யுத்தக் குற்றங்கள், குர்தீஷ்கள் மீதான விஷவாயுத் தாக்குதல்கள் ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்படக்கூடும்.

இதற்கிடையில் சதாம் மீதான விசாரணை நியாயமான முறையில் நடைபெறும். அத்தோடு விசாரணை தொலைக்காட்சி, வானொலியில் நேரடியாக ஒளி, ஒலிபரப்பப்படும் என்று ஈராக் அரசின் புதிய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் மௌ.'பாக் அல்ருபை தெரிவித்துள்ளார். (ஒ)

## இருளில் மூழ்கியது சிங்கப்பூர்

சிங்கப்பூரில் பெரும்பாலான பகுதிகள் நேற்று முன்தினமிரவு மின்சார தடை காரணமாக அரை மணி நேரம் இருளில் மூழ்கின. மின்தடையை எப போதாவது அபூர்வமாக சந்திக்கும் சிங்கப்பூர் மக்கள் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட திடீர் இருளால் மிகவும் சிரமப்பட்டனர்.

இந்தோனேஷியாவிலிருந்து வரும் இயற்கை எரிவாயு விநியோகத்தில் ஏற்பட்ட பாதிப்பே இந்த மின்தடைக்குக் காரணம் என்று தெரியவந்துள்ளது.

# ஆப்கானில் குண்டுவெடிப்புகள்!

காபூல்,ஜூலை1

ஆப்கானிஸ்தானில் ஜலலா பாத் நகரில் நேற்று இடம்பெற்ற இரு குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 27 பேர் காயமடைந்தனர். இவர்களில் 5 பொலீஸார் உட்பட 8 பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர்.

பொலீஸ் சோதனைச் சாவடிகளை இலக்கு வைத்து உள்ளூர் நேரப்படி நேற்று மதியம் ஒரு மணியளவில் இந்த இரு தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை, கந்தகார் நகரில் அமெரிக்கப் படையினரின் வாகனத் தொடரணி மீது நடத்தப்பட்ட தாக்குதலில் வாகனங்களில் இருந்த 12 பேர் காணமற்போயுள்ளனர் என்று - அமெரிக்க இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். இவர்களில் ஆஸ்திரேலியப் பெண் ஊடகவியலாளர் ஒருவரும் அடங்குவார். (ஒ)

# புதிய கட்சி ஆரம்பிப்பது குறித்து விஜயகாந்த் இன்று ஆலோசனை

நடிகர் விஜயகாந்த் அரசியலில் குதிக்கிறார். எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் புதிய கட்சியை அவர் தொடங்குவதாக இருந்தது. ஆனால், பா.ம.க. வினருடன் ஏற்பட்ட மோதலால் முன்கூட்டியே அரசியலில் ஈடுபட உள்ளார்.

பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸின் மகன் அன்புமணி மத்திய அமைச்சர் ஆனதை விஜயகாந்த் விமர்சித்ததைத் தொடர்ந்து பா.ம.கவினரும் விஜயகாந்த் ரசிகர்களும் பல நாள்களாக மோதல்களில் ஈடுபட்டனர்.

பின்னர் பா.ம.க. போராட்டத்தை வாபஸ் பெற்றது. விஜயகாந்த் ரசிகர் மன்றமும் போராட்டத்தை விலக்கிக் கொண்டது.

இந்தநிலையில் ரசிகர் மன்ற மாவட்டத் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் விஜயகாந்த் இன்றும் நாளையும் புதிய கட்சி ஆரம்பிப்பது குறித்து ஆலோசனை நடத்துகிறார்.

இந்த ஆலோசனைக் கூட்டம் சென்னை கோயம்பேட்டிலுள்ள விஜயகாந்துக்கு சொந்தமான ஆண்டாள் அழகர் திருமண மண்டபத்தில் நடக்கிறது.

இந்தக் கூட்டத்தில் அரசியல் கட்சி குறித்தே தனது முடிவை அவர் அறிவிப்பார். (ஒ)

# சனி வளையத்தில் நுழைகிறது 'காசினி'

சூரியக்குடும்பத்தில் உள்ள 9 கிரகங்களில் 2 ஆவது பெரிய கிரகமான சனிக்கிரகம் சூரியனில் இருந்து 142 கோடி கி.மீ. தொலைவில் இருக்கிறது. சனிக்கிரகத்தின் மையப்பகுதி உலோகப் பாறைகளால் ஆனது. அதனுள் திரவ நிலையில் உலோக நைதரசனும் வளி மண்டலத்தில் ஐதரசன், ஹீலியம் ஆகியவையும் உள்ளன.

400 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமி எப்படி இருந்ததோ அது போல் தற்போது சனிக்கிரகம் உள்ளது என்று ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே, அங்கு உயிர் வாழ முடியுமா என்ற ஆராய்ச்சி தீவிரமாக நடந்து வருகிறது.

சனிக்கிரகத்தின் மர்மங்களை கண்டறிய இதற்கு முன்பு பயனீர் 1 மற்றும் 2, வோயேஜர் 1 ஆகிய 3 விண கலங்களை அமெரிக்கா அனுப்பியது. அவை சனிக்கிரகத்தை நெருங்கி ஆய்வு நடத்தின. இதைத் தொடர்ந்து சனிக்கிரகத்துக்குள் ஊடுருவி ஆய்வு நடத்துவதற்காக 'காசினி' விண்கலத்தை அமெரிக்கா அனுப்பியது.

1997 ஆம் ஆண்டு கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து ஏவப்பட்ட 'காசினி' 7 ஆண்டு இடைவிடாத பயணத்துக்குப் பிறகு சமீபத்தில் சனிக்கிரகத்தை அடைந்தது. கண்ணை மூடி கண்ணைத் திறக்கும் ஒரு வினாடி நேரத்துக்குள் 'காசினி' 3 மைல் தாண்டி விடும். இந்த விண்கலம் முதலில் சனிக்கிரக நிலவான 240 கி.மீ. விட்டம் உள்ள போபே என்னும் நிலாவை நெருங்கிப் படங்கள் எடுத்து அனுப்பியது.

அடுத்த கட்டமாக 'காசினி' விண்கலத்தில் உள்ள ஆய்வுக் கருவி டைட்டான் நிலாவில் தரை இறங்க வேண்டியுள்ளது. சனிக்கிரகத்தைச் சுற்றி உள்ள நிலாக்களில் மிகப்பெரிய நிலா டைட்டான் என்பது குறிப்பிடத்தக்கது. வரும் ஜனவரி மாதம் ஆய்வுக்கலம் டைட்டானில் தரை இறங்கும்.

இதற்கிடையில் 'காசினி' விண்கலத்தின் முக்கிய இயந்திரங்களை இயக்கும் பணி இன்று வியாழக்கிழமை தொடங்குகிறது. சனிக்கிரகத்தின் 2 வளையங்கள் வழியே ஊடுருவி உள்ளே செல்லும் காசினி விண்கலத்தில் இருந்து முக்கிய இயந்திரங்கள் தனியே பிரியும்.

இதிலிருந்து பிரியும் கருவிகள் சனிக்கிரகச் சுற்றுப்பாதையை 4 ஆண்டுகள் சுற்றிவரும். அப்போது பல்வேறு ஆய்வுகளை 'காசினி' விண்கலம் நடத்தும். (ஒ)

## இளவாலையில் இறைதியான வழிபாடு

இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தின் 125 ஆவது ஆண்டு விழாவை யொட்டி யாழ்மறைமாவட்ட இறைதியானக் குழுவினர் நடத்தும் இறைதியான வழிபாடொன்று இன்று வியாழக் கிழமை மாலை 5 மணி முதல் 8 மணி வரை ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள 125 ஆவது ஆண்டு விழாவுக்குப் பங்கு மக்களை ஆயத்தம் செய்யும் வகையில் இந்த இறைதியான வழிபாடு நடைபெறுகின்றது. அருட்திருஎஸ் ஜெயரட்ணம், அருட்திரு மைக்கல் சவுந்தரநாயகம், அருட்திரு லோரன்ஸ் ஆகியோர் இணைந்து இந்த இறைதியான வழிபாட்டை நிகழ்த்துவர்.

பங்குமக்கள் அனைவரையும் இந்த வழிபாட்டில் கலந்து பயன்பெறுமாறு பங்குத்தந்தை அருட்திரு. பி.எவ். பொனிபஸ் கேட்டுள்ளார். (8)

## பல்கலை ஊழியர் கடமைக்குத் திரும்பினர்

யாழ்பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிகைகள் பல்கலைக்கழகப் பேரவையினால் தீர்த்துவைக்கப்பட்டுள்ளதென்றும் -

ஊழியர்கள் தமது வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு கடந்த 28 ஆம் திகதி முதல் கடமைக்குத் திரும்பியுள்ளனர் என்றும் - யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் அறிவித்துள்ளார்.(8)

## நீடித்த கருமபீட திறப்புவிழா

காங்கேசன்துறை மக்கள் வங்கிக் கிளையின் நீடித்த கருமபீடத் திறப்பு விழா இன்று முற்பகல் 10 மணிக்கு மல்லாகம் சந்தியில் அமைந்துள்ள தனியார் கட்டடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

காங்கேசன்துறை மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் பொன்.கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக வலி.வடக்கு பிரதேச செயலாளர் கலாநிதி க.குணராசா கலந்து கொள்வார். (எ-86)

## குருபூர்ணிமா நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஜூலை1

யாழ்.பகவான் ஸ்ரீசத்ய சாயிசேவா நிலையத்தில் நாளை வெள்ளிக் கிழமை குருபூர்ணிமா நிகழ்ச்சிகள் நடைபெறும்.

அதிகாலை 5 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும். வைத்திய கலாநிதி உரோ மகேஸ்வரனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (ஐ)

# பேச்சுக்கான சூழலை உரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துக்கூறினோம். இதுதான் எமது தலைமைப்பீடத்தின் கரிசனை என்றும் எடுத்துவிளக்கினோம்.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக நாம் முன்வைத்த நிலைப்பாட்டை மீண்டும் இன்று மீள நினைவு படுத்தினோம். அந்த நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் பேச்சு நடத்த ஜனாதிபதியும் அரசும் முன்வந்தால் பேச்சுக்கு நாம் தயாராக இருக்கின்றோம் என்ற செய்தியை நோர்வே ஊடாக அரசுக்கு விடுத்துள்ளோம்.

*கேள்வி:* இடைக்கால நிர்வாக அமைப்புக் குறித்தும் முதலில் பேச்சு நடத்தத்தயார் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்று ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளனவே, அதைப் பற்றி நோர்வேத்தரப்பு ஏதாவது தெரிவித்ததா?

*பதில்:* நோர்வேத்தரப்பினரும் ஊடகங்கள் மூலமாகத்தான் இந்தத்தகவலை அறிந்திருக்கிறார்கள். அதிகார பூர்வமாக அந்தச் செய்தி நோர்வேத் தரப்புக்கு வரவில்லை. ஊடகங்கள் மூலமாக அதைத் தாம் அறிந்தார்கள் என அவர்கள் எம்மிடம் கூறினார்கள்.

இதுதொடர்பாக எமது நிலைப்பாட்டை முன்னரே தெளிவாக முன் வைததுள்ளோம்.

கருணாவையும் சில அடியாள்களையும் வைத்துக்கொண்டு சமாதான முன்னெடுப்புக்களையும் யுத்த சூழலையும் குழப்பும் அரச - அரச படைகளின் - செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க அரசும் ஜனாதிபதியும் முன்வரவேண்டும். இதை நோர்வேக்கு விளக்கினோம். புதிதாக அரசால் உருவாக்கப்பட்டுள்ள இந்த நெருக்கடிக்குத் தீர்வுகாணும் போதுதான் சமாதான முன்னெடுப்புக்கள் சாத்தியமாகும் என்பதை அரசுக்கு தெரியப் படுததும்படி கேட்டுள்ளோம்.

*கேள்வி:* தற்போதுள்ள நெருக்கடி நிலைதொடர்பாக தங்கள் தலைமைபீடத்தின் அதிருப்தியை அரசுக்கு தெரியப்படுத்தியுள்ளீர்களா?

*பதில்:* ஆம். கண்காணிப்புக்குழுத தலைவர் ஊடாகவும் எமது தலைமைப் பீடத்தின் அதிருப்தியையும் கரிசனையையும் தெரியப்படுத்தியிருக்கின்றோம். அதேபோன்று இன்று அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பிடமும் இதை விளக்கமாக - ஆணித்தரமாக - சொல்லியிருக்கிறோம்.

*கேள்வி:* புனர்வாழ்வு அமைச்சுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வடக்கு - கிழக்கு புனரமைப்புக்கான நிதியை வழங்கியுள்ளது. இடைக்கால நிர்வாகம் ஏற்படமுன் ஐரோப்பிய ஒன்றியம் தன்னிச்சையாக இந்த உதவியை வழங்கியுள்ளதா?

*பதில்:* எமது தாயகப்பிரதேசத்தில் முன்னெடுக்கப்படுகின்ற எந்தப் புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியமர்வு வேலைத்திட்டங்களும் உருவாக்கப் படவிருக்கின்ற உத்தேச இடைக்கால நிர்வாக சபை மூலமே முன்னெடுக்கப்பட வேண்டும் என்று நன்கொடையாளர்களுக்கு நாம் ஏற்கனவே தெரிவித்து விட்டோம். இப்படியான - காத்திரமான - கட்டமைப்புக்கு ஊடாகவே நிதிவழங்கவேண்டும் என்றும் - பலவீனப்பட்டு, மக்கள் நம்பிக்கை இழந்த அரச கட்டமைப்புக்கள் ஊடாக வழங்க வேண்டாம் என்றும் - அவர்களுக்கு விளக்கிக கூறியுள்ளோம்.

இந்த இடைக்கால கட்டமைப்புக்குப் புறம்பாக நிதிஉதவி வழங்கப்படுவதை தமிழ்மக்களும், விடுதலைப் புலிகளும் ஏற்கமாட்டார்கள் என்பதையும் நன்கொடையாளர்களுக்கும், நோர்வேத் தரப்பினருக்கும் தெரியப்படுத்தியுள்ளோம்.

அண்மைக்காலமாக உலகவங்கி, ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை வழங்கிய நிதிக்கும் டோக்கியோவில் உறுதியளிக்கப்பட்ட நிதிக்கும் தொடர்பு இருப்பதாக எமக்கு எந்தச் செய்தியும் கிடைக்கவில்லை, ஊடகங்கள் ஊடாக வந்த இந்தச் செய்திகள் தொடர்பாக அந்த நாடுகளிடம் கேள்வி எழுப்பியுள்ளோம். அவர்கள் மறுத்து இருக்கிறார்கள்.

டோக்கியோவில் உறுதியளிக்கப பட்ட நிதி சமாதான முன்னெடுப்புக்களின் முன்னேற்றத்தின் அடிப்படையில் தான் வழங்கப்படும் என்று உறுதியான செய்தியை அவர்கள் தந்துள்ளார்கள்.

*கேள்வி:* இதுவரை நடநத சந்திப்புகளில் ஏதாவது இணக்கப்பாடு ஏறபட்டதா?

*பதில்:* மிகக் கடுமையாக உழைக்கிறோம். என்று நோர்வேத் தூதர் இங்கு கூறினார். சமாதானத்துக்கு அவர்கள் கடுமையாக உழைக்கின்றார்கள்.

எமது நிலைப்பாட்டை இன்று அறிந்து போகிறார்கள். இன்று (புதன்) பிரதமரையும், நாளை (வியாழன்) ஜனாதிபதியையும் அவர்கள் சந்திக்கவிருக்கிறார்கள். அதிகாரம் உள்ள முடிவு எடுக்கும் தலைமைப்பீடங்களை இனித தான் அவர்கள் சந்திக்கவிருக்கிறார்கள். அந்தச்சந்திப்புக்களின் பின்னர் சாதகமான மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்பதை அறியக்கூடியதாக இருக்கும.

*கேள்வி:* அது தொடர்பான செய்தியுடன் எரிக்சொல்ஹெய்ம் மீண்டும் வன்னிவருவாரா?

*பதில்:* அந்தத் தரப்பினருடனான சந்திப்புக்கள் முடிய அவர்களின் செய்தியுடன் நோர்வேத்தூதர் இங்கு வரவிருக்கின்றார் என்று நோர்வேத் தரப்பினர் எம்மிடம் கூறினார்கள்.

*கேள்வி:* பேச்சுக்களை ஆரம்பிப்பதில் உள்ள தடை [illegible] உள்ளது?

*பதில்:* இது யார் பக்கம் என்பது வெளிப்படையாகத் தெரிந்த விடயம். அரசுதரப்பின் கையில்தான் அது உள்ளது.

எமது நிலைப்பாடு தெளிவாகத் தெரியப்படுத்தப்பட்டு விட்டது. பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சூழலை உருவாக்கும் பொறுப்பு அரசின் கையில் தான் தங்கியுள்ளது. நோர்வே அனுசரணையாளர்களும் இதை விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். சர்வதேச சமூகமும் விளங்கிக்கொண்டிருக்கிறது.

அரசு மீது எமக்குள்ள அதிருப்தியை இன்று வெளிப்படுத்தியுள்ளோம். அதில் மாற்றங்கள் வரும் பட்சத்தில் தான் சமாதான முன்னெடுப்புக்கள் சாத்தியமாகும்.

### மகேஸ்வரனுக்கும் கருணாவுக்கும் தொடர்பா?

*கேள்வி:* கருணா விடயத்தில் ஐதேகவின் எம்.பி மகேஸ்வரனுக்கும் தொடர்பு உள்ளதாக வெளிவரும் செய்திகளில் உண்மையுள்ளதா?

*பதில்:* ஊடகங்கள் மூலம் பல செய்திகள் வருகின்றன. பலர் தாங்கள் உதவி செய்தனர் என ஒப்புக்கொள்கின்றார்கள். பலர் மறுக்கிறார்கள். இப படி பல விதமான செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. எது உண்மை என்பதை அங்கிருந்து தப்பி வந்தவர்களின் வாக்குமூலங்களை வைத்துக கொண்டு தான் அறிய முடியும். அவர்களின் வாக்கு மூலங்களைப்பெறுவது தற்சமயம் இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது.

விரைவில் இதில் சம்பந்தப்பட்டவர்களை வெளிப்படுத்துவோம். சிலர் வெளிப்படுத்தப்பட்டும் விட்டனர்.

மகேஸ்வரனுக்கு இதில் தொடர்பு இருக்கின்றது என்பது குறித்து அப்படியான வாக்கு மூலங்களோ, செய்திகளோ, தகவல்களோ எங்களுக்கு இன்னமும் கிடைக்கவில்லை.

*கேள்வி:* ஐதேகவினதும் கருணாவினதும் தொடர்பு குறித்து.......?

*பதில்:* ரணில் விக்கிரமசிங்க நோர்வே ஊடாக ஒரு செய்தியைத் எமது தலைமைப்பீடத்துக்கு இன்று அனுப்பியுள்ளார். அதாவது தனக்கோ, தனது கட்சிக்கோ தெரியாமல்தான் அலிஸாஹிர் மௌலானா என்ற தனிநபரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை அது என்பதை அச்செய்தி மூலம் அவர் தெரிவித்துள்ளார்.

*கேள்வி:* தெற்கில் நடக்கும் மாகாணசபைத் தேர்தல் தொடர்பாகப் புலிகளின் நிலைப்பாடு என்ன?

*பதில்:* மாகாணசபைத் தேர்தல் நடக்கும் பகுதி மக்கள்தான் தீர்மானிக்கவேண்டும். அந்த மக்களின் ஆணையைப் பொறுத்து எமது கருத்தைக் கூறுவது பொருத்தம்.

தெற்கு மக்கள் சிந்தித்து தங்கள எதிர்காலத்தை ஒளிமயமாக்குவதறகு ஏற்ப வகைசெய்யும் விதத்தில் வாக்களிக்க வேண்டும். என்பதுதான் அந்த மக்களுக்கு நாங்கள் தெரிவிக்கும் செய்தி - என்றார். (க-3)

## சிறுவர் உரிமை பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,ஜூலை1

சிறுவர் இல்ல முகாமையாளர்களுக்கான சிறுவர் உரிமைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை இன்று காலை 9 மணிக்கு யாழ். நீதிமன்றத்திற்கு அருகிலுள்ள யாழ். சமூகச் செயற்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்துச் சிறுவர் இல்ல முகாமையாளர்களையும் இதில் தவறாது பங்குபற்றுமாறு மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு கேட்டுள்ளது. (எ-ரி)

## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜூலை1

இந்து சமய விவகார அலுவல்கள திணைக்களத்தின் யாழ்.மாவட்டப் பிராந்திய அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவு நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் உள்ள நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வட்டுக் கோட்டை மத்திய கல்லூரி ஆசிரியர் சி.கேசவன் "சைவமும் இளைஞர்களும்" என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்துவார். (எ-ரி)

## சலன சித்திரத்தின் மாவட்டக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை1

யாழ்ப்பாண சலன சித்திரக் கலை அமைப்பின் மாவட்டக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடிகாமம் வீதி, கரவெட்டியிலுள்ள சம்மேளனக் கிளைச் செயலகத்தில் தலைவர் வி.எஸ். சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-7)

## கரும்புலிகள் தினத்தையொட்டி வைத்தியசாலையில் நேற்று சிரமதானம்

யாழ்ப்பாணம்,ஜூலை1

கரும்புலிகள் தினத்தையொட்டி யாழ். நகரப் பகுதியில் உள்ள நடைபாதையோர வியாபாரிகளால் நேற்றுப் பகல் யாழ். போதனா வைத்திய சாலையில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

யாழ். மாவட்ட அரசியல்துறையைச் சேர்ந்த பிரமுகர்களும் நடைபாதையோர வியாபாரிகள் சங்க நிர்வாகிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## இது அபத்தப் பேச்சு! அர்த்தமற்ற பேச்சும் கூட!!

இந்த நாட்டில் தலைவிரித்தாடும் பேரினவாதம் தொடர்பாகவும் அதன் மூலம் குறித்தும் புதிய சரித்திரப் புனைகதையை அவிழ்த்து விட்டிருக்கின்றார் ஜனாதிபதி.

தாமும் தமது பரம்பரையைச் சேர்ந்த முன்னைய தலைமுறையினரும் தமது கட்சியினரும் ஏதோ ஒன்றும் தெரியாத அப்பாவிகள் - தூயவர்கள் - என்பது போலவும், இப்போது அரசியலுக்குள் நேரடியாகத் தலையை நீட்டி, குழப்பத்தைத் தாங்களே புரியும் பௌத்த பேரினவாத - தீவிரவாத - போக்காளர்களே சிக்கல்களுக்கு எல்லாம் காரணம் என்ற மாதிரியும் புதுக்கதை விட்டிருக்கிறார் அவர்.

*"சிங்கள, பௌத்த வாதம் பேசிக்கொண்டு இப்பொழுது அரசியலில் நுழைந்தவர்கள்தான் 1971 ஆம் ஆண்டிலும், 1988-89 ஆம் ஆண்டுகளிலும் பல்லாயிரக் கணக்கான சிங்கள இளைஞர்களைப் படுகொலை செய்தவர்கள். நம்மவரிடம் இருந்தே தமிழீழ விடுதலைப் புலிகள் கொலைக் கலாசாரத்தைக் கற்றுக்கொண்டனர். ஆனால், இப்போது நாம் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சுமத்துகின்றோம். நம்மவர்கள் சென்ற வழியில் புலிகள் செல்கின்றார்கள். இதுதான் உண்மை"* - இப்படிக் கூறியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

சில அடிப்படை உண்மைகளை மறந்து - அல்லது மறைத்து - ஜனாதிபதி குமாரதுங்க ஏதோ புதிய பிரசங்கம் செய்கிறார் - இந்த நாட்டுமக்கள் சரித்திரங்களை, சம்பவங்களை அவ்வளவு விரைவாகவும், இலகுவாகவும் மறந்துவிடுகின்றார்கள் என்ற நம்பிக்கையில்.

அவரது கருத்துத் தொடர்பாகச் சில விடயங்களை அவரின் கவனத்துக்குச் சுட்டிக்காட்டுவது அவசியமானதாகும்.

★ 1971 ஆம் ஆண்டு இந்த நாட்டில் இரத்தக் களரி ஓடியது உண்மைதான். ஆனால், அதற்கு முன்னரும் பின்னரும் கூட இந்த நாட்டில் தமிழர்களுக்கு எதிராக அதே இரத்தவெறி கட்டவிழ்த்து விடப்பட்டதை யாரும் மறந்துவிடக்கூடாது.

★ ஐம்பதுகளில் 'தனிச்சிங்களச் சட்டம்' என்ற பேரினவாத வெறித்திட்டத்தை விதைத்து, 24 மணிநேரத்தில் அதை நடைமுறைப்படுத்துவேன் என்று சூளுரைத்து, இந்நாட்டில் பேரினவாதத்தின் மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் திட்டத்துக்கு - உத்திக்கு - வெற்றி வடிவம் காட்டிய மூலவர் வேறு யாருமல்லர் - இதே ஜனாதிபதியின் தந்தை எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காதான்.

★ அதற்குப் பின்னர் சிங்கள, பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் இனவாத அரசமைப்பை - தமிழர்களின் கருத்துக்களைப் புறக்கணித்து - அறிமுகப்படுத்தியதன் மூலம் இந்த நாட்டில் பேரினவாதத்துக்கு நிரந்தர இடம்பிடித்துக்கொடுத்து அதைநிலைநிறுத்தியவர் இதே ஜனாதிபதியின் தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்காதான்.

★ 1971 குழப்பங்களைப் பற்றிக் குறிப்பிடும் ஜனாதிபதி, அப்போது வன்முறைமூலம் குழப்பங்களை ஏற்படுத்தியவர்களையும், அவர்களை ஆயுதமுனையில் அடக்கியவர்களையும் சேர்ந்த கூட்டமைப்புத்தான் தமது அரசு என்பதை மறந்துபோய், அதற்கான குற்றச்சாட்டுக்களுக்கு வேறுபுறம் விரலைச் சுட்டுவது விநோதத்திலும் விநோதம்.

★ அதேபோல 1988-89 இல் தென்னிலங்கையில் பல்லாயிரம் பேர் உயிரிழக்கக் காரணமானவர்களில் ஒரு பகுதியினர் - ஏன் இதே ஜனாதிபதியின் கணவர் விஜய குமாரணதுங்க படுகொலை செய்யப்படுவதற்குக் காரணமானவர்கள் - இப்போதும் ஜனாதிபதியின் அணியில்தான் இருக்கிறார்கள். அவர்களையும் அணி சேர்த்துக்கொண்டுதான் தாம் ஆட்சிக்கட்டைப் பிடித்திருக்கிறோம் என்பதை ஜனாதிபதி மறந்தது எங்ஙனம் என்பது புரியவில்லை.

★ 1971 இலும், 1988-89 இலும் இடம்பெற்ற படுகொலைகளை இப்போது புலிகள் நடத்தும் போருடன் ஒப்பிட்டு 'நம்மவர்கள் சென்ற வழியில்தான் புலிகள் செல்கின்றனர். இதுதான் உண்மை' - என்று ஜனாதிபதி கூறுகின்றார். இதைப் பார்க்கும்போது தமிழரின் விடுதலைப் போராட்டத்தின் அடிப்படையையே அவர் புரிந்துகொள்ளவில்லை என்பது தெளிவாகின்றது.

★ 1971 மற்றும் 1988 - 89களில் நடந்தது ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதற்கான சதிப் புரட்சிகள், இப்போது தமிழர்கள் நடத்துவது இனத்துக்கான விடுதலைப் போராட்டம். இரண்டும் ஒப்பிடக் கூடியவை அல்ல. ஒன்றைப் பார்த்து மற்றது முன்னெடுக்கப்படுவதாகக் கூறுவது சுத்த அபத்தம்; அறிவு கெட்டதனம்.

புலிகள் முள்ளை முள்ளால் எடுக்கின்றார்கள் அவ்வளவே.

பேரினவாதம் தனது ஆயுத பலத்தால் - அதிகார மமதையால் - சிறுபான்மை இனத்தவரை அடக்கி, ஒடுக்கி ஆட்சி புரிந்தது. அதே ஆயுத பலத்தால் அந்த ஒடுக்குமுறையிலிருந்து தமது இனத்தை விடுவிக்கக் கிளர்ந்தெழுந்திக்கின்றார்கள் புலிகள். இனத்தின் இருப்புக்காக - அடிப்படை வாழ்வியல் உரிமைகளுக்காக - தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளான புலிகள் நடத்தும் போர், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக சிங்களத்தில் நடத்தப்பட்ட கிளர்ச்சிகளுடன் ஒப்பிடக்கூடியதல்ல.

அப்படி ஒப்பிடும் வகையில் ஜனாதிபதி வெளியிட்ட கருத்துக்களை அவரது வழமையான பிதற்றல் வரிசைக்குள் சேர்த்துக் கொள்வதுதான் சரியானது.

# கடற்கரும்புலிகளின் நினைவுக்கற்கள் கோப்பாய் துயிலும் இல்லத்தில் நடுகை

யாழ்ப்பாணம்,ஜலை1

சர்வதேசக் கடற்பரப்பில் 2003 ஆம் ஆண்டு இடம பெற்ற படகு விபத்து ஒன்றின்போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கடற்கரும்புலிகள் நால்வரின் நினைவுக் கற்கள் நேற்று முன்தினம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நட்டு வைக்கப்பட்டன.

கடற்கரும்புலி லெப்டினன்ட் கேணல் யாழினியின் (நாகரத்தினம் நிரஞ்சினி) திருவுருவப்படம் சங்கானையிலுள்ள அவரது இல்லத்திலிருந்து சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்துக்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

அங்கு வலி. மேற்கு தேசிய எழுச்சிப்பேரவையின் செயலாளர் கைலாயநாதன் தலைமையில் வீரவணக்கக் கூட்டமும் இடம்பெற்றது. கடற்புலிகளின் அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் பூரணியும் வேறு சிலரும் வீரவணக்க உரைகளை நிகழ்த்தினர்.

கடற்கரும்புலி கப்டன் ஈழவண்ணனின் (சுரேந்திரன் பாபு) திருவுருவப்படம் திருநெல்வேலியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து திருநெல்வேலி பாரதி சனசமூக நிலையத்துக்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

அங்கு நல்லூர் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் ப.பாலகுமார் தலைமையில் வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது. யாழ். மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் தமிழ் மறவன் பொதுச்சுடர் ஏற்றினார்.

தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், யாழ். பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன், கடற்புலிகளின் அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் பூரணி ஆகியோர் வீரவணக்க உரைகளை நிகழ்த்தினர்.

கடற்புலி மேஜர் கதிரோவியனின் (செல்வன் ஞானேஸ்வரன்) வீரவணக்கக் கூட்டம் புன்னாலைக்கட்டுவன் மத்தியோடை சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது. கடற்புலிகளின் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் சுதர்சன் வீரவணக்க உரையினை நிகழ்த்தினார். கட்ற்புலி லெப்டினன்ட் கேணல் அமுதம் அல்லது ஈழப்பிரியாவின் (பாலசுப்பிரமணியம் சுகந்தினி) வீரவணக்கக் கூட்டம் வல்வை இந்துமகளிர் கல்லூரியில் இடம் பெற்றது.

கடற்புலிகளின் வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச் சுடரினை வடமராட்சி கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் தீபன் ஏற்றிவைத்தார்.

வடமராட்சிக் கடற்றொழிலாளர் சங்கச் செயலாளர் சூரியமூர்த்தி, வடமராட்சி கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் கல்யாணி, வல்வை இந்து மகளிர் பாடசாலை அதிபர் நகுலாம்பிகை ஆகியோர் வீரவணக்க உரைகளை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து நான்கு கடற்கரும்புலிகளினதும் நினைவுக்கற்கள் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நட்டுவைக்கப்பட்டன.

(-4-86)

# காணாமற்போனோரின் இறப்பை பதிவுசெய்ய இலவசச் சட்ட உதவி

## யாழ். அரச அதிபர் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜுலை1

யாழ். மாவட்டத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வன செயல்களின்போது காணாமற்போனவர்களை இறந்தவர்களாகப் பதிவுசெய்வதற்கான இலவசச் சட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகளை யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் மேற்கொண்டுள்ளார் என யாழ். மாவட்ட மேலதிக பதிவாளர் பொ.ஈஸ்வரதாஸன் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலதிக பதிவாளர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். குடாநாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வன் செயல்களால் காணாமற்போனவர்கள், காணாமற்போய் ஒரு வருடத்தின் பின் சம்பந்தப்பட்டவர் இறந்துவிட்டார் என்று தெரிவித்து மரணச் சான்றிதழ்கள் மாவட்டப் பதிவாளரால் வழங்கப்பட்டன. இதன்படி, 2001ஆம் ஆண்டுமுதல் நடைமுறையில் இருந்த தற்காலிக இறப்புப் பதிவுச் சட்டத்தின் மூலம் பதிவுசெய்யப்பட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்தச் சட்டம் தற்போது காலாவதியாகிவிட்டது. புதிய நடைமுறையின் பிரகாரம் காணாமற்போனவர் தொடர்பாக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தின மூலமே மரணச்சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இந்தப் புதிய நடைமுறையினால் யாழ். குடாநாட்டிலுள்ள காணாமற்போனவரின் குடும்பத்தினர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனைத் தவிர்க்குமுகமாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு இலவசச் சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்கான முன் முயற்சிகளை அரச அதிபர் மேற்கொண்டுள்ளார்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் காணாமற்போனவர் தொடர்பான பூரண விவரங்களை அந்தந்தப் பகுதிப் பிரதேச செயலர்களிடம் ஒப்படைக்கவேண்டும் - என்றார் அவர். (ஓ-5-ரி)

# யாழ்.வைத்தியசாலையின் உட்புறப் பாதைகள் சேதம்

யாழ்ப்பாணம்,ஜுலை1

யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள உட்புறப் பாதை குண்டுங்குழியுமாக உள்ளதாகவும் - இதனால் நடக்க முடியாத நோயாளர்களை 'ஸ்ரெச்சரில்' எடுத்துச் செல்லும் போது பெரும் சிரமங்களை அனுபவிக்க நேரிடுவதாகவும் - கூறப்படுகிறது.

வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிற்கு வரும் அவசர நோயாளர்கள் மருத்துவப் பரிசோதனையின் பின்னர் நோயாளர் விடுதிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். அவர்களில் நடந்துசெல்ல முடியாதவர்கள், குறிப்பாக ஆபத்தான கட்டத்தில் இருப்பவர்கள் 'ஸ்ரெச்சரில்' கிடத்தப்பட்டுத் தள்ளிச் செல்லப்படுகிறார்கள்.

இவர்களைக் கொண்டுசெல்லும் பாதையில் பல இடங்கள் இடிந்து சேதமடைந்து குழிகள் ஏற்பட்டுள்ளன.

சமீபத்தில் கூட 'ஸ்ரெச்சரின்' ஒரு சக்கரம் குழி ஒன்றில் தடுக்கியதில் அதிலிருந்த நோயாளி கீழே வீழ்ந்தார் என்று நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.

ஆகவே, இதுதொடர்பாக வைத்தியசாலை நிர்வாகம் அக்கறை எடுத்து நோயாளரை எடுத்துச்செல்லும் பாதைகளைச் சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர் (ஓ-6)

# 5 ஆள்கொணர்வு மனுக்களுக்கு பதில் சமர்ப்பிக்கக் காலக்கெடு

யாழ்ப்பாணம்,ஜுலை1

யாழ். குடாநாட்டில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனவர்களில் மேலும் ஐந்து பேர் தொடர்பான ஆளகொணர்வு மனுக்கள் குறித்த வழக்குகளில் இராணுவத் தரப்பின் பதில் மனுக்களை எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு யாழ். மேல் நீதிமன்றம் காலக்கெடு விதித்துள்ளது.

1995-96ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனவர்களான குருநகரைச் சேர்ந்த துரைசிங்கம் குணசேகரம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தனானந்தன் ரவீந்திரன், யாழ். தண்ணீர்தொட்டியடியைச் சேர்ந்த ஏ.ஆர் குயின்ரன் ராஜ்குமார், குருநகரைச் சோந்த ஐ.ஆர். கெனடிராஜா மற்றும் எஸ்.அல்போன்ஸ் வில்டன் ஆகியோர் தொடர்பான ஆள்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகள் நேற்றுமுன்தினம் யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி கே.பி.எஸ். வரதராசா முன்னிலையில் இடம்பெற்றன.

இந்த வழக்குகளில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகள் சார்பில் இன்னமும் பதில் மனுக்கள் மற்றும் ஆட்சேபனைகள் என்பன மன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை என்று நீதிபதியிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனை ஆராய்ந்த நீதிபதி, காணாமற்போனவர்களின் குடும்பங்களின் நலன்கருதி இந்த வழக்குகளில் எதிர் மனுதாரர்கள் பதில் சமர்ப்பிக்க எதிர்வரும் 29ஆம் திகதிவரை இறுதிச் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது என்று தெரிவித்து அந்தத் திகதி வரை வழக்குகளை ஒத்திவைத்தார்.

(ஓ-5-ரி)

**நாளை**

ஆனி 18
வெள்ளிக்கிழமை
(02.07.2004)
திதி : பூரணை
பகல் 5.23 வரை.
நட்சத்திரம்: மூலம்
பகல் 11.31 வரை.
சுபநேரம்: 5.57 - 7.27
ராகுகாலம்: 10.27-11.57
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

மௌனமாக இருக்கத் தெரியாதவனுக்கு நன்றாகப் பேசவும் தெரியாது.

# நலன்புரி நிலைய இல்லம் சேதம்; சீர்செய்வார் எவருமில்லை

## சமாசத் தலைவர் வேதனை

உரும்பிராய் இந்துக் கல்லூரி முன்பாக உள்ள இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையத்திலுள்ள குடியிருப்பொன்றின் மீது பனைமரம் முறிந்து வீழ்ந்ததால் ஏற்பட்ட சேதம் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் இதுவரை அதனைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத் தலைவர் எஸ்.கணேசன் அதிருப்தி தெரிவித்தார்.

கடந்த பன்னிரண்டாம் திகதி பனைமரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் மேற்படி நலன்புரி நிலையத்திலுள்ள அரை நிரந்தரவீடு ஒன்று முற்றாகச் சேதமடைந்தது. அவ்வேளை, வீட்டினுள் எவரும் இல்லாததால் பாரிய விளைவுகள் ஏற்படவில்லை. எனினும், வீடு முற்றாக உடைந்ததால் அக்குடும்பம் தற்போது மரத்தடி நிழலில் காலம்கழிக்க நேரிட்டுள்ளது.

இந்நிலை தொடர்பாக இப்பிரதேசக் கிராம அலுவலருக்கும் நலத்திட்ட அதிகாரிகளிற்கும் தாம் அறிவித்துள்ளதாகவும் -

ஆனால், சேதத்தை வந்துபார்க்கக்கூட அதிகாரிகள் முன் வரவில்லை என்பது வேதனை தருகிறது என்றும் - சமாசத் தலைவர் வேதனை வெளியிட்டார். (ஓ-150)

# புலன் வலுக்குன்றியோருக்கு விசேட பயிற்சிநெறித் திட்டம்

யாழ்ப்பாணம்,ஜுலை1

யாழ். மாவட்டத்திலுள்ள புலன்வலுக்குன்றிய இளைஞர், யுவதிகளுக்கென தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் விசேட பயிற்சி நெறித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

குடாநாட்டிலுள்ள புலன்வலுக்குன்றிய இளைஞர், யுவதிகளிடம் காணப்படும் ஆற்றல்களை இனங்கண்டு அவர்களுக்குப் பொருத்தமான பயிற்சிநெறிகள் அல்லது தொழில்வாய்ப்புத் திட்டங்களை ஏற்படுத்திக் கொடுப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

18வயதிற்கும் 29வயதிற்கும் இடைப்பட்ட புலன்வலுக்குன்றியவர்களும் விதவைகளும் இத்திட்டத்தில் இணைந்து கொள்ளமுடியும்.

இப்பயிற்சி நெறித் திட்டத்தில் இணைந்துகொள்ள விரும்புவோர் தனியாகவோ அல்லது அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்கள் ஊடாகவோ விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுப் பூரணப்படுத்திச் சமர்ப்பிக்கமுடியும் என்றும் -

தனிப்பட்டோர் விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 5ஆம் திகதி தொடக்கம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இந்த அலுவலகம் யாழ். செயலகத்திற்குச் சமீபமாக உள்ளது. (ஓ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

**01 . 07 . 2004**

## செல்வன் உ:காமேஸ்



திரு.திருமதி உதயகுமார்-துஸ்யந்தினி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்
செல்வன் உதயகுமார் காமேஸ்
தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (01.07.2004) லண்டனில் தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் யாவரும் எல்லாம்வல்ல சிற்றூண்டி விநாயகர் அருள்பெற்று சீரும் சிறப்புடனும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

ந.இளங்கோ
(மைத்துனர்)
(லண்டன்)

*பேராலை,*
*பளை.*
(33455)(14-16-33)


## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 05 □ 02 □ 1956 | 02 □ 07 □ 1993 |

## திருமதி சி.இந்துமதி

திதி: பூர்வபக்க சதுர்த்தசி

தங்கமான குணங்களோடு அழகுடன்
தகைமைசேர் பதவிகள் சிறப்புகளோடு
சீரும் புகழுமாய் வாழ்ந்து மக்கலம் சேர்
வாழ்க்கை அமைக்க நின் கணவனிடம்
கனடா ஏகினாயே! ஆனால் காலன்
தீராத நோய் தந்து தன்னிடம்
எடுத்தானே! உன் முகம், நினைவுகள்
மறவாமல் நாம் ஏங்குகின்றோமே!
என் அன்பு இந்துவே!

*சுதுமலை மேற்கு,*
*மானிப்பாய்.*

அன்பு அம்மா, அக்காமார்,
அத்தான்மார், பெறாமகன்.




★ M.D.90 மற்றும் றீக்கொண்டிசன் மோட்டார் சைக்கிள்களா?
★ மோட்டார் சைக்கிள்களா?
★ உதிரிப்பாகங்களா? ★ அசிட் வகைகள்
★ பற்றி வகைகள், சோலர் வகைகள்
அனைத்தையும் ஒருங்கே ஒரே இடத்தில் பெற்றி...

## அருள் விநாயகர் மோட்டோர்ஸ்

ரொயோட்டா உதிரிப்பாகங்களுக்கான வடபகுதி ஏக விநியோகஸ்தர்கள்
108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், கிளை: மெயின் வீதி சங்கானை



## அருள்விநாயகர் றேடர்ஸ்

106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

## அருள் விநாயகர் மோட்டோர்ஸ்

262, கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி-35804)(32-14-16-33)


## ஈராண்டு நினைவில்...



| தாய் மடியில் | இறை அடியில் |
|---|---|
| 14 - 08 - 1976 | 23 - 06 - 2002 |

அமரர் **மகேஸ்வரன் மங்களேஸ்வரன்**
(யாழ். பல்கலைக்கழக வணிகபீட முகாமைத்துவக் கற்கை
மூன்றாம் வருட மாணவன்)
திதி: 01.07.2004

*வருவாய் வருவாய் எனக் காத்திருந்தோம் வரவில்லை – ஏனோ*
*இருவருடம் சென்றதையா – பாரில்*
*பருவமழை பொய்த்திடினும் – உன்*
*கருணை முகம் மறக்கமுடியுமோ?*

இறையடியில் இதமான சுகம் காணப் பிரார்த்திக்கும்:
அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

*சூராவத்தை,*
*சுன்னாகம்.*
(33631) (24-14-16-33)


# மானிப்பாய்
# றோட்டறக்ட் கழகத்தின் அனுசரணையுடன்

## Computer Express மற்றும் IPAS நிறுவனங்கள்
## இணைந்து நடத்தும்

## மாபெரும் கணனி மற்றும் தொழில் வழிகாட்டி

## — கருத்தரங்கு —

*காலம்:* 02-07-2004 வெள்ளிக்கிழமை *இடம்:* மானிப்பாய் பிரதேச மண்டபம் நேரம்: காலை 9.00 மணிமுதல்

**பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளின்**
**வளமான எதிர்காலத்தைத் தீர்மானிக்க இன்றே தயாராகுங்கள்!**

✳ இக்கருத்தரங்கில் பங்குபற்றும் அனைவருக்கும் பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
✳ இச்சான்றிதழ் வைத்திருக்கும் அனைவரும் Computer Express நிறுவனத்தில் அனைத்துக் கற்கை நெறிகளுக்கும் 90% கழிவு வழங்கப்படும்.
IPAS நிறுவனத்தில் சகல பாடநெறிகளுக்கும் 50% கழிவு வழங்கப்படும்.
✳ பாடசாலை மாணவர்கள் விசேட சலுகையுடன் அந்தந்தப் பாடசாலை அதிபர்கள் ஊடாக நுழைவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

## உட்பிரவேசக் கட்டணம்: 150/-

மேலதிக விபரங்களுக்கு:
0777-677079, 0777-283820, 077-3024313

- செயற்றிட்ட இயக்குநர்.

(சி-35900) (14-24-34)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# இந்த வகை போதுமா...?

பிறப்புரிமைப் பொறியியல் (Genetic Engineering) எதிர்கால உலகை மேலும் பல மாற்றங்களுக்குள் தள்ளிவிடும் என்பதை மறுத்தல் முடியாது. மனிதனால் மரபணுத் தொழில்நுட்பமுறை மூலம் உருவாக்கப்பட்ட 'டோலி' ஆடு இந்தவகையில் முதலாவது படைப்பு. இதுபோல மனித மரபணுக்களைப் பயன்படுத்திப் புதிய படைப்புக்களை உருவாக்கக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், விலங்குகள், பறவைகளைக் கலந்து உருவாக்கினால் என்ன நடைபெறுமென அறிய விரும்புகிறீர்களா? இதோ இந்தப் படங்களைப் பாருங்கள். இப்படியான விநோத விலங்குகள் இந்தப் பூமிக்கு வேண்டுமா என்பது முக்கிய கேள்வி. தோற்றங்களை மட்டுமே இங்கு காண்கிறோம். இவற்றின் புதிய குணம் தான் என்னவோ?!







# கறுப்பு என்றாலும்...

விமானங்களில் உள்ள கறுப்புப் பெட்டிகள் (Black Box) என்று நாம் கூறும் பெட்டிகள் உண்மையாகவே கறுப்புநிறம் கொண்டவையல்ல. கண்களுக்குத் தெரியக்கூடிய வகையில் செம்மஞ்சள் நிறத்தில் தான் அவை அமைந்திருக்கின்றன. பெரும தீயினில் சிக்குண்டாலும் எரிந்து போகாதவாறு - துருப்பிடிக்காத - இரும்பினால் செய்யப்பட்டவை இந்தப் பெட்டிகள். சுமார் ஆறு கிலோ மீற்றர் ஆழம் கொண்ட கடலடியில் தாண்டு போனாலும் மூன்று மாதங்களுக்கு பழுதடையாமலிருக்கும். ஆகாயத்தில் இருந்து அதிகூடிய வேகத்தில் விழுந்தாலும் உடைந்து போகாமலும் செய்யப்பட்டிருக்கிறது. எங்கு விழுந்தாலும் ஒரு வினாடிக்கு ஒரு தடவை என்னும் கால அளவில், தான் இருக்குமிடத்தை எலக்ரோனிக் தகவல் மூலம் காட்டிக்கொண்டிருக்கும். சுமார் ஒரு மாதகாலத்திற்கு இந்தத் தகவல்களை அது வெளியிட்டபடியே கிடக்கும். கறுப்புப்பெட்டியைக் காணவில்லை என்று கூற முடியாத வகையில் தொழிற்படவல்ல தொழில் நுட்பக் கருவி இது.

கறுப்புப் பெட்டியென்பது ஒன்றல்ல, மொத்தம் இரண்டு பெட்டிகள் ஒவ்வொரு விமானத்திலும் இருக்கின்றன. இவை விமானத்தின் சேதம் குறைவான பின்பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும். இந்தப் பெட்டிகள் விமானத்தினுள் நடைபெறும் எல்லா விதமான உரையாடல்கள், ஒலிகள், இயந்திர இயக்கங்கள் உட்பட அனைத்தையும் பதிவு செய்து வைத்திருக்கும். இந்தக் கறுப்புப் பெட்டிகள் இரண்டிற்கும் தனித்தனியான பெயர்கள் உண்டு. ஒன்று சி.வி.ஆர். என்று அழைக்கப்படும். இது விமான மோட்டிகளின் அறையில் நடைபெறும் உரையாடல்களைப் பதிவு செய்யும். சுமார் இரண்டு மணிநேர உரையாடல்களைப் பதிவு செய்யவல்லது. இரண்டாவது பெட்டியின் குறியீட்டுப் பெயர் எப்.டி.ஆர். எனப்படும். இது விமானத்தின் தொழில்நுட்பத் தகவல்களைச் சேகரிக்கும் பெட்டியாகும். விமானத்தின் வேகம், பறக்கும் உயரம், திசை உட்படப் பல்வேறு தகவல்களைப் பதிந்து கொண்டிருக்கும்.

கறுப்புப் பெட்டிகளில் சில தகவல்கள் சட்டரீதியாக பதியப்பட வேண்டியவை உட்பட இதர தகவல்களும் இதில் பதியப்படும். சுமார் 300 விதமான தகவல்களை தனது எலக்ரோனிக் சிப்ஸ்கள் மூலம் பதிந்து வைத்துக் கொள்ளும் திறமை வாய்ந்தது. மேலும் பெட்டியின் வெளிப்பகுதியில் நிலவும் நிகழ்வுகளால் பாதிப்படையாதவாறும் இதன் உட்புறம் பாதுகாக்கப்பட்டிருக்கும். விமானத்தில் கேட்கும் பல்வேறுபட்ட ஒலி அதிர்வுகள் உட்பட நுண்ணிய சென்சார்கள் மூலம் சேகரிக்கப்படும் தகவல்கள் யாவும் விமானியின் அறையில் உள்ள கணனியில் சேர்க்கப்படும். அதன் பின்னர் அங்கிருந்து சகலவிதமான தரவுகளும் கறுப்புப்பெட்டிக்கு அனுப்பப்படும்.

# சிறகடிக்கும் விமானம்

பறவையைக் கண்டான் விமானம் படைத்தான் என்று கவிஞர் கண்ணதாசன் மனிதனின் சாதனையைப் புகழ்ந்து பாடினார். ஆனால், தற்போது பறக்கும் விமானங்கள் எவையுமே பறவைகள் போலப் பறப்பதில்லை. பறவைகளைப் போலவே சிறகடித்துப் பறக்கும் விமானம் இப்போதுதான் வந்திருக்கிறது. கனேடிய நிறுவனமொன்று மேலும் கீழும் சிறகடித்துப் பறக்கும் விமானத்தைத் தயாரித்திருக்கிறது. இதற்குமுந்திய தயாரிப்பு பறக்கவிடப்பட்டபோது சிறகு முறிந்து விழுந்தது. இப்போது அதில் சிறிய மாற்றங்கள் செய்து இவ்விமானத்தைத் தயாரித்துள்ளார்கள். இந்த விமானத்தின் சிறகுகள் விமானம், மேலும் கீழும் பறப்பதற்கே உதவும். தூரச் செல்லும் பயணத்தில் வழமையான விமானங்களின் மோட்டார் போலவே இயந்திரங்கள் வேலை செய்ய விமானம் நேர்வழியில் பறந்து செல்லும்.

## சுடரும் விஞ்ஞானம்

— இராஜபுத்திரன்

# சூரிய சுவாலைகளால் பூமிக்குப் பாதிப்பு!

"அண்மைக் காலமாக சூரியனின் அமைதி குலைந்துள்ளது. அங்கு மர்மமான நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இந்த மர்மமான நிகழ்வுகளால் பூமியில் பல மாறுதல்கள் ஏற்படப் போகின்றன" - என்று விஞ்ஞானிகள் வெளியிட்ட தகவல் இன்று பரபரப்பாக உலகெங்கும் பரவியுள்ளது.

சூரியன் பற்றிய சில தகவல்களின் பின்னதாக இந்த விடயத்துக்குச் செல்லலாம்.



சூரியன் ஒரு நெருப்புக் கோள். பூமியைப் போல 333 ஆயிரம் மடங்கு பெரியது. இந்தச் சூரியன், இன்னும் 5 கோடி வருடங்களுக்கு ஒளி தரும் வல்லமை கொண்டது. 15 கோடி கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள சூரியனின் கதிர்கள் வெறும் 8 நிமிடங்களில் பூமியை வந்தடைந்துவிடுகின்றன. ஒரு செக்கனில் சூரியனிலிருந்து வெளிவரும் சக்தி, பூமிக்கு பத்து லட்சம் வருடங்களுக்குப் போதுமானதாகும். சூரியனின் மேற்பரப்பு வெப்பநிலை 6000 °C ஆகும்.

இந்தச் சூரியனில் அண்மைக்காலமாக - திடீரென - அமைதி குலைந்துள்ளதாக 'நாஸா' விண்வெளி விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள். சூரியனின் மேற்பரப்பிலுள்ள மிகப் பெரிய துளைகளால் பூமிக்கு அச்சுறுத்தல் இருப்பதாக அவர்கள் கூறுகின்றார்கள்.

உண்மையில், சூரியனின் இயல்பு நிலை எது, குழப்பமான நிலை எது என்பதனை தெளிவாக வரையறுக்கமுடியாது. சூரியனின் மேற்பரப்பில் மூன்று தோற்றங்களைக் காணமுடியும். அரிசி மணித் தோற்றம், சூரிய களங்கங்கள், சூரிய சுவாலைகள் என அவற்றை வகைப்படுத்தலாம்.

சூரியனின் மேற்பரப்பை நவீன தொலைகாட்டிகள் மூலம் பார்க்கும்போது 'கொதிக்கும் சோற்றுப்பானைக்குள் அரிசி மணிகள் அங்குமிங்கும் அசைந்தாடிக் கொண்டு இருப்பது போன்ற' தோற்றத்தைக் காணலாம். சூரியனின் மேற்பரப்பில் தோன்றி மறையும் வாயு உருண்டைகளே இவையாகும்.

சூரியனின் மேற்பரப்பில் கரும்புள்ளிகளாக தெரிபவையே சூரிய களங்கங்கள் எனப்படுகின்றன. இவை பல்லாயிரக்கணக்கான கிலோ மீற்றர்கள் குறுக்களவுடையன. இவற்றின் எண்ணிக்கை மற்றும் பருமன் என்பன அதிகரித்து வருகின்றன.

சூரிய கிரகணம் போன்ற காலங்களில் சூரியனின் மேற்பரப்பிலிருந்து பிரமாண்டமான தீ நாக்குகள் கொளுந்துவிட்டு எழுகின்றன. சில ஆயிரக்கணக்கான கிலோ மீற்றர் உயரம் வரை இச்சுவாலைகள் துள்ளி விழுந்து கொண்டிருக்கும். சூரியனின் மேல் மழை பொழிவது போல் தெரியும் இவ்வகைச் சுவாலைகள் உண்மையில் சூரியனில் உற்பத்தியாகி வெளி நோக்கி நீண்டு செல்கின்றன.

சூரிய சுவாலைகளில் அதி மோசமானவற்றை அளவெடுக்க சில குறியீடுகள் வகுக்கப்பட்டுள்ளன. பாரிய அளவில் காணப்படுபவற்றை 'எக்ஸ்' சுவாலைகள் எனவும், மத்திய நிலையில் காணப்படுபவற்றை 'எம்' சுவாலைகள் எனவும் அடையாளமிடுவார்கள்.


கடந்த 2003ஆம் ஆண்டு ஒக்டோபர் பிற்பகுதியில் சூரியனில் பெரும் குழப்பமான நிலையொன்று உருவாகியது. சூரியத்துளைகளில் இருந்து சூளையால் கக்குவது போல பதினொரு சுவாலைகள் கொளுந்து விட்டு எழுந்தன. அவற்றில மூன்று பெரும் இராட்சதத்துளைகளில் இருந்தும் (எக்ஸ்-13) மற்றும் எட்டு, மத்திய தரத் துளைகளில் இருந்துமாக அவை நடைபெற்றன. (சூரியக் குடும்பத்தின் மிகப்பெரிய கோளான வியாழனை எடுத்துச் சென்று அந்தத் துளைக்குள் வைத்தால் வியாழன் கோளே அதற்குள் புதைந்து விடும் அளவுக்கு அந்தத் துளைகளின் பருமன் காணப்படுகிறது). இந்த நிகழ்வுகள், சூரியனின் கடந்த ஒரு தசாப்தகால வரலாற்றில் மிகவும் அசாதாரணமாக உள்ளன. 1989ஆம், 2001ஆம் ஆண்டுகளில் சூரிய மேற்பரப்பில் இது போன்ற கக்குகைகள் இடம்பெற்றன. ஆனால், 2003ஆம் ஆண்டில் நடைபெற்ற கக்குகையுடன் ஒப்பிடும் போது அவை மிகச்சிறியனவே! குறிப்பிட்ட மூன்று துளைகளில் இருந்தும் வரும் சூரியனின் 'எக்ஸ்' சுவாலைகள் கடந்த 35 வருடங்களாக அளக்கப்பட்டு வருகின்றன. அண்மைக்கால நிகழ்வுகள், சூரியனில் பெரும் குழப்பமான பௌதிக நிகழ்வுகள் இடம் பெறத்தொடங்கியுள்ளனவா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன. எவ்வாறாயினும் மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட சூரியக் கோளின் எதிர்காலத்தைக் கணிப்பிட இத்தரவுகள் போதுமானவை அல்ல.

இவ்வாறான சூரிய குழப்பங்கள் நடைபெற்றால் மோசமான அதிசயங்கள் பலவும் நடக்கலாம் என 'நாஸா' விண்வெளி விஞ்ஞானியான டேவிட் காந்தவே கூறுகிறார். 2003 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி கக்குகை நடைபெற்ற போது [illegible] கலிபோர்னியா மீது இருந்தது. இதனால் ஏற்பட்ட வெப்ப அதிகரிப்பு அங்கிருந்த காடுகளை ஒட்டுமொத்தமாக தீ மூட்டியது. இது போன்ற தாக்கத்தினாலேயே கனடாவின் கியூபெக்கில் திடீரென மின் தடை ஏற்பட்டு அம்மாநிலமே ஸ்தம்பிதமடைந்தது. திடீரென மின்சாரம் தடைப்பட்டு, அலைவரிசைகள் பாதிக்கப்பட்டு செய்மதிகள் இயங்கமுடியாத நிலையெல்லாம் ஏற்பட இந்தச் சூரிய குழப்பங்களே காரணம் என டேவிட் காந்தவே கூறுகிறார்.

இக்குழப்பங்கள் மேலும் அதிகரித்தால் என்ன நடைபெறும் என்பதற்கு டேவிட் காந்தவே மேலும் பல உதாரணங்களை கூறுகிறார். தெளிவான கோடை நாள்களிலேயே பனிப்புயல் வீசலாம். அகால மழை பொழியலாம். இவ்வாறு கால நிலைகளில் மாற்றம் ஏற்படும் என்கிறார், அந்த விஞ்ஞானி.

சூரியனில் உள்ள துளைகளில் மிகவும் பெரியது 'எக்ஸ் - 486' என்ற இலக்கமுடைய துளையாகும். 2003 ஆம் ஆண்டு நவம்பரில் இடம்பெற்ற கக்குகையின் போது இதனுடைய பார்வை முகம் பூமியை நோக்கி இல்லாமல் போனதால் மேலும் பல தாக்கங்களில் இருந்து பூமி தப்பித்துக் கொண்டது. இது போன்ற தாக்கம் 2006ஆம் ஆண்டிலும் இடம் பெறலாம் என எதிர்வு கூறப்படுகிறது.

இப்போது கக்குகைகள் நின்றுபோய் சூரிய மேற்பரப்பு அமைதியாக காணப்படுகின்றது. அங்கே அணைந்த எரிமலை



**சூரிய மேற்பரப்பில் காணப்படும் 'எக்ஸ்' ரக ராட்சத துளைகள் நவீன தொலைகாட்டி மூலம் அவதானிக்கப்பட்ட போது தென்படும் விதம்...**

யின் வாய்போல மூன்று பெரும் சூளைத் துவாரங்களும் காணப்படுகின்றன. பெருந்துளையான 'எக்ஸ் - 486' இன் பார்வை தற்போது பூமியில் இருந்து விலகியுள்ளது. மறுபடியும் பூமி இதைப் பார்க்கும் போது காலநிலையில் மாறுதல்கள் ஏற்பட இடமுண்டு. இது போன்ற நிகழ்வுகள், சூரியனில் அப்போது நிகழும் என்று அறுதியிட்டுக் கூற இயலாது என்பது மட்டுமே சொல்லக் கூடிய உண்மையாக உள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## University of Jaffna, Sri Lanka
Professor Alagaiah Thurairajah
Memorial Lecture

*Date & Time:* 03rd July 2004 at 09.00 a.m.
*Venue:* **Kailasapathy Auditorium, University of Jaffna.**
*Delivered by:* Professor **Dayantha S.Wijesekera**
Vice-Chancellor, University of Moratuwa.
DEC(Eng.); PhD(Edin.); DUniv(Ouuk.); D.Litt(Ousl)
*Title:* **"Engineering Education"**
(The need to Engineer Education)
Those who are interested are Cordially invited
(சி-35923)(34-16) **Vice - Chancellor.**

## இணுவில் மத்திய கல்லூரி பவளவிழா

எங்கள் கல்லூரியின் பவளவிழா இந்த ஆண்டு சிறப்பாகக் கொண்டாடப் படவுள்ளமையை முன்னிட்டு "பவளவிழாச் சபை" ஒன்று அமைக்கப்பட வுள்ளது. இதன்பொருட்டு பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், இணுவில் விளையாட்டு மைதான நிதிய உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஓய்வு பெற்ற அதிபர்கள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், நலன்விரும்பிகள், பிரமுகர் கள் யாவரையும் 04.07.2004 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்திற்கு வருகைதருமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

துரை எங்கரசு
அதிபர், யா/இணுவில் மத்திய கல்லூரி.
(33593)(34-16)

## சிறுவர் இல்ல முகாமையாளர்களுக்கான சிறுவர் உரிமைகள் பயிற்சிப் பட்டறை

**காலம்:** இன்று (01.07.2004) வியாழக்கிழமை
காலை 9.00 மணி,
**இடம்:** யாழ். சமூக செயற்பாட்டு மையம்
159, 4 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்.
(யாழ். நீதிமன்றத்திற்கு அருகில்)

வடக்கு - கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் நலச்சேவைகள் அமைச்சின் அலுவலர்கள் கலந்துகொள்ளும் இப்பயிற்சிப்பட்டறையில் அனைத்து சிறுவர் இல்ல முகாமை யாளர்களையும் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்

- மாவட்ட கண்காணிப்புக்குழு
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு (C/35928)(38-16-34)



அமைதி நிலைநிறுத்தி! வளமான வாழ்விற்கு
வழிகாட்டிடுவாய் அன்னையே! நின்தாள் பணிந்து வேண்டுகின்றோம் எம் தாயே!

## ஏசியன் தளபாட நிலையம்



- நம்பிக்கை வாய்ந்த நவீன தளபாடங்கள்
- உறுதிமிக்க உயர்ரகங்கள்

மரத்தளபாடங்களா? உருக்குத் தளபாடங்களா? மெத்தைகளா?
உங்கள் தேவை எதுவோ அனைத்தும் எங்களிடம்

***Specialist for Steel and Wood Furniture and all kind mattresses***

உங்கள் தெரிவுக்கு இன்றே முந்துங்கள்!

**ASIAN** **ஏசியன் தளபாட நிலையம்**
No.133, Power House Rd., Jaffna. (சி-35880) 133. மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்.



தேரேறும் தாயே! அம்மா நாகபூஷணியே!!
அருள்வாய் நல்லாசி அடியவர் அமைதிக்காய்!

## V.S.P. லஞ்ச் ஒயில்

- உணவுத் தேவைகளுக்காகச் சுத்தமாகச், சுகாதாரமுறைப்படி தயாரிக்கப்பட்டது.......
- இல்லத்தரசிகளின் இதயத்தில் நிறைந்தது............

## V.S.P. நல்லெண்ணெய்

பரிமளா ஸ்ரோர்ஸ்,
26A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

**T.P.:021-222 2785**
(சி-35905)

இன்று தேரேறும் எம் அன்னையே! எம்மவர் வாழ்வில் அமைதி நிலைத்திட அருள்வாய் அம்பிகையே!!
உன்னத கலைநயம் மிக்க நகைகளை உங்கள் எழில்மிகு வளம்பெற....அதிநவீன மோஸ்தர்களிலான நகைகளுக்கு.........



## சிறி சிவாஞ்சனா

தங்கநகை வியாபாரம்

## நகையகம்



☎ 012-2225481
149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
176/01, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(C/35885)

மென்மைக்கு மெருகேற்றும்.... இளமைக்கு எழிலூட்டும்.... ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

உ
சிவமயம்

# விவாக சோபன அழைப்பு

அன்புடையீர்!
ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான தாரண வருடம் ஆனித்திங்கள் 19ஆம் நாள் (03.07.2004) சனிக்கிழமை பிரதமை திதியும், சித்தயோகமும் உத்தராட நட்சத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 10.58 மணிமுதல் 11.50 மணிவரையுள்ள கன்னிலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

திரு.திருமதி ந.அம்பலநாதர் தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**ஆனந்தகணேஷன்**
அவர்களுக்கும்

வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் பிரதம குரு
சிவஸ்ரீ சோ.தண்டபாணிகதேசிகர் (J.P.) தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி
**தீபா**
அவர்களுக்கும்

(33624) (24)

இறைவன் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெற இருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்துத் திருமண விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி ந.அம்பலநாதர் குடும்பம்
திருமதி ச.விஜயரத்தினக் குருக்கள் குடும்பம்
"கீதா கோட்டம்"
புற்றளைப் பிள்ளையார் கோயிலடி,
புலோலி தெற்கு, புலோலி.
T.P.: 021 2263112.

சிவஸ்ரீ சோ.தண்டபாணிகதேசிகர் (J.P.) குடும்பம்
பிரதம குரு. வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்
"அன்னை இல்லம்"
வன்னிச்சி அம்மன் கோயிலடி,
வல்வெட்டி, வல்வெட்டித்துறை.
T.P.: 021 2263185, 0602 212267

(இருவீட்டார் அழைப்பு)

(33624)(24-34-16)

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழீழ இளையோர் தேசிய தடகள விழா இருதினங்கள் யாழ்.பொது விளையாட்டரங்கில்

யாழ்ப்பாணம்,ஜூலை1

தமிழீழ விளையாட்டுத்துறை நடத்தும் தமிழீழ இளையோர் தேசிய தடகள விளையாட்டு விழா எதிர் வரும் சனிக்கிழமையும் ஞாயிற்றுக் கிழமையும் யாழ்.பொதுவிளையாட் டரங்கில் நடைபெறவுள்ளது.

சனிக்கிழமை காலை 8மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வில் அணி ஒழுங் கினைத் தொடர்ந்து பொதுச்சுடர் ஏற் றல், தேசியக்கொடியேற்றல், அகவணக் கம், விளையாட்டுத்துறைக் கொடி யேற்றல், மாவட்டக்கொடிகள் ஏற்றல், ஒலிம்பிக்தீபம் ஏற்றல், சத்தியப்பிர மாணம் செய்தல் ஆகியன இடம் பெறும். அதனைத் தொடர்ந்து போட் டிகள் ஆரம்பமாகும்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு ஆரம பமாகும். போட்டிகளின் நிறைவில் விருந்தினர் உரைகள், பரிசில் வழங் கல் ஆகியன இடம்பெறும்.

இந்த விளையாட்டு விழாவில் யாழ்ப் பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த ஆயி ரத்து 500 வீரவீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

வெளிமாவட்டங்களில் இருந்து வருகைதரவுள்ள வீர, வீராங்கனைக ளுக்கான போக்குவரத்து மற்றும் தங்குமிடம், உணவு போன்றவற் றைத் தமிழீழ விளையாட்டுத்துறை ஒழுங்குசெய்துள்ளது. விளையாட்டு விழாவுக்குரிய ஒழுங்குகளை யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கம், யாழ். மாவட்ட மெய்வல்லுநர் தொழில்நுட்ப உத்தியோகத்தர் சங்கம் ஆகியன மேற்கொண்டுள்ளன.

(10-190)

# நான்கு தொகுதிகளாக நடைபெறவுள்ள மாகாணப் பாடசாலைகள் விளையாட்டு

யாழ்ப்பாணம்,ஜூலை1

வடக்கு-கிழக்கு மாகாணப் பாட சாலைகளின் விளையாட்டுப்போட்டி எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகி நான்கு தொகுதிகளாக நடைபெறவுள ளன.

முதல் தொகுதியாக உடற்பயிற் சிப் போட்டி வவுனியா நகரசபை மைதானத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறும்.

இரண்டாவது தொகுதியாக எதிர் வரும் 7 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ள போட்டிகளும் வவுனியாவில் நடை பெறவுள்ளன. பெண்களுக்கான கபடி, எல்லே, கரப்பந்து, வலைப பந்து மற்றும் இருபாலாருக்குமான பட்மின்ரன், மேசைப்பந்து, சதுரங்கம் ஆகிய போட்டிகள் இக்காலப்பகுதி யில் நடைபெறும்.

மூன்றாவது தொகுதிப் போட்டி கள் திருகோணமலையில் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. ஆண்களுக்கான கபடி, எல்லே, உதை பந்தாட்டம், கரபந்தாட்டம், கிரிக்கெட் ஆகியன நடைபெறும்.

நான்காவது தொகுதியாக மெய வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 24 ஆம் திகதியில் இருந்து 27 ஆம் திகதி வரை நான்கு தினங்கள் திரு கோணமலை மக்கெயசர் விளையாட டரங்கில் நடைபெறவுள்ளன. (10)

## கொழும்பில் நடைபெறவுள்ள

# டெனிஸ் போட்டிகளில் கலந்துகொள்வதற்கு சென்.ஜோன்ஸ், சென்.பற்றிக்ஸ் கல்லூரிகள் தெரிவு

அகில இலங்கை டெனிஸ் சங்கத் தின் அனுசரணையுடன் 11 வயதிற் குட்பட்டோருக்கான பாடசாலை மட்ட டெனிஸ் விளையாட்டுப்போட்டி கொழும பில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள் வதற்காக யாழ்.பரியோவான் கல்லூரி, யாழ்சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகிய இரு பாடசாலைகளும் யாழ் மாவட்ட டெனிஸ் சங்கத்தினால் தெரிவு செய யப்பட்டுள்ளன.

சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கான மேற்படி போட்டிகள் எதிர்வரும் 3 ஆம, 4ஆம், 5ஆம் திகதிகளிலும் பரியோ வான் கல்லூரிக்கான போட்டிகள் 10 ஆம், 11 ஆம், 12 ஆம் திகதிகளி லும் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளில பங்குபற்றுவதற்காக பற்றிக்ஸ் அணி இன்று வியாழக்கிழமை கொழும்பு செல்லவுள்ளது

மேற்படி போட்டியில் மூன்று ஒற் றையர் ஆட்டங்களும், இரண்டு இரட் டையர் ஆட்டங்களும் நடைபெறவுள் ளன.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பாட சாலைகள் டெனிஸ் போட்டியில் பங்குபற்றுவது இதுவே முதல்தடவை என யாழ் மாவட்ட டெனிஸ் சங்க இணைப்பாளர் ஜே.சகாயராஜா தெரி வித்தார். (10-190-ரி)

# மாகாணமட்ட உதைபந்தாட்டப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணி சம்பியன்

மன்னார்,ஜூலை1

வடக்கு - கிழக்கு மாகாண விளை யாட்டுத் திணைக்களத்தினால் நடத் தப்பட்ட மாகாண மட்ட உதைபந் தாட்டச் சுற்றுப்போட்டியில் மட்டக் களப்பு மாவட்ட அணி சம்பியனாகி யுள்ளது.

மன்னார் மாவட்ட பொதுவிளை யாட்டரங்கில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து மட்டக் களப்பு மாவட்ட அணி விளையாடியது.

இதில் 2-0 என்ற வித்தியாசத் தில் மட்டக்களப்பு மாவட்ட அணி வெற்றியீட்டியதன் மூலம் சம்பியன் கிண்ணத்தைத் தட்டிச் சென்றது.

யாழ். மாவட்ட அணி, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்ட அணிகளைத் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியிருந்தது.

மட்டக்களப்பு மாவட்ட அணி மன்னார் மற்றும் வவுனியா மாவட்ட அணிகளைத் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(10-190)

## சதுரங்கத் தெரிவுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை1

யாழ்.சதுரங்க சம்மேளனத்தினால நடத்தப்படும் இருபது வயதுக்குட்பட டோருக்கான மாவட்டமட்டத் திறந்த சதுரங்கத் தெரிவுப்போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டியிலிருந்தே 12,14, 16,18,20 வயதுக்குட்பட்டோர் தெரிவு இடம்பெறும் 'எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (10-ரி)

## மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி,ஜூலை1

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலைய மைதானத்தில் நிலையத் தலைவர் வை.இராசரத் தினம் தலைமையில் நடைபெறவுள் ளது.

முதன்மை விருந்தினராக நாடா ளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜும் சிறப்பு விருந்தினர்களாக தென்ம ராட்சி பிரதேச செயலக சிறுவர் நன னடத்தை அதிகாரி எஸ்சிவகரன், தென மராட்சி வலய உதவிக் கல்விப் பணிப் பாளர் சு.பாக்கியராசா ஆகியோரும் கலந்துகொள்வர்.

(10-117-86)

# முத்தரப்புக் கிரிக்கெட் தொடரில் நியூஸிலாந்துக்குக் கிடைத்த முதல் வெற்றி

லண்டன்,ஜூலை1

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் முத்தரப்புக் கிரிக்கெட் தொடரின் நான காவது போட்டியில் நியூஸிலாந்து அணி வெற்றியீட்டியுள்ளது.

இங்கிலாந்து, மேற்கிந்தியா, நியூ சிலாந்து அணிகள் பங்கேற்கும் ஒரு நாள் போட்டித் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் நான்கா்வது ஒரு நாள் போட்டியில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நியூஸிலாந்து வீரா பிராங்ளினின் அபார பந்து வீச்சினால் 32.5 ஓவருக்கே 101 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அந்த அணியில் அதிக பட்ச மாக டிரெஸ்கோதிக் மட்டும் 14 ஓட்டங்கள் எடுத்தார். நியூசிலாந்து அணியின் சார்பில் பிராங்ளின் 5 விக் கெட்டுக்களும் ஒரம் 3 விக்கெட்டுக் களும் கெய்ன்ஸ், வெட்டோரி ஆகி யோர் தலா ஒரு விக்கெட்டும் எடுத் தனர்.

இதையடுத்து துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 17.5 ஓவர்க ளில் 3 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 103 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற் றது. பிளமிங் 31 ஓட்டங்களும் ஸ்டை ரிஸ் 23 ஓட்டங்களும் எடுத்தனர்.10)

# மாகாண மட்ட விளையாட்டுத் தொடர்பாக

# மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அடைக்கலநாதன் எம்.பி. கடிதம்

மன்னார்,ஜூலை1

எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதி களில் வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டிகள் நடத்தப் படவுள்ளமையானது 20 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதிவரை தென் கொரியாவில் இடம்பெறும் உதைபந் தாட்டப் போட்டிகளில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாட சாலையின் உதைபந்தாட்ட அணி பங்குபற்றுவதைத் தடைசெய்வதாக அமையும்.

இவ்வாறு மன்னார் மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக கலநாதன் வடக்கு-கிழக்கு மாகாணக கல்விப் பணிப்பாளர் கே.விசாகலிங் கத்திற்கு அனுப்பி வைத்துள்ள கடி தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் அக்கடிதத்தில் மேலும் குறிப் பிட்டுள்ளதாவது:

மன்னார் புனித சவேரியார் ஆண் கள் தேசிய பாடசாலை அணி தென்கொரியாவில் எதிர்வரும் 20 ஆம திகதி ஆரம்பமாகும் உதைபந்தாட் டப் போட்டிகளில் பங்குபற்றத் தகுதி பெற்றுள்ளது.

அதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 17 ஆம், 18 ஆம் திகதிக ளில் நடத்தப்படவுள்ளமையானது அவர் களது தென்கொரிய பயணத்திற்குத் தடையாக அமையுமென மன்னார் பிர தேச மக்கள் கவலையடைந்துள்ள னர். எனவே, மாகாண மட்டப் போட் டித் திகதியை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் - என்றுள்ளது. (10-ரி)

## அரையிறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை1

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணத் திற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறவுள்ள அரையிறுதி யாட்டங்கள் வருமாறு:

★காலை 8.30 மணி யங்ஸ்ரார் வி.க. எதிர் பற்றீசியன் வி.க.

★பிற்பகல் 1.30 மணி கே.சி.சி.சி வி.க. எதிர் யாழ்.பல்கலைக்கழகம்.

(10-190)

# இன்று ஆரம்பமாகவுள்ள போட்டியில் ரிக்கி பொண்டிங் விளையாடமாட்டார்



ஆஸ்திரேலியாவில் இன்று ஆரம்பமாக வுள்ள இலங்கை அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணியின் தலைவர் பொண்டிங் பங்கேற்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது இவருக்குப் பதிலாக அணியின் தலைவர் பொறுப்பை அடம் கில் கிறிஸ்ட் ஏற்கவுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியா வில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங் கேற்கிறது.

இதில் 'தூஸ்ரா' பந்து வீச்சுத் தொடர்பான பிரச்சினை காரணமாக முரளிதரன் பங்கேற்க வில்லை. இதனால் சுவாரஷயம் குறைந்து போன இத்தொடருக்கு மேலும ஒரு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. எனினும் எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இரண்டாவது டெஸ்டில் பொண்டிங் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆஸ்திரேலிய அணி: கில்கிறிஸ்ட், மத்தியூ ஹைடன், சைமன் காடிச், டெரன்லேமன், மார்ட்டின், டைட், ஷேன்வோர்ன், பிரட்வில்லியம்ஸ், ஜஸ்ரின் லாங்கர், கஸ்பரோவிச், கிளென்மக்ராத்.

இலங்கை: மாவன் அத்தப்பத்து, சனத் ஜயசூரியா, ரசல் ஆர்னோல்ட், உப்புள் சந்தன, திலகரட்ண தில்சான், தில்கார பெர்னான்டோ, மஹேல ஜெயவர்த்தன, ரொமேஸ் களுவிதாரண, பர்வேஸ் மஹரூப், திலான் சமர வீர, சமிந்தவாஸ், நுவான்சொய்சா. (10)

# விளையாட்டு

# ஒலிம்பிக் போட்டிக்கான ரிக்கெற் விற்பனை மிகவும் குறைவு

எதென்ஸ்,ஜூலை1

ஒலிம்பிக்போட்டிகள் ஆரம்பமாக இரண்டு மாதங்கள் கூட முழுதாக இல்லாதபோதும் ரிக்கெற் விற்பனை மந்தமாக இருப்பதாகப் போட்டி அமைப பாளர்கள் தெரிவித்துள்ளனர். குறை வான ரிக்கெற்றுக்களே விற்கப்பட் டுள்ளன.

கிறீஸ் தலைநகர் எதென்ஸ் நக ரில் ஓகஸ்ட் 13இல் ஒலிம்பிக் போட் டிகள் ஆரம்பமாகின்றன. ஒலிம்பிக் போட்டி என்றாலே... உலகெங்கும் ஆர்வம் வரத்தான் செய்யும். ஆனால், தீவிரவாதிகளின் தாக்குதல் அபாயம இம்முறை தலையெடுத்திருப்பதால், சர்வதேச ரசிகர்கள் - குறிப்பாக ஐரோப பிய நாடுகளைச் சேர்ந்த ரசிகர்கள் கிறீஸ்வரத் தயங்குகின்றனர்.

இதன்காரணமாக, இம்முறை ஒலிம பிக்போட்டிகளுக்கான ரிக்கெற் விற் பனை மிகவும் மந்தமாக இருக்கின் றது. ஒலிம்பிக் போட்டிகளுக்காக அடிக கப்பட்ட மொத்த ரிக்கெற் எண்ணிக்கை 53 லட்சம். ஆனால், இதுவரை விற் பனை செய்யப்பட்டது இருபது லட் சத்துக்கும் குறைவே. அரைவாசிக் கும் குறைவான ரிக்கெற்றுக்களே விற்பனையாகி உள்ளதால், போட்டி அமைப்பாளர்கள் கிறீஸ் ஒலிம்பிக் அமைப்பு ஆகியவை கவலையில் ஆழ்ந்துள்ளன.

(10)



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன பாலர் பாடசாலையின் விளையாட்டுப்போட்டி கடந்த 27 ஆம் திகதி நடைபெற்றது. நிகழ்வில் கலந்துகொண்ட நல்லூர் பிரதேச செயலர் திருமதி எஸ். தெய்வேந்திரன், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீஸன், நல்லூர் இந்து தமிழ்பெண்கள் பாடசாலையின் உப அதிபர் ... சமுலக திட்டப் பணிப்பாளர் எஸ். ரவீந்திரசர்மா, கிராம அலுவலர் அ.சந்திரகுமார் ஆகியோரை முதறபடத்திலும் போட்டி களில் கலந்து கொண்ட சிறுவர்களை அடுத்துள்ள படத்திலும் காணலாம். *(படங்கள்அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரும்புலிகள் நினைவுதின விளையாட்டுப் போட்டி

குடத்தனை,ஜூலை1

கரும்புலி கப்டன் மில்லரின் நினை வாகவும் அதற்குப் பின்பு கரும் புலி யாகி வீரச்சாவடைந்த 261 கரும்புலி களின நினைவாகவும் துன்னாலை கலி கைக் கந்தன் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் விளையாட்டுப் போட்டி கரும்புலிகள் நாளான ஜூலை 5 ஆம் திகதி காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

ஆசிரியர் எஸ்செல்லத்துரை தலை மையில் துன்னாலை கலிகைக் கந் தன் ஆலய முன்றிலில் நடைபெறும் இந்த விளையாட்டு நிகழ்வில் பொதுச சுடரினை வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இ. தயா ஏற்றிவைக்க தேசியக் கொடியினைத் தமிழீழ விளை யாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா ஏற்றிவைக்கவுள்ளார். அதனைத் தொடர்ந்து கரும்புலி கப்டன் மில் லரின் தாயார் திருமதி வ.கமலா தேவி கரும்புலிகளின் பொதுத்திருவு ருவப் படத்திற்கு ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவிப்பார்.

இங்கு நடைபெறவுள்ள விளை யாட்டுக்களை வடமராட்சி மகளிர் அர சியல்துறைப் பொறுப்பாளர் செல்வி வ.வருணாவும் யாழ் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்களான கி.சிவநே. சன், செ.கஜேந்திரன் ஆகியோரும் ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

மேற்படி விளையாட்டுப் போட்டி யில் 10 மைல் மரதன் ஓட்டம், 60 மைல் சைக்கிள் ஓட்டம், கிறீஸ்கம் பம் ஏறுதல், கயிறு இழுத்தல் மற் றும் மைதான விளையாட்டுக்கள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

(-10-78)

நினைவுகள் நிலைத்திட

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வன்

**கிருஸ்ணர் சுகுமார்**

**(குமார்)**



தாயின் மடியில்
06-02-1972

மண்ணின் மடியில்
12-07-2003

நினைவுகள் நிலைத்திட...
நினைவுகளுடன் நாம்...
நித்தம் நிலை கலங்க...
நீர்த்துளி சிந்த...
நின்னுயிர் நீத்த மாயம் தான் என்ன?
நிம்மதியாய் - நீ - நிலைபெற்று விட்டாய்
நின் துயரம் மட்டும் நிலையானது ஏனோ?

மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

(33634)(14-16-21)

தகவல்:
குடும்பத்தினர்.


## வீரவேங்கையின் வித்துடல் விதைப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர் 'வீரவேங்கை சமுத்திரர்' என்றழைக்கப்படும் தர்ம லிங்கம் தங்கையா சுகவீனம் காரண மாகக் கடந்த ஞாயிறன்று சாவடைந் துள்ளார்.

இவருடைய வித்துடல் கடந்த செவ் வாயன்று சமபூர் மகாவித்தியாலயத் தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப் பட்டுப் புலிகளின் இராணுவ மரியாதை யுடன் ஆலங்குளம் துயிலும் இல் லத்தில் விதைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பல நூற்றுக்கணக் கான மக்கள் கலந்துகொண்டனர்.

திருகோணமலை பன்குளம் 6 ஆம் வாய்க்கால் என்ற இடத்தைச் சேர்ந்த இப்போராளி இரண்டு பிள்ளை களின் தந்தை என்பதும் குறிப்பிடத் தக்கது.


**உடன் தேவை**

**பேக்கரி வேலையில் அனுப வம் உள்ளவர்கள் உடன் தேவை. நேரில் வரவும்.**
(சி-35932)

**பைந்தமிழ் பேக்கரி, சாவகச்சேரி.**



உ

யாழ்ப்பாணம்
புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தின்
அனுசரணையுடன் நடைபெறும்

**அருணகிரிநாதர் விழா - 2004**

**இடம்:** சந்நிதியான் ஆச்சிரமம்
**காலம்:** 02-07-2004 வெள்ளிக்கிழமை
**நேரம்:** காலை 10.00 மணி

**தலைமையுரை:** பிரம்மஸ்ரீ காரை.கு.சிவராஜசர்மா
**சிறப்புரை:** செஞ்சொற்செல்வன் இரா.செல்வவடிவேல்
**கதாகாலாட்சேபம்** "முருகனும் அருணகிரியும்"
**வழங்குபவர்:** கலாபூசணம் Dr.இரா. சிவஅன்பு (பக்கவாத்தியங்கள் சகிதம்)
**திருப்புகழ் பஜனை:** முருகன் அடியார்கள்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை
பண்பாட்டுப் பேரவையினர்.

(சி-35925)(21-14-16)



# 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
26 - 10 - 1926

விண்ணில்
01 - 07 - 1986

## சி. அழகரத்தினம்

(ஓய்வுபெற்ற பிரதம தபாலதிபர்)

**அப்பா நீங்கள் இல்லாத உலகில்**
**அநாதைகள் நாங்கள் இங்கே**
**ஆறுதல் யாரும் இன்றித்**
**தவிக்கின்றோம்**
**ஆற்றிட இவ்வுலகிற்கு வாருங்கள்.**

கலங்கித் தவிக்கும் உள்ளங்கள்:
**மனைவி, பிள்ளைகள்.**

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(33342)(14-16-21)



உ

ஹரி ஓம் நாராயணாய நம



**அளவெட்டி நாகேஸ்வரம்**

## ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்

# மணவாளக்கோல விழா

மெய்யன்புடையீர்!

ஸ்ரீ நாகவரத நாராயணப் பெருமானின் மணவாளக்கோல விழா (04.07.2004) தாரண வருடம் ஆனி மாதம் 20 ஆம நாள் ஞாயிற்றுக்கிழமை நிகழும். அன்றைய தினம் புதிதாக அமைத்த வசந்தமண்டபத் திறப்பு நிகழ்வும், பரிவார மூர்த்திகளான ஸ்ரீமுருகன், ஸ்ரீராமர், ஆஞ்சநேயர், சந்தான கோபாலர், வைரவர் இவர்களின் பிரதிஷ்டா கும்பாபிஷேகமும் நடைபெறும். அன்படியார் அனைவரும் தரிசித்து நலம்பெறுமாறு வேண்டுகின்றோம்.

### நிகழ்வுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 02. 07. 2004 | வெள்ளி | மு.ப. | 8.00 மணி தொடக்கம் | ஆரம்ப கிரியைகளும் பிரதிஷ்டைகளும் |
| 03. 07. 2004 | சனி | மு.ப. | 8.30 மணிதொடக்கம் | |
| | | மாலை | 5.30 மணிவரை | எண்ணெய்க்காப்பு |
| 04. 07. 2004 | ஞாயிறு | மு.ப. | 7.00 மணி | சங்காபிஷேகம் |
| | | மு.ப. | 9.03-11.00 மணி | கும்பாபிஷேகம் |
| | | பகல் | 12.00 மணி | திருப்பொன்னூஞ்சல் |
| | | பகல் | 1.00 மணி | பிரசாதம் வழங்கல் |

நாகேஸ்வரம்,
அளவெட்டி.

(33587)(34-21-14-16)

*- பொறுப்புரிமைப் பரிபாலன சபையார்.*



# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
19 - 09 - 1921

மறைவு
03 - 07 - 2001

## திருமதி அருட்செல்வநாயகம் திலகவதி

(வெலிக்கந்தோட்ட பிள்ளையார் ஆலய முன்னாள் நிரந்தர தர்மகர்த்தா)

உங்கள் நலம் பேணாது எங்களை அரவணைத்த
அன்பின் தாயே! இன்று மூன்று ஆண்டுகள் கழிந்ததுவோ?
உங்கள் பாசத்திற்காகத் தவிக்கின்றோம்!
உங்களுக்கு நிகர் யார் எமக்கு? எங்கள்
நெஞ்சம் இருக்கும் வரை நினைவுகள் இருக்கும்.

தம்பதெந்தனை,
புன்னாலை வடக்கு.

(33516)(14-16-21)

பா.பாஞ்சாலி
(மகள்)



**நிவாரணம்,புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு**

வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள பாலங்களைப் புனரமைத்தல்

# பதவி வெற்றிடம்

கீழ்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் - 03 (Technical Officers)

**கல்வித் தகைமை, அனுபவம்**

* NDT கற்கைநெறியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
* குறைந்தது 5 ஆண்டுகள் மேற்குறிப்பிட்ட பதவியில் அனுபவம் வாய்ந்தவராயும், அரச தனியார் துறைகளில் கட்டட நிர்மாணத்துறை, நில அளவை ஆகியவற்றில் முன்னனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

2. வேலை மேற்பார்வையாளர் - 06 (Work Supervisors)

**கல்வித் தகைமை, அனுபவம்**

* NCT, NDT கற்கைநெறி சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
* குறைந்தது ஒரு வருடம் மேற்குறிப்பிட்ட பதவியில் அல்லது இதன் இணைந்த பதவியில் அனுபவம், பாலங்கள், கட்டட நிர்மாணத்துறையில் முன்னனுபவம் இருத்தல்வேண்டும்.

பொதுநிபந்தனைகள்

1. அரசசேவையில் இருந்து ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
2. சம்பளம் முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருப இல.10 இன்படி தீர்மானிக்கப்படும்.
3. ஆரம்பசேவைக்காலம் ஒரு வருடம். பின்னர் திறமையின் அடிப்படையில் காலநீடிப்புச் செய்யப்படும்.
4. விண்ணப்பதாரிகள் உங்கள் சுயவிவரக்கோவையினை *திட்டப்பணிப்பாளர், வடக்கு - கிழக்கு பாலங்கள் புனர்நிர்மாணத்திற்கான திட்டம், 6 ஆம்மாடி, 177 காலிவீதி, கொழும்பு-03* என்னும் முகவரிக்கு, இவ்விளம்பரம் பிரசுரித்து 7 நாள்களுக்குள் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்.
5. விண்ணப்பிக்கும் பதவியினை தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிட்டு அனுப்பு தல்வேண்டும்.

எம்.என்.ஜெயசிங்க,
செயலாளர், நிவாரண புனர்வாழ்வு
நல்லிணக்க அமைச்சு.

(சி-35924)(34-14-16-21)

Project Director,
**Rehabilitation of Bridges,**
**Ministry of Relief, Rehabilitation & Reconciliation,**
No.177, Galle Road, Colombo-03.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்மனத் தியானத்தில் இருந்தவேளை உண்டான உள்ளுணர்வு மூலமே கண்டுபிடிப்பைச் செய்தேன்



பாங்கொக் சத்யசாயி பல்கலைக்கழகத்தின் தலைவரும் நாஸா விஞ்ஞானியுமாகிய கலாநிதி ஆர்ற் ஒங் ஜூம் சாய் அண்மையில் இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்தார். அப்போது அவர் உதயனுக்கென அளித்த விசேட செவ்வி இது.

*கேள்வி:* ஒரு புகழ்வாய்ந்த நாஸா விஞ்ஞானியாகவும், அரசியல் வாதியாகவும் அமைச்சராகவும் இருந்த நீங்கள் எவ்வாறு ஆன்மீகத்துறைக்கு ஈர்க்கப்பட்டீர்கள்?

*பதில்:* நான் முதன் முதலில் சத்ய சாயிபாபாவைச் சந்தித்த போது மனிதத்துவம் சேராத விஞ்

## சமாதானம் நிறைந்த சமூகம் உருவாக ஒவ்வொரு மனிதனிடமும் சுயமாற்றம் தேவை

ஞானம் ஆபத்தானது என மிகத் தெளிவாகத் தெரிவித்தார். மேலும், நான் ஓர் அரசியல்வாதியாக இருந்ததால் கோட்பாடு இல்லாத அரசியலும் ஆபத்தானது எனத் தெரிவித்தார். இந்தக் கருத்து என்னை மிகவும் கவர்ந்தது. இது மிகவும் உண்மையானதே என உணர்ந்தேன்.

ஆகவே, விஞ்ஞானம் மனிதகுல சேவைக்கு உபயோகப்பட வேண்டும் எனவும் அது வெறும் பிரபலத்தைப் பெறுவதற்காகவோ பலம் வாய்ந்தவராக வருவதற்காகவோ விஞ்ஞானத்தைத் தவறாக உபயோகப்படுத்துவதற்காகவோ அல்ல என்றும் பாபா கூறினார்.

நான் ஒரு கல்வியாளன் என்பதால் ஒழுக்கம் இல்லாத கல்வியும் பயனில்லாதது எனவும் சுவாமி என்னிடம் தெரிவித்தார். எனவே, நாம் மாணவர்களதும் சிறுவர்களதும் கல்வியில் ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் வழங்கவேண்டும்.எமது செயற்பாட்டில் இது மிகவும் முக்கியமானது என்று நான் கருதுகிறேன்.

இந்தவகையில், சாயிபாபா எனது இதயத்தை ஆழமாகத் தொட்டதுடன் விஞ்ஞானம், அரசியல், கல்வித் துறைகளில் பணியாற்றத் தூண்டினார் எனலாம். இவ்வாறே நான் பாபாவின் பக்கம் ஈர்க்கப்பட்டேன்.

*கேள்வி:* தாங்கள் பௌத்த நாடான தாய்லாந்தைச் சேர்ந்தவர். உங்களைப் போன்று பல்வேறு சமயங்களைச் சார்ந்த பலரும் சாயி பாபா முன்னிலையில் பேதமின்றி சங்கமிப்பது எவ்வாறு சாத்தியமாகிறது?

*பதில்:* பாபாவின் முக்கிய பணி அம்சங்களில் ஒன்றாகக் கல்வி உள்ளது. அவர் பல்கலைக்கழகமொன்றின் வேந்தராகவும் உள்ளார். சிறுவர்களது கல்விக்காகச் செயற்படும் போது அது எல்லோருக்குமானதாகவே அமைகிறது. அது இந்தியாவுக்கோ அல்லது ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கோ இந்து மதத்திற்கோ மட்டுப்படுத்தப்பட்டதல்ல. அது பௌத்தத்திற்கும் கிறிஸ்தவத்திற்கும் இஸ்லாத்திற்கும் பொருத்தமானது. ஆகவே, ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கவும் கலந்துரையாடவும் நான் எங்கே சென்றாலும் அவர்கள் இதுபற்றி மிகவும் மகிழ்ச்சியடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

ஏனெனில், கல்வியின் முழுமையான கருத்துப்படி உண்மை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் நல்ல மாணவர்களையும் நல்ல மக்கள் சமுதாயத்தையும் உருவாக்க முடிகிறது. கல்வியின் முழுமையான இலக்கு மகளது வாழ்க்கைக்கானது. மக்களது சிறந்த வாழ்க்கையையும் சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் பெறுவதற்கானது.

நான் சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம் போன்ற பல நாடுகளுக்குச் சென்றபோது அங்குள்ளவர்கள் இந்தக் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டதைக்கண்டேன். அதேபோல் பௌத்தமதம் சார்ந்த தாய்லாந்திலும் இக்கோட்பாடுகளை ஏற்றுக்கொள்வதில் எமக்கு எதுவித பிரச்சினைகளும் இல்லை. இறுதியாக உண்மையே மேலோங்கி நிற்பதால் அங்குள்ள பௌத்த துறவிகளும் திருப்தியடைந்தவர்களாகவே உள்ளனர்.

விஞ்ஞானி என்ற வகையில் விஞ்ஞான முறைச் சிந்தனையூடாகப் பார்க்கும் போது இவை எல்லா மதங்களுடனும் கலாசாரங்களுடனும் ஒத்துப் போவதைக் காணக்கூடியதாக உள்ளது எந்தப் பிரச்சினையுமில்லை.

*கேள்வி:* சுவாமி நிகழ்த்திய ஆயிரமாயிரம் அற்புதங்களே அவரது பிரபலத்துக்குக் காரணங்களாக அமைந்ததாகக் கொள்ளலாம். கடந்த சிவராத்திரியில் கூட தமது உடலில் இருந்து திரவத்தை வாய் மூலமாக வெளிக்கொணர்ந்து சிவலிங்கத்தை உருவாக்கினார் எனக் கூறப்படுகிறது. ஒரு விஞ்ஞானி என்ற வகையில் இதை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

*பதில்:* அற்புதங்கள் தமது அழைப்பு அட்டைகள் என்றே சத்ய சாயிபாபா கூறியுள்ளார். மக்களைத் தம்பால் ஈர்ப்பதற்கும், அவர்களைப் புதியவழிகளில் சிந்திக்க வைப்பதற்கும் இவை நிகழ்த்தப்படுகின்றன. அற்புதங்களைப் பலர் நம்புவதில்லை. ஆகவே, அவர்கள் இவை பற்றிச் சிந்திக்க வேண்டும்; ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

ஒரு விஞ்ஞானி என்ற வகையில் நான் எப்பொழுதும் (Energy and matter can be interchanged) சக்தியும் ஜடப்பொருள்களும் ஒன்றுக்கொன்று மாற்றக்கூடியவை என்ற கோட்பாட்டை ஏற்றுக்கொண்டிருக்கிறேன். ஆகவே, மனோபலத்தைப் பாவித்து சக்தியை ஜடப் பொருளாக மாற்றமுடியும் விஞ்ஞானத்தில் இதனை ஓர் அந்நிய விடயமாக இனிமேலும் கொள்ளமுடியாது. ஏனெனில், ஐன்ஸ்ரீனின் தத்துவமும் இதுவே.

### வாழ்வு மாற்றமடைவதில்லை

*கேள்வி:* எமது தமிழ் தத்துவ ஞானியான திருவள்ளுவர் ஏழு பிறப்புக்கள் பற்றி எப்பொழுதோ கூறியிருக்கிறார். சுவாமியும், தாம் சீரடி பாபாவின் மறு அவதாரம் என்றும் இதற்குப் பின்னரும் தாம் ஓர் அவதாரம் எடுப்பார் எனவும் தெரிவித் திருக்கிறார். ஒரு விஞ்ஞானி என்ற வகையில் மறுபிறவி அல்லது அவதார விடயத்தை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

*பதில்:* விஞ்ஞானத்தில் எதுவும் எந்தக் காலத்திலும் அழிக்கப்பட முடியாதது என்று கூறப்படுகிறது. அவற்றில் சில கட்டங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள மொத்த சக்தி மாற்றமடையாதிருக்கும். இதை அழித்து விட முடியாது. ஆனால், அவை அவ்வப்போது ஓர் உருவத்திலிருந்து இன்னோர் உருவத்திற்கு மாறலாம். மீண்டும் முன்னைய உருவத்திற்கு இன்னுமொரு வடிவில் மாற்றமடையலாம். விஞ்ஞானத்தின் பிரகாரம் நிலை (State) மாற்றம் தொடர்ச்சியாக எலலாக் காலங்களிலும் நிகழ்கிறது. அதேபோல வாழ்வும் மாற்றமடைவதில்லை. வாழ்க்கை நிலையே மாற்றமடைகிறது. ஆகவே, விஞ்ஞானத்திலும் இதே கோட்பாடுதான்.

*கேள்வி:* ஏக காலத்தில் பல்வேறு இடங்களில் பிரசன்னமாக இருக்கக் கூடிய சக்தி பாபாவுக்கு உண்டு எனக் கூறப்படுகின்றது. சென்ற நூற்றாண்டில் இங்கு வாழ்ந்த யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளும் இந்த சக்தியைக் கொண்டிருந்தார் என நம்பப்படுகிறது. ஒரு விஞ்ஞானி என்ற வகையில் இது விஞ்ஞான ரீதியில் ஏற்றுக் கொள்ளக்கூடியதா என்பது பற்றி தங்கள் கருத்து...?

*பதில்:* சாயிபாபா தாம் மட்டும் அவ்வாறு சக்தியுள்ளவரென்று கூறவில்லை. அந்த ஆற்றல் நம் எல்லோரிடமும் உள்ளது. எமது தெய்வீகத்தை நாம் உணரலாம். உண்மையில் ஐன்ஸ்ரீன் போன்ற விஞ்ஞானியைப் பற்றிப் பார்த்தோமானால், அவர் உள்ளுணர்வு (Intuition) மூலம் புதியவை பலவற்றை ஒரு மின்னல் போன்ற (Flash) உணர்வில் சடுதியாகத் தெரிந்து கண்டுபிடித்தமையைக் காணலாம்.

என்னைப் பொறுத்தவரையில் அவ்வாறான அனுபவமே உள்ளது. நான் அதிகளவு தியானத்தில் ஈடுபட்டு வந்துள்ளேன். செவ்வாய்க் கிரகத்தில் மனிதகுல வரலாற்றில் தரையிறங்கிய "வைக்கிங்" விண்கலத்தை (Viking Space crafh) உருவாக்கியதில் நான் பெரிதாக உதவியதாக எண்ணவில்லை. கலிபோர்ணிய மலை உச்சியில் இருநதபோது அது ஆழ் மனத்தியானத்தில் (Meditation) பெற்ற உள்ளுணர்வு மூலமே செயற்படுத்தப்பட்டது. அதன மூலமே இந்த

## சத்தியசாயி பல்கலைக்கழகத் தலைவர் கலாநிதி ஜூம்சாய் கூறும் கருத்துக்கள்

விண்கலத்தின் தானியங்கி தரையிறங்கும் பொறியை என்னால் உருவாக்க முடிந்தது.

*கேள்வி:* சாயிபாபாவின் சக்திகளை மனித சக்திக்கும் விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் அப்பாற்பட்டவை எனக் கருதலாமா?

*பதில்:* ஆம். எம் எல்லோருக்கும் அவ்வாறு செயற்படும் ஆற்றல் உள்ளது. நாம் எல்லோரும் தெய்வீகத்தில் இணைந்துகொள்ளலாம். விஞ்ஞான ரீதியில் பார்த்தால் நாங்களும் அந்த முடிவில்லாத Super Conscience mind என்று கூறப்படுகின்ற அதியுயர் உணர்வில் இணைந்து கொள்ளலாம். அப்படிச் செய்தால் எங்கும் நிறைந்துள்ள அளவிட முடியாத (Infinite Knowledge) அறிவுக்குள் இணைந்துகொள்ளலாம்.

### சுயமாற்றம் தேவை

*கேள்வி:* இலங்கையைப் பொறுதத வரையில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ரணில்விக்கிரமசிங்க, அநுரா பண்டாரநாயக்க போன்ற பல அரசியல்வாதிகள் சாயிபாபா பக்தர்களாக உள்ளனர் எனினும், தமது அரசியல் வாழ்வில் மனதப் பெறுமதியை (Human value) மதித்து நடப்பதில்லை. ஓர் அரசியல்வாதி என்ற வகையில் இத்தகையோரின் மனங்களில் எப்படி இவற்றை மதித்து நடக்கும் மனப்பான்மையை



**உதயனுக்கு அளித்த சிறப்புச் செவ்வி**

வளர்க்கலாம் என்று கருதுகிறீர்கள்?

*பதில்:* இந்த நாட்டின் அரசியல் பற்றி எனக்கு அதிகம் பரிச்சயமில்லை. பிரதானமான விடயம் என்னவெனில், சுவாமியின் போதனைகளைத் தெரிந்து கொள்வது மட்டும் போதாது. அவற்றின் படி நடக்க வேண்டும். அப்படிச் செய்வதற்கு ஒரு சுயமாற்றம் (Self transformation) தேவை. சுயமாற்றம் இருக்குமேயானால் ஒருவர் வர்த்தகராகவோ அரசியல்வாதியாகவோ, ஆசிரியராகவோ அல்லது வேறெந்தத துறை சார்ந்தவராகவோ இருப்பினும் சகலமும் நேர்த்தியானதாக இருக்கும். அப்பொழுது ஒரு நேர்த்தியான சமாதானம் நிறைந்த சமூகம் உருவாகும்.

**செவ்வி கண்டவர்:**

**சி.வி.கே.சிவஞானம்**

*கேள்வி:* தங்களது யாழ்ப்பாண விஜயம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

*பதில்:* நான் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன். இங்குள்ளவர்கள் எமக்கு சிறப்பான வரவேற்பையும் உபசரிப்பையும் வழங்கியுள்ளனர். இங்குவந்து சேர்ந்த பின்னர் நான் என்னை யாழ்ப்பாணத்தின் ஓர் அங்கமாகவே கருதுகிறேன். ★

# யாழ்.போட்டியாளருக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜூலை1

தமிழீழ விளையாட்டுத்துறையினரால் நடத்தப்படும் இளையோர் தடகள போட்டிகளுக்காக யாழ். மாவட்ட போட்டியாளர்களைத் தெரிவு செய்தவற்கான பயிற்சி முகாம் நாளை வெளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மட்ட, மாவட்ட மட்டப் போட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்யப்பட்ட போட்டியாளர்களின் பெயர் விவரங்கள் அவ்வப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட போட்டியாளர்கள் பாடசாலைகளின் அனுமதியுடன் குறிப்பிட்ட நேரத்திற்கு மைதானத்திற்கு சமுகமளிக்குமாறு யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் வி.மாதுளன் கேட்டுள்ளார். (ஒ-5)

# அரச அச்சகத் தீக்கு கவனயீனம் காரணம்

கொழும்பு,ஜூலை1

பல கோடி ரூபா பெறுமதியான நஷ்டத்தை ஏற்படுத்திய அரசாங்க அச்சகத் தீ விபத்துக்கு கவனயீனமே காரணம் என்று தெரியவந்துள்ளதாம்.

களஞ்சியப் பொறுப்பாளர் கவனயீனமாக செயற்பட்டதன் விளைவாகவே இந்த விபத்தும் சேதமும் ஏற்பட்டுள்ளன. இதனை அரசாங்க அச்சகர் நெவில் நாணயக்கார தெரிவித்தார்.

வேலை முடிந்ததும் களஞ்சியத்துக்கு சீல்வைத்து மூடுவதற்கு பயன்படுத்திய மெழுகுவர்த்தியை களஞ்சியப் பொறுப்பாளர் அணைக்காமல் அவ்விடத்திலேயே அப்படியே விட்டுச்சென்றுள்ளார். இதனாலேயே தீ மூண்டுள்ளது என விசாரணைகள் புலப்படுத்தியுள்ளன. களஞ்சியப் பொறுப்பாளரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர். (க)

## குளத்தில் வீழ்ந்து வயோதிபர் மரணம்!

யாழ்ப்பாணம்,ஜூலை1

குளத்தில் மீன்பிடிக்கச் சென்ற வயோதிபர் தவறிக் குளத்தில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறையில இடம்பெற்றுள்ளது. நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை குமாரவேல் (வயது70) என்ற வயோதிபரே உயிரிழந்தவராவார்.

உயிர் இழந்தவரின் சடலம் குளத்தில் இருந்து மீட்கப்பட்டு நேற்று யாழ். வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டு யாழ்.வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-6)

## அருணகிரிநாதர் விழா

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் அனுசரணையுடன் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நாளை முற்பகல் 10.30 மணிக்கு [illegible] விழாவில் [illegible] சிவஅடியு சொற்பொழிவு நிகழ்த்துவார். (ஒ-173)

# நூலக டிப்ளோமா கற்கை: 57 பேர் புதிதாகத் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூலை1

யாழ். பல்கலைக்கழக நூலகமும் தகவல் விஞ்ஞானமும் தரம் I டிப்ளோமா கற்கைநெறிக்குத் தெரிவானோர் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவான 57 பேரின் பெயர்கள் வருமாறு:-

செந்தூரன் சின்னராஜா, சிவானந்தம் தருமராசா, திலீபன் சுவாமிநாதன், ரவிக்குமார் தெய்வேந்திரம், மதுமதி தர்மபாலன், இராஜேஸ்வரன் சுப்பிரமணியம், சரவணபவன் சபாரட்ணம், கார்த்திகா இராகவன், கே.ஜரின் ஷிரோமி, ரோஜர் துஷ்யந்தன் -

ராதிகா வேலுப்பிள்ளை, கஸ்தூரி செல்வநாதன், சிந்துஜா மகாலிங்கம், துர்க்கா பேரின்பநாயகம், தமயந்தி துரைராஜா, தாட்சாயனி நடராஜா, உதயதர்ஷினி சற்குணசிங்கம், பாரதி காராளசிங்கம், ரஞ்ஜனா குணரட்ணம், சந்திராதேவி கோபால் -

கலைச்செல்வன் தனபாலசிங்கம், வைதேகி சுந்தரகாந்தன், மணிவண்ணன் நல்லதுரை, சசிதா நடராசா, மகேஸ்வரன் கணபதிப்பிள்ளை, ஜெயசோதி கணபதிப்பிள்ளை, உஷாலினி சந்திரகுலசிங்கம், ஜெயந்தி நடராசா, லதா பத்மநாதன், கெய்ன் சார்ள்ஸ -

சுரேஸ்குமார் சுப்பிரமணியம், விஜயசொரூபி, ஜமுனாமலர் சந்திரசேகரம், தன்மோல் தவராசா, நிசாயினி பரமசாமி, வாசுகி மதியாபரணன், பார்த்தசாரதி ராஜேந்திரன், சுகிர்தா சிவானந்தன், தர்மிலா சந்திரசேகரம், கவிதா கணேசமூர்த்தி-

வித்யா சண்முகலிங்கம், மீரா பார்த்தீபன், அமிர்தவர்ஷினி கிருஸ்ணானந்தன், சாலினி சண்முகம், ரஜீபன் குலசிங்கம், கணேசலிங்கம் வேதநாயகம், தினேஸ் சபாபதிப்பிள்ளை, பிரியதர்ஷினி, வெற்றிவேல் விநாயகமூர்த்தி, றுஜினா பாக்கியநாதன், நளினி நகுலேஸ்வரன்

மனதீபன் திருஞானம், சுகி சந்திரசேகரம், சுபைதா ஆன[illegible] கிரிதரன் விஸ்ணுமூர்த்தி, சுதாமதி தேவமனோகரன், தேவரஞ்சினி விநாசித்தம்பி, திருமதி சுபாஜினி சந்திரகுமார். (ஐ-10-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, டச்சு வீதி, மருதடிச் சந்தியில் வீடுகட்டுவதற்கு உகந்த தென்னை வளம் உள்ள 2½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:திரு.சி.கமலநாதன், கந்தசுவாமி கோயில்வீதி, சங்கத்தானை. T.P.:0777 676593. (35584)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் 1½ பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளுடனும் கூடிய மாடிவீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:விளம்பர இல: 2312, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (சி-35933)

## வாகனம் விற்பனைக்கு

ஹொண்டா CD 200 உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:T.P.:0777 4248880. (33364)

57xxxx தொடர் இலக்கமுடைய டொல்பின் ரக Hiace Van விற்பனைக்கு உண்டு.தொடர்பு:T.P:077 6280153. (சி-35851)

## மணமகன்கள் தேவை

1972 இல் பிறந்த, பூச நட்சத்திரம் 6 இல் செவ்வாயுள்ள, கொழும்பில் தனியார் துறையில் பணிபுரியும் பெண்ணுக்கும் 1971 இல் பிறந்த பூரட்டாதி (முதலாம் கால்) நட்சத்திரம், 6இல் செவ்வாயுள்ள, கொழும்பில் பொறியியலாளராகப் பணிபுரியும் பெண்ணுக்கும் உள்ளூரிலோ, வெளியூரிலோ தகுதியான மணமகன்களைப் பெற்றோர் தேடுகின்றனர்.

தொடர்பு: **ந.பாலச்சந்திரன்,**
*மில் ஒழுங்கை, மீசாலை வடக்கு, மீசாலை.*
(33642 ) **T.P.:0777/453185**

## கடை வாடகைக்கு உண்டு

பிள்ளையார் கடைக் கட்டட களஞ்சியத்தில் ஒரு கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
**பிள்ளையார் களஞ்சியம்,**
மானிப்பாய்.
**T.P.:021 222 7543** (33648)

## தவறிவிட்டது

வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சின்னத்தம்பி சண்முகநாதன் என்பவரது தேசிய அ.அ.(543141739V) 11.06.2004 அன்று வட்டுக்கோட்டைப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஆனைக்கோட்டைச் சந்தி, ஆனைக்கோட்டை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். , (33640)

சென்.ஜேம்ஸ் வீதி, சில்லாலை, பண்டத்தரிப்பைச் சேர்ந்த கிருபைராஜா கயித்தாம்பிள்ளை மரியமலர் என்பவருடைய தேசிய அ.அ.(இல:555933592V) மானிப்பாயில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (33633)

## இராஜகோபுரம் நிர்மாணம்

வலி.தென்மேற்கு,ஜூலை1

பனிப்புலம் ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் பஞ்ச தள இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

32 அடி நீளமும், 22 அடி அகலமும், 71 அடி உயரமும் கொண்ட இந்த இராஜகோபுரத்தை அமைப்பதற்கு தென்னிந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்து செ.பாலகுருசா்மா தலைமையிலான சிற்பக் கலைஞர்கள் குழு இங்குவந்து சிற்ப வேலைகளை மேற்கொண்டு வருகின்றது.

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வசிததுவரும் இக்கிராமத்தைச் சேர்நத அம்பாள் அடியார்களும் இந்த இராஜகோபுர நிர்மாணப் பணிகளுக்குத் தேவையான நிதியினை வழங்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (-4-135)

## தவறிவிட்டது

பெறுமதிமிக்க தங்க ஆபரணமொன்று 29.06.2004 செவ்வாய்க்கிழமை இளவாலையிலிருந்து கந்தரோடை வயலூடாக உடுவிலுக்கு வரும்வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொலைபேசி இல: 0777 250848 உடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (33649)

## LAW ENTRANCE EXAMINATION-2004

மேற்படி நுழைவுப் பரீட்சைக்கான வகுப்பு ஜூலை 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் காலை 9.30 முதல் மாலை4.30 வரை யா/வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

**சட்ட மாணவர் இந்து மகாசபை**
**இலங்கைச் சட்டக் கல்லூரி.**
(சி-35935)(32-13-24-34)

## பிரதான அறிவித்தல்

எம்மிடம் பழுதுபார்ப்பதற்கென கடந்த 2003 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஒப்படைக்கப்பட்ட குளிர்சாதனப் பெட்டிகளின் உரிமையாளர்கள் எதிர்வரும் 15.07.2004 ஆம் திகதிக்கு முன்னதாக அவற்றை மீட்டு எடுத்துக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

இந்தத் திகதிக்குப் பின்னர் அவற்றுக்கு நாங்கள் பொறுப்பாளிகளில்லை என்றும் உடனே மீட்டுக்கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

- இயக்குநர்
**புறோமோட்டோர்ஸ் என்ஜினியரிங் கம்பனி**
844. பருத்தித்துறை வீதி. நல்லூர். யாழ்ப்பாணம்.
☎ 01-222 5780.
(சி-35940)(34-14)

## விழியின் மீது விழிப்பாயிருங்கள்

★ சிறிய எழுத்துக்கள் எழுதப் படிக்கச் சிரமப்படுகிறீர்களா?
★ ஒருவிதமான தலைவலியினால் அவதிப்படுகின்றீர்களா?

அப்படியாயின் நிச்சயம் கண்குறைபாடுதான் காரணம்.
(பாடசாலை மாணவருக்கு விசேட சலுகை உண்டு)
எம்மிடம் வாருங்கள்! இலவசக் கண்பரிசோதனைகளும், ஆலோசனைகளும் வழங்கப்படும். அத்துடன்,

★ முகப் பொலிவிற்கேற்ப சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்
★ மிதப்புப் பற்களுக்குக் கிளிப் போட்டுக்கொள்ளவும்.

இன்றே விஜயம் செய்யுங்கள்

### எரிக் கணேஷ்

மூக்குக் கண்ணாடியகமும் பல்கட்டுமிடமும்
546. 566. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
☎ 222 - 2486

← கிளைகள் →

80, K.K.S. வீதி, சுன்னாகம்.(35903)(34-14-33)

91, K.K.S. வீதி, கொக்குவில்

# இளைஞர் செயலணித் திட்டம் அறிமுகம்

தேசிய இளைஞர் செயலணி ஒன்று வடக்கு-கிழக்கு மாகாணத்தில தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் உருவாக்கப்படவுள்ளது.

வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி நெறி ஊடாக வேலை வாய்ப்பு வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டம் குறித்து இன்று வியாழக்கிழமை மகரகமவிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைமையகத்தில் கலந்துரையாடல ஒன்று இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலிருந்து இளைஞர் கழக சம்மேளனத்தினால் தெரிவு செய்யபபட்ட நான்குபேர் இதில் கலந்துகொள்ள மகரகம சென்றுள்ளனர். (ஓ-7)



இன்று தேரேறும் நயினை நாகபூஷணித் தாயே!
நல்லருள் புரிவாயம்மா நாடிவந்த எம்மவர்க்கு!!



## SOLAX OPTICAL

## சொலெக்ஸ் ஒப்ரிக்கல் & டென்ரல் வேக்ஸ்

- ✲ உங்கள் கண்களை மிகத்துல்லியமாக இலவசமாகப் பரிசோதித்து நவீன வடிவமைப்பிலான பிறேம்களில் பொருத்திப் பெற்றுக்கொள்ளவும்
- ✲ நவநாகரிக சண்கிளாஸ் மற்றும் மாபிள் கண்களைப் பெற்றுக்கொள்ளவும் -
- ✲ பல் சம்பந்தமான சகல ஆலோச்னைகளைப் பெற்று சங்குப் பற்களை விரைவாக அழகாகக் கட்டிக்கொள்ளவும்
- ✲ மிதப்புப் பற்களுக்குக் கிளிப் பொருத்தி இலகுமுறையில் சீர்செய்து கொள்ளவும்

**யாழ். நகரில் ஒரே ஸ்தாபனம்**
**(பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்)**

கிளை:
**சொலெக்ஸ் ஒப்ரிக்கல்**
**வண்ணமாடலேன், நெல்லியடி.** (சி-35904)(34-14)

**SOLAX OPTICAL & DENTAL WORK'S**
516, Hospital Road,
Jaffna.T.P.:7631

# யாழ்ப்பாணத்திற்கு அதிக லைன்கள்

எங்கள் விரிவாக்க நடவடிக்கைகளின் பயனாக இப்பொழுது மானிப்பாயில் மேலும் அதிக லைன்களைப் பெறக்கூடியதாக இருக்கின்றது. அதிகமான தொடர்புக் கோபுரங்கள் நிறுவப்பட்டுள்ளதால் உங்களுக்கு மேலும் சிறந்த சேவையை வழங்கக்கூடியதாக எமது ஆற்றல் வளங்கள் அதிகரித்துள்ளன. எனவே, தாமதிக்காதீர்கள். இன்றே சண்டெல்லுடன் இணைந்து அதிநவீன தொலைத்தொடர்புச் சேவையின் நன்மையைப் பெறுங்கள்.

# 7 தினங்களுக்குள் இணைப்பு

## ஐ.டி.டி. சகிதம் சண்டெல் தொலைபேசி

# ரூ. 24,900/=

Suntel
*Your telecom partner for life*

**மேலதிக விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்:**
இல.31, பிள்ளையார் இன் கட்டடம்,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 4590000-1 .'.பெக்ஸ்: 4590003

Q&C Advertising

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
# தேர்த்திருவிழா சிறப்பு மலர் - 2004




உலகப் புகழ்பெற்ற L.G. ஸ்தாபனத்தாரின்
இலத்திரனியல் பொருள்கள்
தற்பொழுது யாழ்ப்பாணத்தில்...!
L.G. குளிரூட்டி AIR CONDITIONER
L.G. COLOUR TV 20" 21"
L.G. FLATRON COLOUR TV 21"
L.G. MICROWAVE OVEN
மற்றும் மின்விசிறிகள், மின் அலங்கார விளக்குகள், கிறைண்டர் முதலான அனைத்து மின் உபகரணங்களுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்:



LG JAFFNA ELECTRICALS
Digitally yours
Authorised Dealer For
141, POWER HOUSE ROAD, JAFFNA Tel.: 021 222 5766
Abans 06(94), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 222 2353

அம்பிகையே சரணம்!
நாகபூஷணித் தாயே சரணம்!
அன்னபூரணியே சரணம்!
அருள்புரிவாய் அம்மா சரணம்.
(சி-35814)


## நேரடி ஒலிபரப்பு

நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத் தேர்த்திருவிழா நிகழ்வுகளை இன்று காலை 8 மணிமுதல் பகல் 12 மணிவரையும், தீர்த்தத்திருவிழா நிகழ்வுகளை நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிமுதல் 12 மணிவரையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவையிலும், யாழ் எவ்எம்மிலும் நேரடி அஞ்சல் செய்ய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தமிழ்ச் சேவைப் பதில் பணிப்பாளர் ரி.உருத்திராபதி தெரிவித்தார்.

### வரம் தருவாய்!

[illegible] ஏறும் நாகபூஷணியே
வரம் தந்து காரும் அம்மா!
நிலம் சிறக்க காத்து .
நலங்கள் தரவேண்டும் அம்மா!
வினைகளைக் களைத்து
வரங்களைத் தாரும் அம்மா!
இன்னல்கள் இனிவேண்டாம்
இனிமையாக வாழட்டும் எம்மினம்.
கரவை எஸ்.பாலா




பாரினில் அமைதி பற்றிப் பரவிட
அன்னை தேரேறி வரும் இத்திருநாளில்
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
அம்பாள் அருள்பாலிப்பாள்.

* காலத்துக்குக் காலம் ஈடு இணையற்ற புத்தம் புது டிசைன்களில் நகைகளை நவீனமாக வடிவமைப்பவர்கள்.
* காலத்தால் அழியாத, கற்பனைக்கும் எட்டாத அற்புத எழில்மிகு ஆபரணப்படைப்பாளர்கள்.
* தங்க நகையுலகில் மங்காப் புகழுடன் ஒளிவீசித் தமக்கெனத் தனியிடம் வகித்து நிற்பவர்கள்:



நியூ லலிதாஸ் ஜூவல்லறி
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:222 3433.

நியூ நகுலா ஜூவல்லறி
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:222 5511.
(சி-35882)



அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
இன்று தேருலா வரும் அன்னையே!
நாகபூஷணித் தாயே! நாடிவவர்க்கெல்லாம்
நல்ஆசி அருள்வாயம்மா!!



புத்தம் புதிய ஆடைகளை
நித்தம் நித்தம்
அறிமுகம் செய்யும்
அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

54, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.
T.P.: 2899

25,4 ஆம் குறுக்குத்தெரு,
சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.
(C/35886)



இன்று தேரேறும் அன்னையே!
இகத்தினில் அமைதி நிலைத்திட அருள்வாய் தாயே!!
சீமாட்டி புடவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



* திருமணம் மற்றும் சுபமுகூர்த்தப் பட்டுப் புடவைகள், பட்டுவேட்டிகள்.
* ஆடவர், நங்கையர், சிறியோர் அனைவரும் விரும்பும் அனைத்துரக துணிமணிகளையும் உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்திட நம்பகம் வாய்ந்த நிறுவனங்கள்!

மங்கை சில்க்
இல.15, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(C/35884)

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
அருள்பாலிக்க இன்று தேருலா வரும் நாகபூஷணித் தாயை நாடிநிற்கும்:
பிரபா பார்மஸி அன் குறோசறீஸ்
உங்கள் தேவைக்கு............ வேண்டிய............
* ஆங்கில மருந்து வகைகளா?
* பால்மா, பிஸ்கட் வகைகளா?
* பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசப் புத்தகங்களா?
* பென்சில், பேனா மற்றும் மாணவர்களுக்கான உபகரணங்களா?
* அழகுசாதனப் பொருள்களா?
அனைத்தையும் ஓரிடமாகப் பெற்றிட நாடுங்கள்:
பிரபா பார்மஸி அன் குறோசறீஸ்
315, ஸ்ரான்லி வீதி (நாகவிகாரை அருகில்), யாழ்ப்பாணம்.
(சி-35881)

பாரெல்லாம் காத்திட இன்று தேரேறும் நயினை நாகபூஷணித் தாயே!
சீரான வாழ்வளிப்பாய் சிதைந்து விட்ட எம்மவர்க்கு!
டாட் என்ரர்பிறைஸ்
இல.02, நவீனசந்தை மேல்மாடி,
(மக்கள் வங்கிக்கு அருகில்),
யாழ்ப்பாணம்.



* அன்பளிப்புப் பொருள்களா?
* அழகுசாதனப் பொருள்களா?
* மின்சார உபகரணங்களா?
* இலத்திரனியல் பொருள்களா?
மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றிட!

11,12, நவீனசந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.
T.P.: 3098

DART ENTERPRISE
No.2, 1st Floor, Modern Market (Near People's Bank), Jaffna.
11,12, Modern Market (Inside), Jaffna. T.P.: 3098
* Gift Items
* Make up Items
* Electrical And Electronic Items Can be bought Whole Sale And retail.
(C/35879)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் மனம் வைத்தால் போதைப் பொருளை ஒழிக்க முடியும்

## சாவகச்சேரிப் பொலீஸ் அதிகாரி உரை

தென்மராட்சி,ஜூலை1

நாட்டின் எதிர்காலச் சிற்பிகளான மாணவர்கள் மனது வைத்து முயற்சி செய்தால் போதைப்பொருள்களை ஒழிக்க முடியும்.

- இவ்வாறு கூறினார் சாவகச்சேரிப் பொலீஸ் நிலையக் குற்றத் தடுப்புப்பிரிவுப் பொலீஸ் அதிகாரி எஸ்.ஏ.எரிக் றோகித.

மட்டுவில் சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போதைப் பொருள் பாவனை தற்போது அதிகரித்துள்ளதால் குற்றச் செயல்களும் குடும்பப் பிணக்குகளும அதிகரித்துவருகின்றன.

குறைந்த வருமானம் பெறும் குடும்பத் தலைவன் வருமானத்தை விட அதிகமாக போதைப் பொருள்கள் பாவிப்பதால் அந்தக் குடும்பம் தொடர்ச்சியாக வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுக் குடும்பத் தலைவனின் ஆயுளையும் குறைக்கிறது.

வாகனம் செலுத்தும்போது மது அருந்துவதால் ஏற்படும் விளைவுகளை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். மது போதையில் வாகனம் செலுத்துவோர் வீதியில் செல்லும் பாதசாரிகளை மோதி உயிராபத்தினை ஏற்படுத்துகின்றனர். அத்துடன், தாமும் அநியாயமாகப் பலியாகின்றனர்.

சட்டவிரோத கசிப்புப் பாவனையும் நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரிக்க வழிவகுக்கிறது.

இதனால் போதைப் பொருள்களை ஒழிக்கும் பொறுப்பு மாணவர்களுக்கு உண்டு என்றார்.

இக்கருத்தரங்கின் முடிவில் மாணவர்கள், 'போதைப் பொருள்களை ஒழிக்கும் பணிக்கு மாணவர்கள் பங்களிப்போம்' எனக் கோஷமிட்டவாறும் போதைப்பொருள்கள் ஒழிப்பது தொடர்பான சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் நுணாவில் சந்திவரை ஊர்வலமாகச் சென்றனர்.

மாணவர்கள் கொண்டு சென்ற சுலோக அட்டைகளில் காணப்பட்ட வாசகங்களில் சில வருமாறு:-

'போதை பொருள்கள் இல்லாத உலகத்தினை உருவாக்குவோம்'

'மது போதையால் ஆயுள் காலததைக் குறைத்துக் கொள்ளாதே'

'மதுவே எங்கள் வீட்டின் சந்தோசத்தைக் குறைக்காதே'

'அன்பான தகப்பனே குடியினால் எமது எதிர்காலத்தை அழிக்காதே'

(ஒ-4-31-117)



நுணாவில் கிழக்கில் தென்மராட்சி சமுர்த்தி வங்கி மகாசங்க அலுவலகத்தினை பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் நாடாவெட்டித் திறந்துவைப்பதையும் அருகில் பிரதேச சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் ஆ.ரகுநாதன், பிரதேச செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் கி.குணாளசிங்கம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:- தென்மராட்சி செய்தியாளர்)

# கைக்குண்டுத் தாக்குதல்; சந்தேகநபர் விடுதலை

மட்டக்களப்பு,ஜூலை1

மட்டக்களப்பு புறநகர்ப் பகுதியில் கடந்த மாதம் 14 ஆம் திகதியன்று வீதிக்கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு புறநகர்ப் பகுதியைச் சேர்ந்த கிருபாகரன் ரமணன் என்ற இளைஞர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தார்.

45 நாள்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அந்த நபரை, குறிப்பிட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை எனத் தெரிவித்து மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் எம்.எச்.எம்.அஸ்மிர் விடுதலை செய்தார்.

குறிப்பிட்ட கைக்குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் நான்கு படையினரும் மற்றும் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-9)

# மண்சரிவு அபாயத்தால் நகரொன்று இடமாற்றம்

கொழும்பு,ஜூலை1

மலையகத்தில் அப்புத்தளை தேர்தல் தொகுதியில் உள்ள கஸ்துமுல்ல நகரை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இந்த நகரில் பாரிய மண்சரிவு இடம்பெறுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாகப் புவியியல் ஆராய்ச்சி மூலம் தெரியவந்துள்ளது.

நகரின் 20 ஏக்கருக்குட்பட்ட பகுதியில் மண்சரிவு ஏற்படவுள்ளதாகப் புவியியல் நிபுணர்கள் தெரிவித்தனர். இதனையடுத்தே நகரை மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

80 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள இந்நகரில் வசிப்பதோடு, 20 இற்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்களும் உள்ளன.

இந்நகரை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான முதற்கட்ட நடவடிக்கை முடிவடைந்துள்ளதாக கஸ்துமுல்ல பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

தேசியக் கட்டடப் பரிசோதனை அமைப்பு நடத்திய பரிசோதனைகள் மூலமாக நகரில் பாரிய மண்சரிவு இடம்பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் கிடைத்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

(ஒ-ரி)



கோப்பாய் சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் புதிய கட்டுப்பாட்டுச் சபைத் தெரிவுக் கூட்டம் அண்மையில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்ட கோப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

சமுர்த்தி வங்கிச்சங்க முகாமையாளர் திருமதி சுகந்தி குணசீலன், தலைமை முகாமையாளர் திருமதி வசந்தி ஜெயக்குமார், சபையின் முன்னாள் தலைவர் [illegible] குமார், கிராம அலுவலர் ஜோசெப் ரட்ணராஜா ஆகியோரும் படத்தில் உள்ளனர். (10)

## நாயால் விபத்து

யாழ்ப்பாணம்,ஜூலை1

வீதியின் குறுக்கே நாய் திடீரென்று ஓடியதால் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் நிலை குலைந்து விபத்துக்குள்ளானார்.

புங்குடுதீவில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தில் நடராசா பரமேஸ்வரன் (வயது 16) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ஒ-15)

## சமுர்த்தி வங்கி கடன்திட்டம்

கொழும்புத்துறை,ஜூலை1

யாழ்நகர் கிழக்கு வலய சமுர்த்தி வங்கி கடன் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி வருகிறது.

கடற்றொழில் மற்றும் சுயதொழில முயற்சிகளில் ஈடுபடுவோர் தத்தமது பிரிவிலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருடன் தொடர்புகொண்டு இத்திட்டத்தில் பயன்பெறலாம் என யாழ் நகர் சமுர்த்தி வங்கி முகாமையாளர் பி.கியூமன் தெரிவித்துள்ளார்.(ஒ-30)

## பரிசளிப்பு

யாழ்.பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று காலை 10.00 மணிக்கு அதிபர் திருமதி எம். கலிஸ்ரா செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பேராசிரியர் முனைவர் சபா ஜெயராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பிப்பார். பரிசில்களை திருமதி சபா ஜெயராசா வழங்குவார். (ஒ)

## வாலிபர்கழக நிர்வாகிகள் தெரிவு

கொழும்புத்துறை ஜூலை1

யாழ்.ஆரியகுளம் முற்போக்கு வாலிபர்கழகப் புனரமைப்புக் கூட்டம் அண்மையில் கழக மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த 9 வருடங்களாகப் படையினரால் பயன்படுத்தப்பட்டு வந்த கழகக் கட்டடம் அண்மையில் கழக நிர்வாகத்திடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டது. இதனையடுத்து இப புனரமைப்புக் கூட்டம் இடம்பெற்றது. இதில் யாழ்.பிரதேச அரசியற்றுறைப் பொறுப்பாளர் செழியன், யாழ்.பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் எஸ். சிவஞானசேகரம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து இடம்பெற்ற நிர்வாக உறுப்பினர் தெரிவில் தலைவராக பெ.உதயகுமார், செயலாளராக [illegible] 8 பேர் கொண்ட நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-30)

# பாடசாலையின் அபிவிருத்தி கோரி தண்ணீர்தாங்கி மீது ஏறிய அதிபர்!

வவுனியா,ஜூலை1

வவுனியா நகரில் உள்ள சிங்களப் பாடசாலையான காமினி வித்தியாலயத்தின் அதிபர் நேற்றுமுன்தினம் பாடசாலையின் தண்ணீர்த்தாங்கிக்கு மேல் ஏறிநின்று ஆர்ப்பாட்டம் செய்தார்.

தமது பாடசாலையில் நீண்டகாலமாக அபிவிருத்திப் பணிகள் எவையும் செய்யப்படவில்லை என்றும் -

தமது பாடசாலை வளாகத்தில் வவுனியா வடக்கு கல்விப் பணிமனை அலுவலகங்கள் இயங்கிவருவதால் மாணவர்கள் சுமுகமாக கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடமுடியாமல் இருக்கின்றது என்றும் - தெரிவித்தே அவர் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பாடசாலை சிங்களவர்களுக்கு மட்டுமே உரியது என்றும் - அவர் கூறுகின்றார்.

நேற்றுமுன்தினம் காலைமுதல் தண்ணீர்த்தாங்கிமீது ஏறிநின்று ஆர்ப்பாட்டம் செய்தார். மதியம் அங்கு சென்ற வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர தண்ணீர்த்தாங்கியில் ஏறிச் சமரசம் செய்ததையடுத்து அதிபர் தனது போராட்டத்தைக் கைவிட்டு கீழே இறங்கிவந்தார்.

மேற்படி பாடசாலையின் புனரமைப்புக்கு தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதியிலிருந்து ஒன்றரை லட்சம் ரூபாவை ஒதுக்கித்தருவதாகவும் -

பாடசாலை வளாகத்திலிருந்து கல்விப் பணிமனை அலுவலகத்தை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் - கிஷோர எம்பி.வாக்குறுதி வழங்கியதையடுத்தே பிரஸ்தாப அதிபர் தனது ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டுத் தண்ணீர்த் தாங்கியிலிருந்து இறங்கினார் என்று கூறப்பட்டது.

(ஐ-4)

# பெண்சிப்பாய் மரணம் குறித்த வழக்கு: 10 ஆவது சந்தேகநபர் விடுதலை

தென்மராட்சி,ஜூலை1

சாவகச்சேரிப் பகுதியை 2001ஆம ஆண்டு படையினர் மீண்டும் கைப்பற்றிய பின்னர் அப்பகுதியில் பெண் படைச் சிப்பாய் ஒருவர் மரணமானமை தொடர்பாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்களில் 10 ஆவது சந்தேக நபர் சட்டமா அதிபர் அலுவலகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கில் 10 ஆவது சந்தேக நபராக ஆஜர்படுத்தப்பட்ட எஸ்.எம்.சி.புஸ்பகுமாரி என்பவரே நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டவராவார்.

இவ்வழக்கின் எட்டாவது சந்தேக நபரான ஜே.ஏ.பீ.என். ஜயசிங்க தவிர்ந்த ஏனைய எட்டுப்பேரும் ஏற்கனவே நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

# ஆலயத் திருவிழாவில் அனர்த்தம்

யாழ்ப்பாணம்,ஜூலை1

திடீரென வீசிய கடுங்காற்றினால் திருவிழாவின் போது ஏற்பட்ட விபத்தில் ஒருவர் கால் முறிந்து படுகாயமடைந்தார். இதனால் நடந்துகொண்டிருந்த திருவிழா அக்கணமே நிறுத்தப்பட்டது.

புன்னாலைக் கட்டுவன் ஆயக்கடவை பிள்ளையார் கோவிலில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் சிற்றுண்டி பலகார வகை விற்பனையாளரான உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த செல்வராசா பாஸ்கரன் (வயது 42) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

திருவிழா ஆரம்பமான வேளை - இரவு 7.30 மணிக்குத் திடீரென கடுங்காற்று வீசியது. அதில் பனைமரமொன்று அடியோடு சாய்ந்து மின் கம்பத்தின் மீது விழுந்தது. அந்த அதிர்வில் மின்சார வயர்கள் அறுந்ததுடன் 2 மின்கம்பங்களும் முறிந்து வீழ்ந்தன. முறிந்து வீழ்ந்த ஒரு மின் கம்பத்தினுள் அகப்பட்டே படுகாயமடைந்தார் என்று பிரஸ்தாப நபர் தெரிவித்தார்.

சுமார் 2 நிமிட நேரத்திற்குள் நடந்து முடிந்த இந்த விபத்தினை அடுத்து மக்கள் கலைந்தோடியதுடன் திருவிழா குறுகிய நேரத்தில் முடித்து வைக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ஒ-15)

# போர்ச்சூழலுக்குள் பிரவேசிக்க புலிகள் முயல்கின்றனராம்

## ஈ.பி.டி.பி.செயலாளர்நாயகம் கூறுகிறார்

கொழும்பு,ஜூலை1

மீண்டும் ஒரு யுத்தச்சூழலை ஏற்படுத்துவதில் புலிகள் முனைப்பாகவே இருக்கின்றனர் என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். ஆள்சேர்ப்புக்களை புலிகள் தீவிரமாக்கியுள்ளமையும்; போர் வந்தால் எதிர்கொள்ளத் தயார் என்பது போன்ற உணர்ச்சிபூர்வ ஆவேசப்பேச்சுகளைப் புலிகளின் பிரமுகர்கள் ஆற்றுவதும், மக்கள் மத்தியில் அச்சத்தை வலுப்படுத்துவதாக உள்ளன.

- இவ்வாறு ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் கே.என்டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அண்மையில் யாழ்.குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டிருந்த சர்வதேச தொண்டர் அமைப்பான 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனத்துக்குச் சொந்தமான வாகனங்கள் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால், இந்த நிறுவனத்துக்கு சுமார் ஐம்பதாயிரம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இழப்பு ஏற்பட்டுள்ளது. இத்தகைய அசம்பாவிதங்கள் அநாவசியமானவை. இத்தகைய வன்முறைகள் கண்டிக்கப்படவேண்டியவை.

இதேவேளை - புலிகளின் முக்கிய பிரமுகர்கள் பல்வேறு போலிக் காரணங்களைக் கண்டுபிடித்து அரசின மீது குற்றம் சுமத்துகின்றனர். அமைதிச் சூழல் நிலவுவதைவிடப் போரில ஈடுபடுவதில் அவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். இவை மூலமாகப் புலிகளின ஜனநாயக விரோதப் போக்கு வெளிபடுகின்றது.

போர்ச்சூழல் என்னும் பொறிக்குள் மக்களை இழுத்து விழுத்தப் புலிகள் மேற்கொள்ளும் முயற்சியைத் தமிழ்மக்கள் இனங்கண்டுள்ளனர். இதனாலேயே பல ஆயிரக்கணக்கான ரூபா மாதாந்த வேதனம் வழங்குவதாக விளம்பரங்கள் செய்தும் கூட புலிகளின் ஆளணி வெற்றிடங்களை நிரப்பமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. புலிகள் மீண்டும் போர்ச் சூழலுக்குள் பிரவேசிக்க மேற்கொள்ளும் முயற்சிகளை இனங்கண்டு நிராகரிக்கும் மக்களின் நிலைப்பாடு பாராட்டுக்குரியது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசானுக்கு அஞ்சலிகள்

எமது பீடத்தின் கணிதத்துறை சிரேஷ்ட
விரிவுரையாளர் மதிப்புக்குரிய
**Dr.M.ஸ்கந்தராஜா**



அவர்களின் மறைவு எமக்கு பேரதிர்ச்சியைத் தந்துள்ளது. அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி, ஆத்ம சாந்திக்கு பிரார்த்திப்பதோடு, இவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*குறிப்பு: அன்னாரது பூதவுடல் எதிர்வரும் 03.07.2004 சனிக்கிழமை விஞ்ஞான பீடத்தில் 10.30 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்படும் அனைத்து மாணவர்களும் இந்த அஞ்சலி நிகழ்வில் தவறாது கலந்துகொள்ளவும்.*

விஞ்ஞான பீட மாணவர்கள் ஒன்றியம்
யாழ்.பல்கலைக்கழகம்.
(33666)(37-11-12-36)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
19
04
1920



மறைவு
01
06
2004

**திருமதி பொன்னம்மா தம்பையா**
(மருதங்குளம், மட்டுவில் தெற்கு)

அன்பு காட்டி வாழ்ந்தீர்கள்
உங்கள் அரவணைப்பில் வளர்ந்தோம் நாம்.
நல்வாழ்வு இங்கு இனிப்போதுமென்ற நிறைவான மனத்துடனே
ஆனந்தமாய் சென்றடைந்தீர் ஆண்டவர் பாதங்களுக்கு.

இன்று (01.07.2004) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இராமகிருஸ்ணா ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*
(33657)(43-11-12-36) - குடும்பத்தினர்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 590 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 29-06-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. | 4768339-4783181 |

வெற்றி இலக்கங்கள்
**25 32 35 36**

லக்கினம் மீனம்

ஜக்பொட் பரிசு
ரூபா.10,00,000/-
வெல்லப்படவில்லை.
இந்த வெள்ளிக்கிழமை
ஜக்பொட் ரூபா. 17,38,300/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 3,30,518 | 10/- | 33,05,180/- |
| 2.இலக்கங்கள் | 30,246 | 20/- | 6,04,920/- |
| 1.இல + லக்கினம் | 30,155 | 30/- | 9,04,650/- |
| 2.இல + லக்கினம் | 2,830 | 100/- | 2,83,000/- |
| 3.இலக்கங்கள் | 805 | 500/- | 4,02,500/- |
| 3.இல + லக்கினம் | 78 | 5,000/- | 3,90,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 10,00,000/- | - |
| மொத்தம் | 3,94,636 | - | 62,90,250/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 62,90,250/-

தொடர் இல. 5749464 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2004 ஜுலை 02ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி,
கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4768961-2-66
4777898-7-03
4773558-8-79
4774180-3-21
4771083-4-70

## காவல்துறை அறிவிப்பு

கடந்த மாதம் 23 ஆந்திகதி முதல் 30 ஆம் திகதிவரை தமிழீழத் தேசியத் துணைப் படைக்கான ஆள் சேர்ப்பில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை கிளிநொச்சியில் அமைந்துள்ள காவல்துறை நடுவப் பணியகத்துக்கு வருகை தருமாறு தமிழீழ காவல்துறையின் ஆளணிப்பிரிவுப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (8)

## பொது அறிவுப் போட்டி

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கல்விகற்கும் தரம் 6 முதல் 13 வரையிலான மாணவர்களுக்குரிய கணித, விஞ்ஞான பாட பொது அறிவுப் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

தரம் 6 முதல் தரம் 11 வரையிலான மாணவர்களுக்கான போட்டிகள பின்வரும் இடங்களில் நடைபெறும்.

யாழ்.கோட்டத்திற்கான போட்டிகள யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியிலும், கோப்பாய் கோட்டத்திற்கான போட்டிகள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், நல்லூர் கோட்டத்திற்கான போட்டிகள் யாழ்இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறும் தரம் 12, 13 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கான போட்டிகள் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் பெறும்

## உயர் தொழில்நுட்ப நிறுவனப் பரீட்சை

உயர் தேசிய டிப்ளோமாவின் 4 ஆம் வருட மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டு இறுதிப்பரீட்சை எதிர்வரும் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை - இரண்டாம் அரையாண்டுக்கான முழுநேர பயிற்சி வகுப்புக்கள எதிர்வரும் 15 ஆம் திகதியும், இதன பகல் நேர வகுப்புக்கள் 10 ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளன. (எ-3).

## வீடு தேவை

அரச உத்தியோகம் பார்க்கும சறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு உடன் வாடகைக்குத் தேவை. மானிப்பாய், கொக்குவில், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் விரும்பத்தக்கது.

உடன் தொடர்பு:
0777-677079
(30668)(12)


**நாகம்ஸ்** சுன்னாகம்

அநேக ரசிகர்களின்
வேண்டுகோளுக்கிணங்க
ரஜனி, சௌந்தர்யா,
ரம்மியாகிருஷ்ணன்
நடித்த




தினசரி: 11.00, 3.00, 7.00 மு.
(C/35739)(12)

**ராஜா** யாழ்ப்பாணம்

விஜய்,
த்திரிசா,
பிரகாஸ்ராஜ்
நடித்த




காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, (பி.ப.)
மூன்றாம் திகதிமுதல்
பேரழகன்
(C/34517)(12)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

சரத்குமார், தேவயானி,
செந்தில் நடித்த




தினசரி: 11.00, 2.45, 6.00 (பி.ப.)
வெள்ளி, சனி, ஞாயிறு
EXTREMITIES [இரவு 8.45]
(C-35653)(12)


## கணித ஆசானுக்கு கண்ணீர்க் காணிக்கை



யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட
விரிவுரையாளரும் கணித பேராசானுமாகிய

**அமரர் கலாநிதி**
**மகாதேவா ஸ்கந்தராஜா**

அவர்கள் நேற்று (30.06.2004) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அவரின் திடீர் மறைவு எம்மை ஆழ்ந்த துயரத்துக்குள்ளாக்கியுள்ளது. அமரருக்கு எமது கண்ணீரக காணிக்கையை சமர்ப்பிக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கணித புள்ளிவிபரவியற் துறையினர்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**
(33664)(36-11-12)

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு
07
02
1954



உதிர்வு
30
06
2004

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் கணிதத்துறையில்
சிரேஷ்ட விரிவுரையாளராக பணியாற்றிய
**கலாநிதி ம.ஸ்கந்தராஜா**

அவர்கள் 30.06.2004 அன்று காலமானார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.07.2004 சனிக்கிழமையன்று காலை 9 மணியளவில் சுதுமலையில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் காலை 10.30 மணியளவில் விஞ்ஞானபீட கணிதத்துறை மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

பல்கலைக்கழக ஊழியர்கள், மாணவர்கள் அனைவரையும் இந்த அஞ்சலி நிகழ்வில் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

~ யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம்,
யாழ். பல்கலைக்கழகம். (33659)(43-11-12-36)

## மரண அறிவித்தல்கள்

### கலாநிதி ம.ஸ்கந்தராஜா M.Sc., Phd, (Alberta)

**(சிரேஷ்ட விரிவுரையாளர் கணித புள்ளிவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)**



காலஞ்சென்ற மகாதேவா கனகபூசனி தம்பதியின் அருமை புதல்வராகிய ஸ்கந்தராஜா (M.Sc, Phd (Albarta) சிரேஷ்ட விரிவுரையாளர் கணிதபுள்ளிவியல்துறை, யாழ் பல்கலைக்கழகம்) 30.06.2004 அன்று காலமானார்.

இவரது இறுதிக்கிரியைகள் 03.07.2004 அன்று சனிக்கிழமை சுதுமலை வடக்கில் உள்ள அன்னாரது இல்லத்தில காலை 9.00 மணிக்கு நடைபெற்று, பின்னர் பூதவுடல் காலை 10.30 மணியளவில் யாழ்பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும். பின்னர் தாவடி இந்து மயானத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*கேணிக்கரை ஒழுங்கை,*
*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய.*

தகவல்:
திருமதி ந.கமலவதனி
(சகோதரி).
(33670)(36-11-12)

### கந்தையா நடராசா (நடேசு)

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா 30.06.2004 நேற்று காலமாகிவிட்டார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புளியங்கூடல்,*
*ஊர்காவற்றுறை.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.
(33667)(36-12-11)

### நடராசா பவானந்தன்



நல்லூர், நீராவியடியைப் பிறப்பிடமாகவும், அரசடி றோட், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பவானந்தன் நேற்று 30.06.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் விமலினி (கனடா), நந்தகுமார் (கனடா), சஞ்ஜித்குமார்(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), தாரணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் விவேகானந்தன், சிவானந்தன், புனிதவதி, கனகாம்பிகை காலஞ்சென்ற கருணானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாலசுப்பிரமணியம், பாலச்சந்திரன், விக்னேஸ்வரன், இராஜேஸ்வரன், பரமேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் விக்னேஸ்வரி, இராஜேஸ்வரி, மங்களேஸ்வரி, ஜெகதீஸ்வரி, முத்தீஸ்வரி, கமலேஸ்வரி, தியாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரவிக்குமார், புஸ்பகாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(01.07.2004) வியாழக்கிழமை பிற்பகல 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளாக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுககொள்ளவும்.

*நந்தினி பேக்கரி அருகில்,*
*அரசடி றோட், கொக்குவில் மேற்கு.*

தகவல்:
திருமதி ப.புவனேஸ்வரி. (மனைவி)
ப.சஞ்ஜித்குமார் (மகன்).
(33650)(43-12-11-36)


## ஆதிஷா ஆட் அன்ட் டிசைன்ஸ்
### குறுகியகாலப் பயிற்சிகள்

அழகியல் கலைகளில் டிப்ளோமா பட்டம் பெற்றவரும் கண்டி, திருகோணமலை, கொழும்பு முன்னணி அழகியல் நிறுவனங்களில் பயிற்சிபெற்றவருமாகிய -

**திருமதி வாசுகி குமாரதாஸனால்** நடத்தப்படும் குறுகியகாலப் பயிற்சி வகுப்புகள் ஜூலை 2ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

★ சாறி வேலைப்பாடுகள் (Net Work, Cut Work, Patch Work, Beads Work, Emboss Printing, Foil Work உட்பட 20 வகை வேலைப்பாடுகள்)

★ மட்பாண்ட அலங்காரம் (Decoupage Work, Clay Work, Paper pulp Work, Sand Pouring, Dripping Work உட்பட 20 வகை வேலைப்பாடுகள்) (யாழ்ப்பாணத்தில் மட்பாண்ட அலங்காரப் பயிற்சி இங்கு மட்டுமே)

★ கிறிஸ்தவ மணப்பெண்ணுக்குரிய சேலை உட்பட சேலை, சுடிதார், சோளி கிட் என்பன அழகாகவும், நேர்த்தியாகவும் செய்து தரப்படும்.

★ நிறுவனங்கள், வீடுகளை அலங்கரிக்க அழகிய மட்பாண்டப் பொருள்களில் வேலைப்பாடுகள் ஓடருக்குச் செய்து தரப்படும்.

தொடர்பு: இலக்கம் 90, சட்டநாதர் வீதி, நல்லூர்.
(இளங்கலைஞர் மன்றத்துக்கு அண்மையில்), T.P. 222 6043
(35951)(36-11-12)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்த சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த இரண்டரை வருடங்களாக மிகவும் கண்ணியத்துடனும், அர்ப்பணிப்புடனும் போர்நிறுத்தத்தைக் கடைப பிடித்து வந்தோம். முப்படைகளும், பொலீஸாரும் 99 வீதம் தமது ஒத்துழைப்பை நல்கினர். இது போன்று இராணுவத் தலைமைப் பதவியை ஏற்க விருக்கும் லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கோட்டேகொட தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வார் என நம்புகிறேன்.

விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கும் இடைக்கால நிர்வாகசபைக் கோரிக்கையை ஏற்று அதன் அடிப்படையில் பேச்சுக்களை நடத்த அரசு முன்வந்துள்ளது. வெற்றிகரமாக பேச்சுக்கள்மூலம் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்ட அனைத்துத் தரப்பும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் யுத்தம் செய்வது எளிது. ஆனால், சமாதானத்தை நிலை நாட்டுவதிலேயே வெற்றி தங்கியுள்ளது.

யுத்தத்தில் வெல்லவேண்டுமானால் முதலில் மக்கள் மனதை வெல்ல வேண்டும். மக்களின் மனதை வெற்றி கொள்வதில் படையினர் கவனம் செலுத்தவேண்டும். ஜனாதிபதியுடன் இன்று நடந்த சந்திப்பின்போது நான் இவற்றை வலியுறுத்தினேன்.

எமது நாட்டில் அமைதிப்படை அணி ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்று எண்ணினேன் அது இன்று உருவாக்கப் பட்டுள்ளது. வெளிநாடுகளுக்கு எமது அமைதிப்படையை அனுப்பவேண்டும்.

இலங்கை இராணுவத்துக்கு நான் சேர்ந்து 39 வருடங்களும் இரண்டு மாதமும் 25 நாள்களும் ஆகிவிட்டன.

நான் இராணுவத்தளபதியாகப் பதவிவகித்தகாலத்தில் தொடர்ச்சியாக இரண்டு வருடங்கள் ஓய்வின்றி கடும் யுத்தம் நடைபெற்றது. உலகில் உள்ள எந்த நாட்டுப்படைக்கும் சளைத்தவர்கள் அல்லர் எமது படையினர் என்பது அப்போது நிருபணமாகியுள்ளது.

கடந்த இரண்டரை வருடங்களாக யுத்தம் ஓய்வுபெற்றபோதிலும் எமது படைகள் மேலும் வலுவாக உருவாக் கப்பட்டுள்ளன. இன்று எந்த சூழ் நிலைக்கும் முகம் கொடுக்கும் வகையில் அவை தயார்ப்படுத்தப்பட்டுள்ளன. இது வழமையாக எந்தநாட்டிலும் நடப்பதுதான்.

மனிதவுரிமை மீறல் விடயங்களில் விடுதலைப் புலிகள் பாரிய அளவில் செயற்பட்டனர். இருப்பினும் இராணுவத்தினர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. கருணாவிடயத்தில் இராணுவம் தலையிட்டதாகக் குற்றஞ் சாட்டப் பட்டு வருகிறது. இப்போது உண்மை அம்பல மாகியுள்ளது. இதுதொடர்பாக வேறு எதுவும் நான் கூறவிரும்பவில்லை.

நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட - உரிய அரசியல் தீர்வைக்காண - சகல தரப்பும் முன்வரவேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும் - என அவர் கூறினார்.

## கருணாவைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
"கருணா எங்கே இருக்கிறார் என்பது அரசுக்குத் தெரியாது என்கிறார்கள். ஆனால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோ கருணாவுடன் தொடர்பு வைத்துள்ளார், பேசுகின்றார். கூடிய விரைவில் ஜனநாயக வழிக்கு கருணா வந்து விடுவார் என டக்ளஸ் தேவானந்தா பகிரங்கமாகவே கூறுகின்றார்.

"அப்படியானால் தேடப்பட்டு வரும் தீவிரவாதி ஒருவருடன் அமைச்சர் ஒருவர் தொடர்பு வைத்துள்ளார். அதனை அரசுக்கும் மறைக்கின்றார் என்றால் அதே அமைச்சருக்கு எதிராக இந்த அரசு ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது.

"அது அவர்களால் முடியாது. காரணம் அவர்கள் கருணாவைத்துக் கொண்டே காலம் கடத்தப்பார்க்கின்றனர்.

அவர்களுடைய ஆட்சியில் ஒரு போதும் சமாதானப்பேச்சு இடம்பெற மாட்டாது. (க)

## பட்டதாரிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசு ஆட்சி அமைப்பதற்கு முன்னர் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் இதுவரை நிறைவேற்ற முடியாமல் தொடர்ந்தும் மக்களை ஏமாற்றி வருகிறது. வேலையில்லாப் பட்டதாரிகளை, அரசசேவையில் சேர்த்துக் கொள்வதற்கு உடனடியாக அரசு விண்ணப்பங்களைக் கோரியது. இப்போது மீண்டும் வர்த்தமானியில் அறிவிக்க அரசு முடிவெடுத்துள்ளது. அப்படியெனில் ஏற்கனவே கொடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் செல்லுபடியற்றதாகிவிடும்.

பட்டதாரிகளை உடனடியாக அரச நியமனங்களில் இணைத்துக்கொள்வதாகக் கூறி மூன்றுமாத காலத்தை வீணடித்த அரசு தொடர்ந்தும் காலத்தை இழுத்தடிக்க இப்படியொரு நாடகத்தை நடத்துகிறது.

அரசு கொடுத்த வாக்குறுதியின்படி நாளை ஜூலை 2ஆம் திகதி சகல பட்டதாரிகளுக்கும் தொழில் நியமனங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

உண்மையிலேயே பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்புக்களை வழங்குவதற்கு அரசு உறுதியுடன் செயற்படுகின்றது என்றால் அரசமைப்பு சபைக்கு தனது முடிவை அறிவித்திருக்க வேண்டும். நாடாளுமன்றில் தீர்மானம் கொண்டுவர முயற்சித்திருக்க வேண்டும். இதை விடுத்து விட்டு, ஏற்கனவே பயிற்சி அடிப்படையில் இலங்கை வங்கியில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளை வேலையிலிருந்து நீக்கும் நடவடிக்கையிலேயே அரசு ஈடுபட்டு வருகிறது.

அரசு அறிவித்தபடி பட்டதாரிகளை இரண்டு வருடப் பயிற்சசி அடிப்படையில் சேர்த்துக் கொண்டாலும் பின்னர் எந்தநேரத்திலும் அவர்களைப் பதவியிலிருந்து நீக்க முடியும்.

1994ஆம் ஆண்டு இதே ஜனாதிபதி தலைமையிலான பொதுஜன முன்னணி ஆட்சிக்கு வரும்போது வேலையற்றவர்களுக்கு மாதாந்தம் 1500 ரூபா வழங்குவதாக உறுதியளித்தது. வாககுறுதி அளித்தபடி ஒரு நபருக்காவது 1500 ரூபா கொடுத்தார்களா? ஒரு லட்சம் பேருக்கு தொழில்வாய்ப்பு வழங்குவோம் என்ற அவர்களது வாக்குறுதி காற்றோடு காணாமற் போய்விட்டது. 3 ரூபா ஐம்பது சதத்துக்குப் பாண் கொடுக் முடிந்ததா? ஐ.தே.க. என்றுமே பொய் வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கவில்லை. இரண்டு வருடத்துக்கு எந்த அரச நியமனமும் வழங்கப்பட மாட்டாது என்பதை ஆட்சிக்கு வர முன்னரே தெரிவித்திருந்தோம் - என அவர் கூறினார். (க)

## எப்போது பேச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று (புதன்) மாலை பிரதமருடன பேசவிருக்கின்றோம். நாளை (வியாழன்) ஜனாதிபதியுடன் பேசவிருக்கிறோம். இரு பிரதான விடயங்கள் இப்போது எம்முன் வைக்கப்பட்டுள்ளன.

ஒன்று - கருணா விவகாரம் மற்றையது - எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என பது. யுத்த நிறுத்த உடன்பாட்டை மீறும் செயல்கள் அண்மையில் இடம்பெற்றுள்ளன. அவற்றை எப்படி சீராக்குவது என்பது குறித்து இருதரப்பினருடனும் பேச்சு நடத்திவருகின்றோம்.

பேச்சை ஆரம்பிக்கும் கடும் வேலையைத் தொடர்கின்றோம். இன்றுள்ள நிலையில் பேச்சுக்கள் எப்போது ஆரம்பிக்கும் என்று எதிர்வு கூறமுடியாது. முதலில் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படவேண்டும் அதன்பின்பே பேச்சு ஆரம்பிக்கும் திகதியை அறிவிக்கமுடியும்.

கருணா விடயம் தொடர்பாக தமிழ்ச்செல்வன் பல சம்பவங்களை, விளைவுகளைக் கூறியுள்ளார். அவற்றை அரசுக்கு எடுத்துக்கூறுவோம். இலங்கையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிகப்பட்ட பின்பே உதவிகளை நன்கொடை நாடுகள் வழங்கும் என்றார் சொல்ஹெய்ம். (க-3)

## இராணுவத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடமைகளை ஆரம்பிக்கிறார். அவருக்கு லெப்டினன்ட் ஜெனரல் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

16ஆவது இராணுவத் தளபதியாக கடமை புரிந்த லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல நேற்றுடன் ஓய்வு பெற்றார். 24.08.2004இல் பலகல்ல இராணுவத் தளபதியாகப் பதவி ஏற்றிருந்தார்.

## நயினையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னிட்டு யாழ். மத்திய பஸ் நிலையத்திலிருந்து விசேட பஸ் சேவைகள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், தனியார் பஸ் சேவைகளும் இடம்பெறும்.

அத்துடன், குறிகட்டுவானில் இருந்தும் ஊர்காவற்றுறை கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறையில் இருந்தும் படகுச் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. ஆலயத்திற்கு வருகைதரும் அடியார்களுக்கு 'அமுதசுரபி' அன்னதான சபையினர் அன்ன தானம் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச செய்துள்ளனர். (எ-7)


**NEW SCIENCE COLLEGE**
இணைந்த கணிதம்
**A/L - 2004 Repeat**
Paper Class நடைபெறுகின்றது.
(அனைத்து அலகுகளும் உள்ளடக்கப்பட்டது)
Mon., Tue., Wed., Thu., Fri. - 6.00-7.00 (a.m.) (பழையநேரம்)
**By: P. Senthilnathan B.Sc.** (33669)(40)



**GLOBAL VILLAGE**
**COMPUTER EDUCATION**
எமது நிறுவனத்தால் A/L மாணவர்களுக்கு அனுப்பப்பட்ட 1500/ பெறுமதியான Discount Voucher கிடைத்த / கிடைக்காத மாணவர்கள் 04/07/2004 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்:
02/07/2004 & 04/07/2004
Ms Office, Desk top Publishing, Hard ware, Multimedia, Wep Designing
119, Pointpedro Road, Nallur, Jaffna.
(33651)(40-12-11)



வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலை வாய்ப்பைப் பெற்றிடவும் சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழைப் பெற்றுக்கொள்ள 100 % பயிற்சி நெறி
பிரிவு III ஆரம்பம் : 03.07.2004
DIPLOMA IN COMPUTER HARDWARE & NETWORK ENGINEERING
*Assembling *Configuring *Soft ware installation *Multimedia
*Repairing *Servicing *Upgrading *Cabling Connecting & Configuring Networks Etc...
குறிப்பிட்ட அளவு மாணவர்களே வகுப்பில் சேர்த்துக்கொள்ள இருப்பதால் உங்கள் அனுமதியை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.
**JAFFNA TECHNICAL INSTITUTE**
**No .7,palaly Road**
**Jaffna.** (சி-35916)(36-11-12-40) T.P.NO.: 0777846811


# மரண அறிவித்தல்கள்

## தங்கராசா யுசானி



நவாலி வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட கதிரிப்பிள்ளை தங்கராசா யுசானி அவர்கள் 29.06.2004 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தங்கராசா - நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் ரஜீகரன், யாழினி, மதுசாளினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அமரர் தவராசா மற்றும் ஆறுமுகராசா, சிறீஸ்கந்தராசா, ஜெயராசா, மங்கையர் திலகம் ஆகியோரின் பெறாமகளும் தவமணி, ரஞ்சிதமலர், வைத்திலிங்கம், பரமலிங்கம், அன்னலிங்கம் - பரமேஸ்வரன் ஆகியோரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை, இரத்தினம், மகிழ்மணி மற்றும் மாணிக்கவாசகர் ஆகியோரின பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2004) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 1 மணிக்கு நவாலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மகேசன் வீதி*
*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.*

தகவல்:
S.விஸ்வலிங்கம்.
(33679)(40-12-11)

## செல்லர் தில்லையம்பலம்

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த செல்லர் தில்லையம்பலம் நேற்று (30.06.2004) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் சறோசாதேவியின் அன்புக் கணவரும் சூரியப்பிரகாஷ் (ஆசிரியர் யா/ மிருசுவில் அ.த.க.பாடசாலை), காயத்திரி, அபிராஜ் (கோல்டன் ஈகிள் பாதுகாப்பு உத்தியோகத்தர்), ஜென்சி (யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவமஞ்சுளா (சமுர்த்தி உத்தியோகத்தர் தென்மராட்சி) அவர்களின் அன்பு மாமனாரும் நடராசா (ரைக்டர்காந்தி), துரையம்மா (ஆஸ்திரேலியா), திலகவதி (ஆஸ்திரேலியா), பரிமளம், றோசம்மா, ரதி (கனடா) ஆகியோரின அன்புச் சகோதரனும் பரமானந்தம், ஆனந்தராசா (ஜெயந்தி வெட்டிங் வேக்ஸ்- மந்திகை), சிவகுரு (ஆஸ்திரேலியா), கந்தையா (ஆஸ்திரேலியா), செல்வரத்தினம், நல்லையா, மகேந்திரலிங்கம் (கனடா), தங்கராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவகுமார் (ராஜன்எலக்ரோனிக அச்சுவேலி) அவரின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெற்று, பூதவுடல் பி.ப. 2.00 மணியளவில் அச்சுவேலி முழக்கன் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சுவேலி வடக்கு,*
*அச்சுவேலி.*

தகவல்:
சூரியப்பிரகாஷ்(மகன்).
(33672)(40)


**B.A. part 1**
**துரித மீட்டல் வரிவுரைகள்**
(சனி, ஞாயிறு)
ஆரம்பம் 02.07.2004
வெள்ளி 10.00 மு.ப.
நியூட்டன் யாழ்.நகர். (33641)(40)



ஆசிரியர் சேவைப் போட்டிப் பரீட்சை வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன
ஆசிரியர்: த.தவசேகர் B.Sc.Dip.in Ed.
சனி ஞாயிறு } 10.30 - 1.30 (S.L.T.)
★ 2-7-2004 வெள்ளி 10.30 - 1.30 இற்கும வகுப்பு நடைபெறும்.
★ வகுப்புகள் ஆரியகுளம் சந்திக்கு அண்மையில் DMI இல் நடைபெறும். (33369)(40)



**கிறிஸ்ரல் சென்ரர்**
**நெல்லியடி**
**O/L, O/L DAY Paper class**
கணிதம்: K. ஜோகேந்திரன்
சமூகக்கல்வி: A.E. ஜெயன்
ஆரம்பம்: 03.07.2004
பி.ப. 3 மணி.
(சி.35941)(40)


# மரண அறிவித்தல்

## கந்தையா சண்முகலிங்கம்



யாழ்ப்பாணம், கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பு, 22/17, அசரப்பா வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவராகிய கந்தையா சண்முகலிங்கம் அவர்கள் சனிக்கிழமை (26.06.2004) அன்று அகால மரணமானார்.

அன்னார் கந்தையா - விசாலட்சுமியின் அன்பு மகனும், பத்மனாவதியின் (பரா) அன்புக் கணவரும், சுதர்சினி (லண்டன்), ஸ்ரீதர்சன் (லண்டன்), சுஜாதினி (லண்டன்), பிரதீபன் (யா/இந்துக்கல்லூரி ஜி.ச.உ/த விஞ்ஞானம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ராஜ்குமார் (லண்டன்), அருள்சபேசன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும். அனிக்காவின் அன்புப் பேரனும், நவரத்தினம், திருப்பதி, காலஞ்சென்ற சிற்றம்பலம், சிவபாக்கியம், காலஞ்சென்ற சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரி, பராசக்தி, பராலஷ்மி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 03.07.2004 சனிக்கிழமை பி.ப 4.00 மணிக்கு நடைபெற்று நீர்கொழும்பு பொதுமயானத்திற்கு தகனக்கிரிகைக்காக பூதவுடல் எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அணைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*22/17,அசரப்பா வீதி,*
*நீர்கொழும்பு*
*T.P.: 03122-39143*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
(33674)(40-11-12)




**நவீன் செலூலர் போன் சொப்**
இல.01, நவீன சந்தை
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
கஸ்தூரியார் வீதியில் இயங்கிக்கொண்டிருக்கும் நவீன் செலூலர் போன் சொப் ஸ்தாபனத்தார் தமது ஓராண்டு பூர்த்தியை அண்மிக்கும் வேளையில் தமது இன்னுமோர் கிளையை இல.01, நவீன சந்தை ஆஸ்பத்திரி வீதியில் (றொலக்ஸ் ஹொட்டல் முன்பாக) இன்று (01.07.2004) வியாழக்கிழமை புதிய நேரப்படி 7.26 தொடக்கம் 8.56 வரையிலான சுபநேரத்தில கோலாகலமாக ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.
இவ்விழாவினை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
0777-265711
(33621)(37-11-12-40)
**நவீன் செலூலர் போன் சொப் ஸ்தாபனத்தார்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.07.2004இல அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கபூஷணி அம்மன்
# சிறப்பு மலர் – ௨004



## நின்பாதம் தொழுது நின்றோம்; அருளுமம்மா!

வேண்டு வார்க்கு வேண்டும் வரம்
விருப்புடனே அளிக்கும் அன்னை
மாண்புடனே உனதுபதம் பற்றி நிற்கும்
மக்கள் துயர் போக்கும் அம்மா
நீண்டகால தமிழரின் துயர் துடைத்து
நிலைபெறவே நல்வாழ்க்கை பலவும்
ஈண்டு நிதம் அளித்திடுவாய் இகமதிலே
நயினை நகர் உறையும் அம்பிகையே!

அலைகடல்சூழ் நயினைநகர் நாகம்மா!
ஆனியிலே உனதழகுக் கோலம் காண
அலையெனவே திரண்டிடுவர் அடியார் கூட்டம்
உனதருளை வேண்டி நிதம் அடியவர்கள்
தொலைதூரம் பார்க்காது துயர் போக்க
விரைந்திடுவர் விழாக்கோல நன்னாளில்
கலைந்திடுமே கர்மவினை உனைத் தொழுதுநிற்க
காப்பவளே நயினைநகர் அம்பிகையே!

பாவங்கள் போக்கிடுவாய் பராசக்தி அம்பிகையே
நின்பாதம் தொழுது நின்றோம் அருளுமம்மா
சாபங்கள் நீக்கியருள் உனைநாடி வந்தோர்க்கு
சஞ்சலமே இல்லை அம்மா உனைத்துதிக்க
கோபங்கள் குறைந்து குலவளம் சிறந்தோங்க
கொடுத்திடுவாய் குறைவின்றி பல செல்வம்
தீபங்கள் காட்ட தீராவினை அகற்றி
அருள்பவளே நயினைநகர் அம்பிகையே!

ஆக்கம்: செல்வா கிருபா (கனடா)

## நாயகியாள் நாகசக்தி



ஈரேழுலகமும் ஈன்றசக்தி
நாமேழு ஜென்மமும் போற்றும் சக்தி
நால்கடல் சூழ் நயினைநகர் நாகசக்தி
நான்மதத்தார் நயந்தேற்றும் நாகசக்தி
வேழமுடன் வேலவனை ஈன்றசக்தி
வேப்பமிலை தனில் வாழும் வீரசக்தி
நாகமது நாடோறும் போற்றுகின்ற
நாயகியாள் நாகசக்தி மூர்த்தம் தானே



- நயினை ப.குணேந்திரன்.

## "அம்பிகை தேரேறி வருகிறாள்"

"சித்திரத் தேரில் அமர்ந்து அன்னை இன்று
அருள் மழை பொழிந்து வருகிறாள்
சூழ்ந்திடும் அடியவர்கள் குறையெலாம் களைய
அபயக் கரம் காட்டி இன்று வருகிறாள்
கண்டவர் வியந்திடவே பொன்முத்து அணிகளுடன்
அழகு மலர் மாலைகளும் சூடியே வருகிறாள்
நாகம் பூசித்த செங்கமலப் பாதத்தாள்
சீர் நயினைப் பதியினிலே தேரேறி வருகிறாள்"

- நயினை விஜயன் -




நவீன மோஸ்தர்களிலான
ஆடை வகைகளுக்கும் சாறி பிளவுஸ்பீஸ்
வகைகளுக்கும் என்றும்
மங்காப் புகழ் பெற்றவர்கள்

**மகாநதி**



**புடவையகம்**

16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(பிளவுஸ் பீஸ்களுக்குப் பிரத்தியேகக் காட்சியறை உண்டு)

நானிலம்
போற்றித்
துதிக்கின்ற
நாகபூஷணித் தாயே
சரணம்!

(சி-35819)





நயினை நாகபூஷணியே! நமக்கருள வேண்டும் தாயே!!

**விக்னேஸ்வரா நகைப்பூங்கா**



தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்:

205/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
Tel: 021 4590022

103, 34D,
கந்தசுவாமி கோயில் வீதி,
வவுனியா.
Tel: 024 2221857, 024 [illegible]

457, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு – 06.
Tel: [illegible]

(C/35824)


## அம்பிகையே அருளீந்து எம்மினத்தைக் காப்பாய்!

அற்புதங்கள் பாடுகின்ற அடியவர்கள் ஒருபால்
அருமறைகள் ஓதுகின்ற அந்தணர்கள் ஒருபால்
கற்பூரச் சட்டியுடன் கன்னியர்கள் ஒருபால்
காவடிகள் எடுத்தாடும் காளையர்கள் ஒருபால்
பொற்பதமே போற்றிசெயப் பூத்தொடுப்போர் ஒருபால்
பொங்கியெழும் பக்தியினால் ஆர்த்தெழுவோர் ஒருபால்
அற்புதங்கள் நிறைந்தொளிரும் சித்திரத்தேர் ஏறி
அம்பிகையே அருளீந்து எம்மினத்தைக் காப்பாய்!

- கவிஞர் நயினை இராகுலன்.


பக்தரைக் காத்திடப் பவனிவரும் தாயே!
பாரினில் அமைதியை நிலைபெறச் செய்வாய் அம்மா!!



**ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசரீஸ்**

உங்கள் பண்டிகைகள் சிறந்திட........
சகலவிதமான கேக், ஐஸ்கிறீம், குளிர்பானங்களைத்
தயாரிக்க வேண்டிய பொருள்கள், பிஸ்கட் வகைகள்

* கைத்தொழில் விருத்திக்கான மூலப்பொருள்கள்
* சகலவிதமான எசன்ஸ் வகைகள்
* வாசனைத் திரவியங்கள்
* ஆயுர்வேத மருந்துச் சரக்குகள் அனைத்தையும்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
ஓரிடமாகப் பெற்றிட:

**ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசரீஸ்**

161A, கே.கே.எஸ். வீதி
(சத்திரத்துச் சந்தி), யாழ்ப்பாணம்.
T.P.: 2219

(சி-35883)





அம்பிகையே தாயே!
அருள்புரிவாய் நீயே!!



சிறுவர் சிறுமியர்களுக்கும்
ஆடவர்களுக்கும்,
நங்கையர்களுக்கும் ஏற்ற நவநாகரிக
ஆடைவகைகளுக்கும், புத்தம் புதிய சாறி
தினுசுகளுக்கும் நம்பிக்கையான
நல்லதொரு ஸ்தாபனம்:

**ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**



இணை:

**யோகாஸ் ஆடையகம்**

பிளவுஸ்பீஸ் பிரத்தியேகக் காட்சியறை,
17A, நவீனசந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.

(சி-35805)

18A, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.





தேரிலே
எழுந்தருளி
நேரிலே
வருந்தாயே!
வரமருள
வேண்டும்
நீயே!

சுபமுகூர்த்தப் பட்டுப்
புடைவைகளுக்கு
நவீன உலகுக்கு
அழகு சேர்ப்பது

நதிகளின் அழகுக்கு

**காவேரி**
**சில்க்ஸ்**

இல. 48, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 2333

(சி-35821)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயினை ஸ்ரீ நாக
# தேர்த்திருவிழா

## தேரேறிவரும் நயினை நாகபூஷணி கூடிவரும் பகையை அழித்திடுவாள்

"பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும் பேணலாலன்னை
பெற்றிடுவோர்
உற்றதாலன்னை விரும்பிய அனைத்தும்
உதவலாலன்னை என்றென்றும் பற்றதாங்கருணை
பொழிதலாலன்னை பராபரை நாகபு,ஷணியாள்"

நாகம் அணியும் பரமர் பாகமுறும் பார்வதி நாகத்தால் புஜிக்கப்பட்டமையால் நாகபு,ஷணி என நாமம் புண்டு நயினாதீவில் கோயில் கொண்டெழுந்தருளியிருந்து நல்லருள் சுரக்கின்றாள்.

காஞ்சியில் காமாட்சியாகவும், காசியில் விசாலாட்சியாகவும் மதுரையில் மீனாட்சியாகவும் விளங்கும் அம்பிகை நயினையில் நாகபு,ஷணியாய் வீற்றிருந்து ஆடிவரும் ஓடமதில் நாடிவரும் பக்தர்களுடன் கூடிநின்று அவர்களது துன்ப துயரங்களெல்லாம் ஓடிவிட அருள்சுரந்து - தேடிய சுக சௌபாக்கியம் அளிக்கின்றாள்.

தாயிடம் சேய்கள் வருவதற்குத் தங்கு தடையில்லை. எனவே, ஆனி மாதத்தில் நடைபெறும் ஆண்டு மஹோற்சவத்தில் அடியவர்கள் ஆயிரக்கணக்கில் கூடித் தொழுதும் அழுதும் அன்னையின் அடிபரவி நிற்பர். கோயிலின் அயலில் கூடிய கூட்டம் தலையா? கடல் அலையா எனப் பிரமிக்க வைக்கும்.

அலையலையாக அடியவர் அன்னையின் இருப்பிடம் அண்டி வருவதற்குக்காரணம் அருள்வளம் தூண்டியிழுத்து வேண்டிய வரமருளி துன்பதுயரங்களைத் தாண்டித் தகைமை பெறச் செய்வதேயாகும். தன்னை வந்து பரவும்படி பாம்புருக் கொண்டு பக்தர்களைப் பயம்கொள்ளச் செய்து ஆலயமடைந்து அன்புமிகு சீலமுடன் பரவவைக்கும் அன்னையின் அருட்திறன் வியப்புக்குரியது. அது மெய்சிலிர்க்க வைப்பது.

எனவே, பக்தியினாலும், பயத்தினாலும் பராபரையின் பாதார விந்தங்களைப் பரவிப் பயன் பெறுவர் பக்தர்கள்.

அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் இலங்கையின் சக்தி பீடமாக இலங்குவது நயினை நாகபு,ஷணி அம்மன் ஆலயம். இது புவனேஸ்வரி பீடம் எனப்படுகின்றது.

ஈஸ்வரி என்பது அம்பிகைக்கேயுரிய சிறப்புப்பெயர் எனலாம். பரமேஸ்வரி, மகேஸ்வரி, ராஜேஸ்வரி, புவனேஸ்வரி, இராசராசேஸ்வரி, நாகேஸ்வரி, அகிலாண்டேஸ்வரி என்னும் பெயர்கள் அம்பிகைக்கு உரியவை. புவனேஸ்வரி என்பது ஐஸ்வரியங்களைக் கொடுப்பவள் என்பது பொருள். சக்தியின் வடிவம் ஞானமே ஆகும். அதுவே பராசக்தியாகும்.

"சொல்லுக்கடங்காவே பராசக்தி சூரத்தனங்களெல்லாம்" என்பார் பாரதியார். அத்தகைய சக்தியை பக்தி செய்தால் சித்திபெறுவதுடன் அது முத்திக்கும் வழிவகுக்கும். சக்தி சக்தி என்று சொல்லு அவள் சந்நிதியிலே போய் நில்லு அப்பொழுது உன்னிடம் சக்தி பிறந்திடும். அது விந்தைகள் புரிந்திடும். சக்தியின் சர்வவல்லமையை இவ்வாறு பாடுகின்றார் சுத்தானந்த பாரதியார்.

"ஏக சக்தி இன்ப வரந்தருளும்
யோக சக்தி உயிர்க்குயிராகிய
போக சக்தி புனித பராசக்தி
நாகபூ ஷணி நாரணி அம்மையே"

உலக முதல்வியாகிய உமையை இலங்கைத்தீன் திலகமென விளங்கும் நயினையில் அமர்ந்திருந்து சகல செல்வங்களையும் அருளி நிலமிசை நீடு வாழச் செய்கின்றாள்.

இறை வழிபாடு நிறைவாக இருக்கவேண்டுமானால் அது பொது நலத்திற்கும், உலக அமைதிக்கும் அறைகூவலாக இருக்கவேண்டுமென்பதே துறை தோய்ந்த அறிஞரின் கருத்தாகும். அப்பொழுதுதான் வீடும், நாடும், கூடும் இன்பத்தில் பீடுமிக்குறும். அருள் வேண்டி வரும் அடியவரின் அயர்ச்சியை அகற்றும் பொருட்டு அமுதசுரபி அன்னதானச் சபையினர் அமுது படைக்கின்றனர். எனவே, வயிற்றுப் பசி தீர்வதுடன் வற்றாத அருளமுதும் கிடைக்கின்றன. பக்திவளம் மிக்க சக்தி பீடமும் நித்திய யாத்திரைத்தலமுமான நயினையம் பதியை இதய சுத்தியுடன் வாழ்வில் ஒருமுறையாவது தரிசிக்கவேண்டியது மனிதப் பிறவி எடுத்ததன் பெரும் பேறாகும்.

அனைவரும் ஆனந்தமாக வாழவும், அகிலமதில் அமைதியும் சமாதானமும் நிலைக்கவும் அன்னை நாகபு,ஷணியின் அடியிணைகளை அஞ்சலி செய்வோம். ★

**திருமதி பரமேஸ்வரி சிவராமலிங்கம்**

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி



எல்லாம்வல்ல ஆதிபராசக்தியானவள் ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையாக வீற்றிருந்து திருவருள் புரியும் திருத்தலந்தான் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் திருக்கோயில். உலகமாதாவான அம்பாள் காசியிலே விசாலாட்சியாகவும் மதுரையிலே மீனாட்சியாகவும் காஞ்சியிலே காமாட்சியாகவும் எழுந்தருளி அருள்பாலிப்பது போல அலைகடல் நடுவில் நயினையிலே நாகேஸ்வரியாக வீற்றிருந்து அருளாட்சி புரிகின்றாள்.

தம்மைக் கரங்கூப்பிச் சிரந்தாழ்த்தி வழிபடும் அடியார்களின் துன்பதுயரங்களையெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல விலகச்செய்து திருவருள் புரிபவள் ஸ்ரீ நாகபூஷணி அம்மை.

சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த ஆலயத்தில் இன்று அம்பிகைக்கு தேர்த்திருவிழா நிகழ்கிறது. தேரிலே ஆரோகணித்து வருகின்ற தேவியானவள் ஆணவத்தை ஒழித்து, அவலங்களையெல்லாம் அழித்து பக்தர்களைக் காத்து ரட்சிக்கும் தாயாகப் புறப்பட்டுவிட்டாள்.

அன்னையின் அருட்பிரவாகத்திலே மூழ்கித் திளைக்கும் அடியார்கள் அனைவரும் அம்பிகையின் திருவருட்கடாட்சத்தைப் பெற்று, சகல சௌபாக் கியங்களையும் அடைந்து வாழ நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவ நல்லைக்குருமணியின் பாதாரவிந்தங்களைப் பணித்து அருளாசி வழங்கிப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்யசுவாமிகள்**

*2 ஆவது குருமஹாசந்நிதானம்,*
*நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்..*

## தேசியம் காப்பாய்!

| | | | |
|---|---|---|---|
| வடம் தொட்(டு) | அடியார் | வலமிட | மாக |
| இடம்பிடித் | துன்தேர் | இழுத்துனைப் | போற்றி(த்) |
| திடம்பெற | அமுதம் | தின்ற | திழைப்பில் |
| நடந்தனர் | தாயே! | நாகாஸ் | வரியே! |
| வரந்தந்(து) | எங்கள் | வாழ்வுயர் | வெய்தி; |
| நிரந்தர | மான | விடுதலை | பெற்று |
| இதந்தரும் | இன்பத் | தமிழ்மொழி | செழிப்புற(ச்) |
| சுதந்திர | தாயகம் | தேசியம் | காப்பாய் |

- முருகனடியான்





நயினை நாகபூஷணியே அருள்புரிவாயம்மா!



இணைப்புக்களுடனான மேசைத் தொலைபேசி
விசேட கழிவில் விற்பனைக்கு!
24 மணி நேரத்தில் பக்கேஜ் இணைப்புக்களுடனான
மேசைத் தொலைபேசி எப்பிரதேசத்திற்கும்
பொருத்தித் தரப்படும்

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத் தருகின்றோம். அத்துடன் அன்ரனா மூலம் இயங்குகின்றது. மொபிடெல் ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்றுமுழுதான துணை நிறுவனம்.

I.D.D இணைப்புக்கள்
ஸ்ரீலங்கா ரெலிகொம்
கட்டணம் 25/=


HAND PHONE UNLOCK
செய்து தரப்படும்

மொபிடெல் ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்றுமுழுதான துணை நிறுவனம்

பவர் செல்லுலர் ட்ரேடிங் கம்பனி

SHOP
205/1 Kasthuriyar Road,
Jaffna Tel : 0712 399220

Office
185, 1st floor,
Kasthuriyar Road,
Jaffna Tel/fax : 021 2227070



நவீன அழகிய
சிங்கப்பூர் நகைகளுக்கு
நீங்கள் நாடும் நம்பிக்கையான
ஸ்தாபனம்

நயினை
நாகேஸ்வரித்
தாயே!
நமக்கு
அருள் புரிய
வேண்டும்
நீயே!

சிங்கப்பூர் ஜுவல்லறி

93, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Tel: 021.4590260, 0777-178864

(C/35815)(14-16)

தேரேறி வரும் தேவியே சரணம்

எழிலுறு தரமான அசல் தங்க நகைகளுக்கு நாடுங்கள்



சிறி மதனா நகை மாளிகை

155/M கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 7772, 0777 3000185

மதனா ஜுவல்லறி

177/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5526

(C/35822)(14-16)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கபூஷணி அம்மன்
# சிறப்பு மலர் – 2004



## நம்பியோர்க்கு நலம்பல நல்கும் நயினை நாகபூஷணி அம்பாள்

ஈழத்திலுள்ள புராதன சக்தி வழிபாட்டுத் தலங்களில மிகவும் பிர சித்தி வாய்ந்தது நயினை ஸ்ரீ நாக பூஷணி அம்மன் ஆலயமாகும். இங்கு எழுந்தருளியிருக்கும் அம் மையே நாகேஸ்வரி, புவனேஸ்வரி, பராசக்தி, மனோன்மணி, பரமேஸ் வரி என்று அறியப்பட்டவளாவாள். அறுபத்துநான்கு சக்திபீடங்களில் மணித்தீவில் புவனேஸ்வரிபீடம் (சௌந்தரியலகரி) எனக் கூறப்பட் டதும் இதுவே. ஒல்லாந்தரால் இக் கோயில் இடித்து அழிக்கப்படு வதற்கு முன் அனலைதீவிலுள்ள நாகதம்பிரானுக்குரிய அம்மன் இங்கு இருந்தது என நம்பப்படுவதால் இது நாகேஸ்வரம் எனவும் அழைக்கப்பட் டது என்பர்.

சிலப்பதிகாரகால செட்டியார் வியாபார நிமித்தம் இங்கு வந்து போயினர். அவ்வேளை அம்மனைப் பூசிக்கப் பூவுடன் கடல் வழியே வந்த நாகத்தைத் தாக்க முயன்ற கருடனை அவ்வழிவந்த செட்டி விலக்கி கப்பலிலிருந்த திரவியத்தைக் கரை சேர்த்து கோயிலை செப்பனிட்டு நயினாப்பட்டர் என்னும் பிராமண ரைப் பூசைக்கு நியமித்தார். அவர் பெயரால் இத்தீவு நயினாதீவு என அழைக்கப்பட்டது. இதன் அறிகுறி யாக பாம்பு சுற்றிய கல், கருடன் கல், என்பன இன்றும் கோயிலுக்கு வடக்கேயுள்ள கடலில் காணப்படு வதும் பதினோராம் உயர் திருவிழா வன்று வழிபாடு செய்யப்படுவதும் அத்தினங்களில் கருடன் காட்சி தருவதும் கண்கொள்ளா அருங் காட்சியாகும். அம்பிகை நாகத்தால் பூசிக்கப்பட்டதால் நாகபூஷணி என் னும் பெயரும் பெற்றாள்.

ஆலயத்தின் மூலஸ்தானத்தில் சுயம்புவாய் அமைந்துள்ள ஐந்து தலை சர்ப்பச்சிலையை ஆய்வு செய்த இந்திய புராதன சிற்பசாஸ் திர ஆய்வாளர் எம்.நரசிம்மன் இது பதினான்காயிரம் வருடங்கள் பழைமை வாய்ந்தது என்று கூறியுள் ளார். பண்டிட் சேதுராமன் இங்கு வந்து வழிபட்டவேளை மூலமூர்த்தி யாக சர்ப்ப உருவில் விளங்குவது நினைத்த வரம் அளிக்கும் மகா குண்டலினி சக்தியே என ஆணித் தரமாக எடுத்துரைத்தார். அன்னை யையும் சுயம்பு சர்ப்பத்தையும் இணைத்து வணங்கப்படுவது சிறப் பம்சமாகும்.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் ஆலயம் இடித்தழிக்கப்பட்டபோது அம்பாளின் திருவுரு வடமேற்கே நின்ற ஆலமரப்பொந்தில் மறைத்து வைத்துப் பூசித்தனர் என்பர். பின் னர் வழிபடுவோரின் உதவியுடன் ஆலயம் புதிதாக அமைக்கப்பட்டு பெருப்பிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. 1957 இல் பெரும் பொருட் செலவில் அழகிய சிற்பத் தேர் அமைக்கப்பெற்றது. பத்து நாள்கள் நடந்துவந்த திருவிழா 1960 ஆம் ஆண்டு முதல் பதினைந்து நாள்கள் நடைபெற்று வருகின்றது.

அன்னையின் அருளாசி வேண்டு வார்க்கு வேண்டியாங்கு கிடைப்ப தால் கோடானகோடி பக்தர்கள் தினமும் ஆலயத்துக்கு வந்தவண் ணம் உள்ளனர். அவர்களுக்கு ஆலயநிர்வாகத்தினர் தினமும் அன்னதானம் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. உயர் திருவிழாக் காலங்களில் பக்தர்களுக்கு பசிப்பிணி போக்கும் நோக்கோடு 1960 இல் ஊர்ப்பெரியவர்களால் உருவாக்கப் பட்ட அமுதசுரபி அன்னதான சபை யினின் சிறப்பான சேவை மனங்கொள் ளத் தக்கதாகும்.

" சக்தி சக்தி சக்தி என்றே சொல்லு
வரும் சஞ்சலங்கள் யாவினை யும் வெல்லு"

அம்பிகையின் அடிபணிந்து துன்பம் நீங்கிச் சுகம் பெறுவோ மாக.

**சோ.தில்லைநாதன்.**




நயினை நாகேஸ்வரியே அருள்புரிய வேண்டும் அம்மா!
✦ காலத்தால் அழியாத ✦ கற்பனைக்கும் எட்டாத
✦எழில் குன்றா அற்புதப் படைப்புக்கள்
✦ பார்ப்பவர் கண்களில் பளிச்சிடும் அசல் ரகங்கள்,
குறிப்பிட்ட தவணையில் தரமாகவும் நியாயமாகவும்
பெற்றிட நாடுங்கள்:

சாரங்கன் நகைமாடம் அன்ட் சென்ரர்
இல. 45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 222 6059

சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 222 2480,
Fax: 6972

(சி-35825)(14-16)



சகலவிதமான புத்தம் புதிய
புடைவை வகைகளுக்கு
நித்தம் நீங்கள்
நாடவேண்டியது

த.சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்

அலை கடல் நடுவே
ஆலயத்தில் அமர்ந்து
அருள்புரியும் தாயே!
சரணம்! சரணம்!

21, சிறப்பு அங்காடி,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021-2826

(சி-35803)(32-14-16)

பழைய நினைவுடன் புதிய அறிமுகம்!

வடபகுதி மக்களின் மனம் நிறை நாயகன்

ஏசியா

THE ASIA CYCLE

உறுதியான உழைப்பு
நீடித்த வாழ்வு
பயணத்தில் மகிழ்ச்சி

இதுவே ஏசியாவின் தனிச்சிறப்பு



ஏசியா
மீண்டும்
தெருவெங்கும்
வலம்
வருகின்றான்

சிறப்புச் சலுகை
புதிய சைக்கிள்
புட்டு, கரியல்,
ஸ்ராண்ட்.........

யப்பான் – இந்தியா கூட்டுருவாக்கத்தில்
விளைந்தஏசியா சைக்கிள்களை
சிறப்புக்கழிவு விலையில்
நீங்களும் பெற்றுப் பயன்பெறுங்கள்.

ISO 2001-4000 & ISO 12001
தரச்சான்றிதழ் பெற்ற
சைக்கிள்கள் இப்போது உங்கள் கையில்

யாழ்.மண்ணில் உங்கள் தேவைகளுக்கு:

இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் T.P. 021 222 2988

வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்
79, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 2905

ஈஸ்வரன் ரேடர்ஸ்
69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 2813

சுப்பிரமணியம் அன் கோ
காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

முருகன் களஞ்சியம்
167, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P 6968

அற்லஸ் [illegible] (PVT) LTD
77, கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம். T.P 021 222 2557



வடபகுதியில்
அறிமுகப்படுத்துவோர்:
ஏசியா இன்டஸ்ரீஸ்
ASIA INDUSTRIES
ISO - 2001 - 4000 &
ISO 12001 CERTIFIED
13/3 Mathura Road,
Faridabad - 142004,
Haryana india.

(C35546)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயினை ஸ்ரீ நா

# தேர்த்திருவிழா




வெளிநாடுகளில் வாழும் உங்கள்
அன்பு நெஞ்சங்களுடன்
உங்கள் இல்லங்களில் இருந்தவண்ணமே
✶ உரையாடுவதற்கு நிறைந்த சேவை ✶ குறைந்த கட்டணம்
✶ துல்லியமான ஒலி ✶ துரித சேவை

WESTERN UNION MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் பணப்பரிமாற்றம்

நயினை
நாகபூஷணி
திருத்தாள் போற்றி!
போற்றி!

சகல நாடுகளுக்குமான Internet மூலம்
தொலைத்தொடர்பு சேவை! இன்னும் பல சேவைகள்!
இத்துடன் டிஸ்ரிபியூட்டர்.

SRIMURUGAN TELE COMMUNICATION
AGENCY POST OFFICE

303, K.K.S. ROAD,
JAFFNA.
T.P.: 021 222 2670 FAX: 021 222 3214
E-MAIL: del.smskr@eureka.lk
(சி-35817)





பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!
உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களும் ஒரே கூரையின் கீழ்
பெற்றுக்கொள்ளப் புத்தகக் கடல் 10%-50% கழிவு வழங்கப்படும்.
ஒரு சில மருத்துவ, பொறியியல், கணனிப் புத்தகங்கள், ஆங்கிலம் கற்றுக்கொள்ள
பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சில புத்தகங்களும், உபகரணங்களும்
ரூபா 10/= - ரூபா 100/= வரை பெற்றுக்கொள்ளலாம். இவை தவிர, பாடசாலை
அலுவலக உபகரணங்களும் பாடசாலை அழிபொருள்கள், மூலப்பொருள்களும்
குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகளுக்கு இலவச விநியோகம்.
உங்கள் தேவை எதுவானாலும் பூர்த்திசெய்யத் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

அறிவுக்கண் திறந்து
அருள்புரியும் தாயே!
நலிவுற்றிடாமல்
நம்மைக்
காத்தருள்வாயே!

ஆல்சிலோன்
டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
Tel.: 021 222 5542
(சி-35818)



அம்பிகையே தாயே! தேரேறி வருக!
உங்கள் இளமைக்கு மேலும் மெருகூட்டும்
அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான ஸ்தாபனம்:

[illegible]
ஜுவல்லர்ஸ்

இல. 32, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
சி-35800)(32)

அம்பிகையே
நயினை
நாகேஸ்வரியே!
நம்பிவந்தோம்
நமக்கருள்
புரிவாய் அம்மா!









நவீன டிசைன்களில் பலரக சாறி வகைகள், சல்வார் கமீஸ்
வகைகள், கவுண் வகைகள், கோக்கோ ரவுசர், ரவுசர் துணிவகைகள்
ஜம்பர் வகைகள், சேட், ரீசேட், கோட், சூட், பட்டுச்சேலைகள்
என்பனவற்றின் அதிநவீன புதிய டிசைன்களை உடனுக்குடன்
பெற்றுக்கொள்ள முற்றிலும் குளிரூட்டப்பட்ட

மிலேனியம் ஃபெஷன்
அன்
ஷோரூம்

அம்பிகையே தாயே!
அருள்வாய் தாயே!
T.P.: 0777-311486
10,11, மின்சார நிலைய வீதி.
(மலாயன் கபே முன்பாக), யாழ்ப்பாணம். (சி-35820)(32)




## வாழ்வளிக்க வழி சமைப்பாய்!

அலைகடலின் நடுவினிலே ஆழத் தடம்பதித்து
அல்லலை யகற்றும் அகிலாண்ட நாயகியே
நிலையாகவே நீளும் நிர்மலமே நின்னருளால்
விலைபோகா தெம்மினத்தை விளங்கிட நீ வைத்திடம்மா!
தலையான எம் வீரம் தரணியிலே வேரூன்றி
தவறான எண்ணங்கள் தர்ணியில் நீறாக
கலைமேவும் எழில்கொஞ்சும் தேரேறி வந்து
களிப்புடனே வாழ்வமைய வழி சமைப்பாய்!

- கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம் -

## கீர்த்தனை

இராகம்: ஹரஹரப்பிரியா தாளம்: ஆதி

பல்லவி

நயினையின் நாயகியே - நாக
பூஷணியே நலம் தருவாய் அம்மா
(நயினை)

அனுபல்லவி

கதி நீயேயென சரணமடைந்தேன்
கனகபூஷணியே கடைக்கண் பாராய்
(நயினை)

சரணம்

பூக்கொண்டு நாகமது பூஜித்த தாயே
பாக்கொண்டு உனைப்பாட வரம் அருள்வாயே
நாரணன் சோதரி நாகேஸ்வரியே - சகல
காரண காரணியே பரிபூரணியே புவனம் புகழ்
(நயினை)

- திருமதி ம.நவரத்தினம்.

## அருட்"பா" அருளாயோ...?

பல்லவி

சித்தம் இனிந்துருகும் சீர்வனக்காட்சி - இன்று
சித்திரத்தேரினில் எம் சிரந்துளிரத் திருக்காட்சி

அனுபல்லவி

நித்தம் நினைந்து நின்னடியார் குறை தீர்ப்பாய் - நயினையில்
நித்திய சொற்பனங்கள் நிறைவேற்றிக் காண்பாய்!

சரணம்

அஞ்சலென வருவோர்க்கு அடைக்கலம் தருவாயே
பஞ்சமதைப் போக்கிப் பிணியகலப் பாராயே
நெஞ்சத்தில் எந்நாளும் நினைந்துருக நிற்பாயே
சஞ்சலங்கள் தீர்ப்பாய் உன் சந்நிதியே சரணாகதியம்மா!

- என்.பிறேமசீலன்.






. தேரேறி வரும் தேவியே! சரணம் அம்மா!
நியூ நிரைஞ்சனாஸ்
நகைமாளிகை
அசல் 22 கரட்டில் தங்க நகைகளைக் குறித்த
தவணையில் நம்பிக்கையுடன் செய்து பெற்றிட
நாணயமான ஸ்தாபனம்.
83/1, கஸ்தூரியார் வீதி,
செம்மாதெரு; யாழ்ப்பாணம்.
071 2270458
077 6070678
(சி-35823)







அழகிய நவீன
டிசைன்களிலான தங்க நகைகள்
தரமாகச் செய்து
பெற்றுக்கொள்ளச் சிறந்த இடம்:
சிறிமாரி
நகைமாடம்
அலைகடல்
கடந்து
அருள்வேண்டி
வந்தோம்!
அருள்புரிய
வேண்டும்
நாகபூஷணித்
தாயே!
49 (187), கே.கே.எஸ். வீதி
(சத்திரத்துச் சந்திக்கு அருகில்),
யாழ்ப்பாணம்.
T.P.: 7164
(சி35816)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org